# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை (09.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 044


# கொலை, கொள்ளைகளை நிறுத்த விசேட ஏற்பாடு உடன் நடைமுறைக்கு

## யாழ்ப்பாணத்தில் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜனவரி9

குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களை நிறுத்த விசேடஏற்பாடுகள் உடன் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்று உறுதியளித்துள்ளார் பொலிஸ்மா அதிபர்.

இதற்காக பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் கலாநிதி மஹிந்த பாலசூரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த பொலிஸ்மா அதிபர் பொதுமக்களின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின் போது மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்படும் என்றார் அவர்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் பொலிஸ்மா அதிபர் பொது மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்தார். பொலிஸ் மா அதிபருடன் வடக்குப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி அமரக்கோன், வடக்கின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா

(32ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு நிலைமையைக் கருத்திற்கொண்டு படையினர் - பொலிஸார் கூட்டு ரோந்து

### தளபதி ஹத்துருசிங்க அறிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜன.9

குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக படையினரும் பொலிஸாரும் இணைந்து ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் தொடரும் வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக தளபதியிடம் கேட்டபோது -

அண்மைக் காலமாக இடம்பெறும் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் போன்ற சம்பவங்களால் மக்கள் அச்சத்தில் (32ஆம் பக்கம் பார்க்க)

## குழம்பியது தமிழ்க்கட்சிகளின் அரங்கம்

கொழும்பு, ஜன.9

பத்துத் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து அமைத்துள்ள தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இருந்து ஈ.பி.டி.பி. வெளியேறுகிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் இரவு தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இடம்பெறும் வீ.ஆனந்தசங்கரி, எம்.கே.சிவாஜிலிங்கம், த.சித்தார்த்தன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.இராசமாணிக்கம்

(32ஆம் பக்கம் பார்க்க)

### மக்களுடன் கலந்துரையாடி

## வன்னியில் வேட்பாளர்களைத் தெரிய நான்கு பேர் கொண்ட குழு நியமனம்

வவுனியா,ஜன.9

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து மக்கள் கருத்தை அறிவதற்காக விசேட கூட்டம் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வவுனியாவில் நேற்று நடத்தியது.

மக்களுடன் கலந்துரையாடி வேட்பாளர்களைத் தெரிவு செய்ய நால்வர் கொண்ட குழுவும் அங்கு தெரிவுசெய்யப்பட்டது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இக் கூட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சமகாலப் பிரச்சினைகள் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினர்.

அரசுடன் நடக்கும் பேச்சு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக மக்களிடம் கருத்துக் கேட்டறியும் வகையில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்று அங்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(32ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராய்வாசியான மூன்றாவது நபரும் காணாமற்போய்விட்டதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.9

உரும்பிராய் சந்தியில் தொழிலில் ஈடுபட்டுவந்த செருப்புத் தைக்கும் தொழிலாளி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் காணாமற்போயுள்ளார் என்று அவரது மனைவி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

உரும்பிராய் மேற்கு, வைத்தீஸ்வரா வீதியைச் சேர்ந்த சின்னத்துரை குகதாசன் (வயது 47) என்ற குடும்பஸ்தரே காணாமற் போயுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழமைபோல் இவர் தமது வேலையைச் செய்துகொண்டிருந்த போது திடீரென முற்பகல் 11.30 மணியில் இருந்து காணவில்லை என்றும் நேற்றிரவு வரை அவர் வீடு திரும்பவில்லை என்றும் அவரது மனைவி பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் உரும்பிராயில் கடந்த சில தினங்களில் மட்டும் மூன்று பேர் காணாமற்

(32ஆம் பக்கம் பார்க்க)


நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....

சொல்பெக் EW 050



Hayleys

047, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

021 2221292


### அரசியல் தீர்வு குறித்து ஆராய

## அரசு - கூட்டமைப்பின் பிரதிநிதிகள் முதன்முறையாக நாளை கூடுகின்றனர்

கொழும்பு, ஜன.9

அரசியல் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள அரசு - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணைந்த குழு நாளை திங்கட்கிழமை முதன் முறையாக கூடவிருக்கிறது.

அரசியல் தீர்வு மற்றும் மக்களின் மீள்குடியமர்வு ஆகியன தொடர்பாக அரசு மற்றும் கூட்டமைப்பு பிரதிநிதிகள் அடங்கிய இரு குழுக்களை அமைக்க அரசாங்கம் இணங்கியிருந்தது.

இதன் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது குழுக்களின் பிரதிநிதிகளின் விவரங்களை அரசிடம் சமர்ப்பித்திருந்தது.

அரசியல் தீர்வு தொடர்பான குழுவுக்கான பிரதிநிதிகளை அரசு நியமித்ததை அடுத்து அக்குழுவின் முதலாவது கூட்டம் நாளை இடம்பெறவுள்ளது.

அரச தரப்பில் முன்னாள் பிரதமரும் சிரேஷ்ட (32ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டின் முன் வெள்ளை வான் நிற்க தலைதெறிக்க ஓடினார் வர்த்தகர்!

### குடாநாட்டின் காலச் சூழல் இதுதான்!!

யாழ்ப்பாணம்,ஜன.9

வீட்டின் முன் பக்கத்தில் திடீரென வந்துநின்ற 'ஹைஏஸ்' வாகனத்தைக் கண்டு வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து ஓடினார் வீட்டுக்காரர்!

திகிலடைந்து கண்மண் பாராது ஓடிய அவரது காலைப் பதம் பார்த்தது உடைந்த போத்தல்.

குடாநாட்டில் வெள்ளைவான் பீதி மக்களை எவ்வாறு அச்சத்தில் உறையவைத்துள்ளது என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

இந்தச் சம்பவம் யாழ். நகரில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

போத்தல் ஓடு (பிசுங்கான்) வெட்டியதில் அவரது கால் பாதம் பிளந்த நிலையில் தலைதெறிக்க ஓடிய அவர், அயல் வீடொன்றில் அடைக்கலம் புகுந்தார். அவர்கள் காயமடைந்தவரை இரத்தம் ஓடஓடத் தனியார் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றனர். (32ஆம் பக்கம் பார்க்க)


NIBM BUILDING COMPETENCIES

Jaffna யாழ்ப்பாணம்

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருக்கும் மாணவர்களுக்கான கணனிக் கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

T.P No- 021 222 0360 / 0361 / 0362

National Institute Of Business Management
No 40 College Road (opposite to Jaffna hindu play ground)
jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இராணுவ அரசை நிறுவ உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.முயற்சி

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு.ஜன.9

இலங்கையில் இராணுவ அரசை உருவாக்கும் திட்டத்தின் முதற்கட்டமாகவே பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க அறிவித்துள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கம் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டைப் படிப்படியாகக் குறைத்து வருகின்றது.

ஆனால், போர் முடிவுக்கு வந்த பின்னரும் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து வருகிறது.

ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் பல்வேறு அரச நிறுவனங்களிலும் முக்கியமான பொறுப்புகளில் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இவையெல்லாம் இலங்கையை இராணுவ மயப்படுத்தும் திட்டமாகவே உள்ளன.

மூன்று வாரங்களில் இராணுவத்தினரிடம் தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பல்கலைகழக மாணவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக மாறுவார்கள் என்று அமைச்சர் எஸ்.பி.திச நாயக்க எவ்வாறு எதிர்பார்க் கிறார்.

இராணுவப் பயிற்சி பெற்ற இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் தான் இப்போது அதிகளவிலான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். முன்னாள் படையினர் ஒழுக்க மற்றவர்களாக இருக்கும்போது இந்த இராணுவப் பயிற்சியை வழங்குவதன் மூலம் எப்படி மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக உருவாக்க முடியும் என்றும் அனைத்துப் பல்லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொதுச் செயலர் உதுல் பிறேமரட்ண கேள்வி எழுப்பியுள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மூன்று வாரகால கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வீதிகளில் பெண்களிடம் சேஷ்டைவிடும் இளைஞர்கள் 'உள்ளே' தள்ளப்படுவர்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

வீதிகளில் நின்று இளம் பெண்பிள்ளைகளுடன்சேஷ்டைவிடும் இளைஞர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான கலந்துரையாலொன்று வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் வீதிகளில், சந்திகளில் குழுக்களாக நிற்கும் இளைஞர்கள் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் போகும் போதும் வரும்போதும் அசிங்கமான வார்த்தைகளினால் பேசுவதுடன் சேஷ்டைகள் புரிகின்றனர்.

அவ்வாறான அநாகரிகச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்களைப் பிடித்து சட்டத்தின் முன்நிறுத்துவோம். குறைந்தது இருவாரங்களுக்காவது 'றிமாண்ட்' இல் வைப்போம் நாங்கள் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கப் போவதில்லை. உடனடியாகவே நடவடிக்கையை மேற்கொள்வோம் - என்றார். (ஓ-15)

## பலமாகிறது உறவு....



கடற்பயணம்: இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் கைச்சாத்திடப்பட்டது. துறைமுக, விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் சுஜாதா குரே, இலங்கைக்கான இந்தியத் தூதர் அஷோக் கே. காந்தா ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

# ஒன்றுபட்ட தேர்தல் கூட்டணி தமிழ்க் கட்சிகள் முயற்சி

கொழும்பு,ஜன.9

எதிர்வரும் உள்ளளூராட்சி சபைத் தேர்தல்களில் ஒன்று பட்ட தமிழ்க் கட்சிகளின் கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சியில் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுக்கிடையே தொடர்ச்சியாக பேச்சு வார்த்தை இடம்பெற்று வருகிறன. இதனை தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் உறுதிப்படுத்தினார்.

புளொட் அமைப்பின் தலை வர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

அரசு சாராத கூட்டணி ஒன்றை அமைத்துத் தேர்தலைச் சந்திக்கும்போது கூடுதல் இடங்களைத் தமிழர் தரப்புப் பெற வாய்ப்பு உண்டு என்பதால் நான்கு கட்சிகளின் கூட்டணியுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணைந்து போட்டியிடுவது நல்லது என்று சித்தார்த்தன் தெரிவித்தார்.

இது தொடர்பான முடிவை மூன்று நாள்களில் தெரிவிப்பதாக மாவை தெரிவித்தார்.

தீர்வு தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரங்கமும் இணைந்து அமைத்துள்ள உப குழுவை விரைவாகக் கூட்டுவது என்றும் இருவரும் இணக்கம் கண்டனர். (த)

# மாநகரசபை மாதிரி பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.மாநகர சபையின் புதிய மாதிரிப் பாலர் பாடசாலை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

'ஹேமாஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் 'யுனொப்ஸ்' அமைப்பின் நிதி உதவியுடனும் நல்லூர் சங்கிலியன் வீதியில் கட்டப்பட்ட இந்தப் புதிய கட்டடத் திறப்பு விழா யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவும் சிறப்பு விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் எம்.எல்.ஏ. ஹிஸ்புல்லா, மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, செயலாளர் இரா.இரத்தினசிங்கம் ஆகியோரும் உரையாற்றுவார்கள். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-7)

# சகல மாணவர்களுக்கும் மதிய உணவு

கொழும்பு,ஜன.9

நாட்டின் சகல பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவை விநியோகிக்கும் தேசிய வேலைத் திட்டத்தை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

சகல அரச பாடசாலைகளும் இந்த திட்டத்தில் உள்ளடக்கப்படும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன் முதல் நடவடிக்கை எதிர்வரும் 13 ஆம் திகதி கண்டி மாவட்டத்தில் உள்ள மீ முரே மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ன தலைமையில் இடம்பெறும் ஆரம்ப நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட்ட அர சாங்கத்தில் பல உயர்மட்ட தரப்பினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் ஆரம்பமாகும் மதிய உணவுத்திட்டம் கிரமமாக நாட்டின் ஏனைய பகுதிப் பாடசாலைகளுக்கும் வியாபிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (த)

# அம்பாந்தோட்டை துறைமுக நடவடிக்கைகள் விஸ்தரிப்பு

கொழும்பு,ஜன.9

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் தலைவர் பிரியத் விக்ரம தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் துறைமுகத்திற்கு வரும் வெளிநாட்டு கப்பல்களுக்கான எரிபொருள் மற்றும் நீர் விநியோகங்களை சீராக மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். இந்தபணி எதிர்வரும் மே மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்த விநியோக நடவடிக்கைகளுக்காக 80 ஆயிரம் மெற்றிக் தொன்பிரமானத்தை கொண்ட எண்ணெய் தாங்கி கப்பல் ஒன்று தற்போது கட்டப்பட்டு வருவதாகவும் அவர் அறிவித்துள்ளார். எண்ணெய் தாங்கியினை நங்கூரமிடுவதற்கான புதிய இறங்கு துறைஒன்றின் பணிகளும் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் நிறைவடையும்என அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அம்பாந்தோட்டை துறைமுகம் கடந்த நவம்பர் மாதம் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபஷவினால் திறந்து வைக்கப்பட்டது. (த)

# குரும்பசிட்டியில் கட்டட எச்சங்களை அகற்றுவதில் சமூக விரோதிகள் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.9

குரும்பசிட்டியில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் எஞ்சியுள்ள கட்டடங்களின் எச்சங்களை சில சமூக விரோதிகள் வாகனங்களில் எடுத்துச் செல்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை சொந்த இடத்தில் இயக்குதவதற்காக பலாலி வீதியில் அமைந்திருந்த முன்னரங்க நிலை வயாவிளான் சந்திக்குப் பின்னகர்த்தப்பட்டது.

இதன்காரணமாக குரும்பசிட்டியில் 150 குடும்பங்கள் வாழும் பகுதியும் விடுவிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பிரதேச மக்கள் கடந்த வியாழக்கிழமை தமது வீடுகளைப் பார்க்க அங்கு சென்றனர். தமது வீடுகளின் நிலையைக் கண்டு அந்த மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.



அதற்கு மேலாக அவர் களுக்கு இன்னுமொரு அதிர்ச்சி காத்திருந்தது. அந்தப் பகுதியில் உழவு யந்திரங்கள், மண் தோண்டும் இயந்திரங்கள் ஆகியவற்றுடன் சமூகவிரோதிகள் அங்கு நின்றதை மக்கள் அவதானித்தனர்.

அங்கு எஞ்சியுள்ள கட்டடங்களின் எச்சங்கள், மரங்கள், ஓடுகள், கதவுகள், யன்னல்கள் ஆகியவற்றை அந்தச் சமூக விரோதிகள் வாகனங்களில் ஏற்றிச் செல்வதைகண்டு மக்கள்மனவேதனை அடைந்தனர்.

பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து இந்த சமூக விரோதச் செயலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்கின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புற நடந்த பவள விழா



நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விழாநாயகனை பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கிறார்.



விழாநாயகர் மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகிறார்.



விழாவில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கத்தின் பவளவிழா நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரியில் பஞ்சலிங்கம் கேட்போர் கூட அரங்கில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க.தேவராஜா தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிர மணிய சுவாமி கோயிலில் பூசை வழிபாடுகள் இடம் பெற்ற பின்னர் விருந்தினர்கள் கொக்குவில் இந் துக் கல்லூரி மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றப்பட்டு தவில், நாதஸ்வரம் முழங்க விழா ஆரம்பமானது. அதன் பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம் பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகில தாஸ் நிகழ்த்தினர்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் கிருபாகர சிவசுப்பிர மணிய சுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ க.சிவதாசக் குருக்களும் நிகழ்த்தினார்.

வாழ்த்துரைகளை வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், பழைய மாணவர்கள் உட்படத் திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஓ-15)

# இலங்கை இளைஞர் நாடு கடத்தப்படுவதை தடுக்குமாறு பிரிட்டிஷ் எம்.பிக்கு மகஜர்

லண்டன்,ஜன.9

பிரிட்டனில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரை நாடு கடத்துவதற்கு எதிராக அவரின் நண்பர்கள் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உதவியை நாடியுள்ளனர்.

26 வயதான சிவராஜா சுகந் தன் எனும் இந்த இளைஞர் 1999 ஆம் ஆண்டு தனது 15 ஆவது வயதில் பிரிட்டனுக்குச் சென்றார். 2003 ஆம் ஆண்டு அவரின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு அவரின் மேன்முறையீடும் நிராகரிக்கப்பட்டது.

தற்போது தடுப்பு முகாமொன்றில் வைக்கப்பட்டுள்ள அவர் பிரிட்டனிலிருந்து நாடுகடத்தப்படும் நிலையை எதிர்நோக்குகின்றார்.

பிரிட்டனில் இரு பிள்ளைகளைக் கொண்டுள்ள சுகந்தனுக்கு பிணை வழங்குவது தொடர்பான விசாரணை முறையாக நடைபெறவில்லை என அவரின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

பிரித்தானிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு முன்வைத்த வாதங்களின் பிரதி சுகந்தனுக்கு வழங்கப்படவில்லை எனவும் அவருக்கு சட்டத்தரணியொருவர் வழங்கப்படவில்லை எனவும் அவரின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனனர்.

இந்நிலையில் சிவராஜா சுகந்தனின் விடுதலையை வலியுறுத்தி 800 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று பிரிஸ்டல் மேற்கு தொகுதி லிபரல் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் வில்லியமிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஸ்டீபன் வில்லியம் எம்.பி. கூறுகையில் இவ்விடயம் குறித்து ஏற்கெனவே குடிவரவு அமைச்சர் டேமியன் கிறீனின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் மீண்டும் தான் அதை செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சுகந்தன் பிரிட்டனில் இரு பிள்ளைகளைக் கொண்டிருப்பதும் அவர் குறிப்பிடத்தக்க காலம் அங்கு தங்கியிருப்பதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் வில்லியம் தெரிவித்துள்ளார். (ஏ)



# சந்தியடிச் சோமு

## ஆண்டுத் துவசம்

மாசியிலதான் பனி மூசிப்பெய்யுமெண்டு சொல்லுவினம். இப்ப குளிரும் மழையும் மாறிமாறி வந்ததால இந்த கிழட்டு உடம்பு தாங்குதில்லை. ஒரு காலமும் இல்லாத மாதிரி சளியும் இழுப்பும் வந்து ஆஸ்பத்திரியில மறிச்சு பம் அடிச்சதால போன கிழமை உங்களைப் பார்க்க முடியேல்லை. மூச்சு எடுக்கேலாதளவுக்கு இழுப்பு.

காலம் தான் கெட்டுக்கிடக்குதென்றால் காலநிலையும் கெட்டுப்போச்சு. ''காலம் கலிகாலமாகிப் போச்சடா ....'' எண்டு பாடுறது எவ்வளவு சரியா இருக்குப்பாருங்கோ! நேற்றுத்தான் பின்னேரப்பாட்டில சந்திப் பக்கம் போனனான். கனகண்ணை, கதிரண்ணை எல்லாரும் இருந்தவை. எல்லாரும் சனம் பீதியோட இருக்கிறதப் பற்றித்தான் கதைச்சினம்.

கதிரண்ணை சொன்னார் போன கிழமை சொந்தக்காற வீட்டொண்டுக்கு வரணிக்குப் போனவராம் அங்க ஆறு மணிக்குப் பிறகு சனம் றோட்டுக்குத் தலையே காட்டுறதில்லையாம் எண்டு சொன்னார். ஒரு வகையான ஊரடங்கு சட்டம் மாதிரித்தானாம் ஊர் கிடக்காம்.போன கிழமை பத்துபேர் கத்தியல் வாளுகளோட ஊருக்க உலாவினவையாம் அவை சகோதர மொழி (..? அதென்ன கோதாரி என்று கேளாதேங்கோ) பேசினவையாம். சனங்கள் எல்லாம பொலிஸுக்குச் சொல்ல அந்தாக்களைத் திடீரென்று காணேலையாம். போதாக்குறைக்கு தென்பகுதி பஸ்சுகளில வாறவைக்கு வீடுகளில இடம் குடுக்கச்சொல்லியும் சனங்களுக்கு ஒரே கரைச்சலாம்.

ஓட்டுக்க ஒண்டு கலக்க வேணுமென்ற நோக்கம் போல இருக்கென்று சனம் புழுங்குதாம் பாருங்கோ!

கனகண்ணைக்கு உந்த விசயங்களில ஒருத்தரிலயும் கோபம் இல்லை. எல்லாக் கோவமும் உந்த துவக்கிலதான். ''சனியன் அதில ஒண்ட வாங்கிச் சும்மா எண்டாலும் சறத்துக் சொருகுவம் எண்டு பாக்கிறன் கிடைக்க மாட்டனெண்டுது'' எண்டு சொல்லுற அளவுக்கு அந்தாளுக்கு எரிச்சல். எல்லாத்துக்கும் காரணம் இல்லாமலே!

கோயிலுகளில பலாத்காரமா தென்பகுதிக்காரரை நிப்பாட்டிறதுக்கு, சனங்களின்ர வீடுளிலயும் அவையை நிப்பாட்டிறதுக்கு, பேமன்ட் யாபாரிகளுக்கு இடம் பிடிச்சுக் குடுக்கிறத்துக்கு, களவெடுக்கிறத்துக்கு, கொள்ளையடிக்கிறத்துக்கு, கடத்துறத்துக்கு, மிரட்டுறத்துக்கு எண்டு எத்தின காரியத்துக்குத்தான் உந்தத் துவக்கு பயன்படுது பாருங்கோ.

இதுகளைக் கேட்டுக் கொண்டிருந்திட்டு சந்திக் கடைக்காரப் பெடியன், ''இதைவிட அநியாயம் வியாபாரிமாரிட்ட பழைய பாணியில வரி வாங்கப் போகினமாம்'' எண்டான். ''வருமான வரி கட்டுறது வழக்கம்தானே அதுக்காகத் தானாக்கும்'' எண்டு நான் சொல்ல கடைக்கார மனிசன் என்னைக் கெட்ட வார்த்தையால பேசிப்போட்டுது. உதுகளுக்கெல்லாம் ஐடியா குடுக்கிறது முன்னம் கப்பலோட்டின யாவாரிமார்தானம் எண்டும் அந்தாள் கண்டபடிக்கு ஏசிப்போட்டுது. ''புலியக்கெடுத்து முடிஞ்சுது இனி உவை தங்கட சுயநலத்துக்காக மற்றவையையும் கெடுக்கப் போயினம்'' எண்டார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த எங்கட ஊர் விதானையார், ''உந்த நிலையில தேசிய பாதுகாப்பு தினத்தில அமைச்சர் கப்பம், கொள்ளை இவற்றை இனிவரும் காலத்தில தவிர்ப்பம் எண்டு பிரகடனம் செய்யிறார்.... ம்...'' எண்டார் . நான் விடுப்பறியிற நோக்கத்தில ''தேசிய விழாவில என்ன நடத்தது?'' எண்டு விதானையாற்ற வாயக் கிளறினன். ''நீ என்னை மாட்டுறதுக்குத்தான் கேக்கிறாய்'' எண்டு போட்டு, ''அது முதுகு சொறியிறதுக்கும் தலையச் சொறியிறதுக்கும் தின்னுறதுக்கும் எண்டு நடத்தின விழாவெல்லோ'' எண்டு நறுக்கெண்டு முடிச்சுப்போட்டுது மனிசன்.

நான் விடாமல் பேந்தும் கிண்ட, ''எங்கட பகுதி அம்மா எல்லாரையும் பள்ளிக்கூடம் போற மாதிரி யுனிபோர்மில வரச்சொன்னவ. பெரிய அம்மா அது கட்டாயமில்லை எண்டு சொன்னாலும் எங்கட அம்மா நாண்டுகொண்டு நிண்டா. பின்னச் சரி எண்டு நாங்களும் பிங் நிறச் சேட்டையும் போட்டுக்கொண்டு போய் வருசையா நிண்டால் சீற்றில்லையெண்டிட்டாங்கள். போனவன் வந்தவனுக்கெல்லாம் இன்விரேசனக் குடுத்தால் என்ன நடக்கும்?

சரி! இருக்க இடமில்லை எண்டிட்டு வாசலில நிண்டம். எனக்குப் பக்கத்தில கிளிநொச்சி ஜி.ஏ.யையும் மறிச்சுப் போட்டாங்கள் பாவம் மனிசி பவ்வியமா நிக்கிறா. யாரா இருந்தாலும் அங்க அவங்களுக்கு முன்னால என்னத்தத்தான் செய்யிறது? பிறகு யாழ்ப்பாணக் கச்சேரிக்காரர் வந்து அவாவ விடுவிச்சு கொண்டு போச்சினம். அதால எங்களையும் விட்டாங்கள். போய்க் காத்திருந்த பிறகு பரிவாரம் வந்துது. விழா தொடங்கி ஒரு பத்து நிமிசத்தில தின்னுறதுக்கு தினேஷ் பேக்கரி பெட்டியில தந்தாங்கள். குடிக்க தண்ணி மைலோ எண்டு நல்ல கவனிப்பு. எனக்கு அதை வாங்கித் தின்ன மனசில்ல சுனாமியால செத்தவன் பெயரால தின்னலாமோ எண்டு ஒரு உறுத்தல். பிறகு யோசிச்சன், பிறந்தாலும் செத்தாலும் தின்னுறதுதானே எங்கட வழமை அதப்போல இது அரசாங்கம் ஒவ்வொரு வருஷமும் நடத்துற ஆண்டுத்துவசம் தானெண்டு நினைச்சுப் போட்டுச் சாப்பிட்டிட்டன்'' எண்டு மூச்சு விடாமல் பொரிஞ்சுது மனிசன்.

ஆண்டுத்துவசத்தை வடிவா நடத்தினதுக்கு விருதுகளும் குடுத்தவையாம். விழா முடிஞ்சு வெளியால வரேக்க எங்கட விதானையாற்ற சகபாடி ஒருத்த மேல் மாடியில இருந்து இறங்கி வந்து, ''மேல கிடந்து அவிஞ்சம் ஒரு சொட்டு தண்ணி கூடத் தரேல்லை. அதுக்கிடையில நல்லா நடத்தினதுக்கு விருது குடுக்கினம்'' எண்டு பொருமிப் போட்டுப் போனவராம்.

எல்லாத்தையும் சொல்லிப்போட்டு எங்கட விதானையார் ''சோமண்ணை உதுகளையொண்டும் எழுதிப்போடாதை; அவங்கள் மணந்து பிடிச்சு பிறகு பிரச்சினை குடுப்பாங்கள்'' எண்டு போட்டுப் போட்டார். நான் எல்லாத்தையும் உங்களுக்குச் சொல்லிப் போட்டன். இனிக் கொஞ்ச நாளைக்கு முறைச்சுக் கொண்டுதான் திரிவார் ஆள். கண்டாலும் மூஞ்சியத் திருப்பிக் கொண்டு போவார். பிறகு மெல்ல மெல்ல அவரச் சமாளிச்சுப் போடலாம். ஆனால், இஞ்ச சமாளிக்க ஏலாத பல பிரச்சினையள் எல்லோ நடக்குது. அதுகளுக்குத்தான் என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல... எதுக்கும் அடுத்த வாரத்தில காணாமல் போகாமல், கடத்தப்படாமல், சுடப்படாமல் இருந்தால் சந்திப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடான் இரண்டாகப் பிரிவதற்கு ஜனாதிபதி பஸீர் கடும் எதிர்ப்பு

## தெற்கு சூடானியர்கள் மீதும் பாய்ச்சல்

எதிர்வரும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் தெற்குச் சூடானியர்கள் நாட்டைப் பிரிப்பதற்கு ஆதரவாக வாக்களித்தால் அது அவர்களின் உறுதித் தன்மையைப் பாதிக்குமென சூடான் ஜனாதிபதி ஓமர் அல் - பஸீர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அல் - ஜஸீரா தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய செவ்வியில் தெற்குச் சூடானியர்கள் தமது மக்களுக்கென ஓர் உறுதியான அரசை வழங்குவதற்கு இயலாதவர்களெனவும் தெரிவித்தார்.

இவரது செவ்வி தொடர்பாக பி.பி.ஸி செய்தியாளர் ஜேம்ஸ் கெஸ்றால் கருத்துத் தெரிவிக்கையில், இவரது கூற்று சிவில் யுத்தத்தின் பின்னர் 2005ஆம் ஆண்டிலிருந்து தெற்குச் சூடானை ஆளும் முன்னாள் போராளிக் குழுக்களுக்கு அதிக கோபத்தை ஏற்படுத்தும் என்றார்.

ஞாயிற்றுக்கிழமை வாக்கெடுப்பு நிகழ்வதற்கு முன்னதாக இறுதித் தேர்தல் கூட்டங்கள் தெற்குச் சூடானில் நடைபெற்று வருகின்றன.

உலகின் புதிய நாட்டின் வருகைக்காக ஏராளமானவர்கள் 'ஆம்' என்று வாக்களிப்பரென செய்தியாளர்கள் எதிர் பார்க்கின்றனர்.

நடைபெறவிருக்கு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு இரண்டு தசாப்தங்களை நீடித்த சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த 2005ஆம் ஆண்டின் பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாகும்.

அல் - ஜஸீராத் தொலைக்காட்சிக்கு பஸீர் மேலும் தெரிவிக்கையில், அநேகமான தெற்குச் சூடானியர்கள் சுதந்திரத்தை ஏன் விரும்புகிறார்களென்பதை நானறிவேன். ஆனால், புதிய நாடு சவால்களுக்கு எப்படி முகம் கொடுக்கப் போகின்றது என்பதுதான் கவலை தருகின்றது. தென் பகுதி ஏராளமான பிரச்சினை களால் பாதிக்கப்பட்டுள்ளது. 1959 இலிருந்து யுத்தத்தைச் சந்தித்துள்ளது. தென்பகுதி தனது மக்களுக்கென ஓர் உறுதியான நாட்டையோ அல்லது அதிகாரத்தையோ வழங்குவதற்கு இயலாத நிலையில் உள்ளது.

சூடானின் வடக்குப் பிரதேசத்தில் வாழுகின்ற தென்சூடானியர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க முடியாது.

எண்ணெய் வளம் மிகுந்த அபையி பிரதேசம் தொடர்பாகவும் பிரச்சினைக்குரிய எல்லைகள் தொடர்பாகவும் பிரஸ்தாபித்தார். தெற்குச் சூடானியர்கள் இந்தப் பிரதேசத்தையைக் கைப்பற்ற முனைந்தால் அவர் மீண்டுமொரு யுத்தத்திற்கு இட்டுச் செல்லுமெனவும் அவர் தெரி வித்தார்.

பஸீர் வடக்கு அரசியல்வாதிகளின் நெருக்குதல்களுக்கு ஆனாகியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

வடக்கு மற்றும் தெற்கு சூடான் பிரதேசங்கள் இன மற்றும் சமய வேறுபாடுகளால் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

சூடானிலுள்ள ஆபிரிக்க யூனியனைச் சேர்ந்த மத்தியஸ்தர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் வாக்கெடுப்பானது தென் சூடானியர்களின் உண்மையான அதன் சிரத்தைக் குறிக்கின்றது என்று கூறினார். சுதந்திரத்திற்கான செயற்பாடுகள் இப்போதுதான் ஆரம்பித்துள்ளன. தெற்குச் சூடானியர்கள் தமது பிரிவினைக்காக உறுதியாக உள்ளார்கள்.

உலகின் அபிவிருத்தி காணாத நாடொன்றின் எதிர்காலத்திற்காக வாக்களிப்பதற்காக தெற்குச் சூடானியர்களுக்கு ஒரு வாரம் மட்டுமே உள்ளது - என்றார். (க)

# அமெரிக்க ஆதிக்கத்தை தடுக்க சீனப் போர்க்கப்பல்கள் தயார்

பீஜிங்,ஜன 09

சீனக் கடல் பகுதியில் அமெரிக்க கடற்படைகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதைத் தடுக்க, சீனா தனது கடற்படையில் இரண்டு ரோந்து கப்பல்களை நேற்று சேர்த்துள்ளது. சீனக் கடற்பகுதியில் உள்ள சில தீவுகளின் சொந்தம் குறித்து சீனா, ஜப்பான் மற்றும் அண்டை நாடுகள் மத்தியில் பிரச்சினை நிலவி வருகிறது. மேலும், ஜப்பானுக்கு உதவும் போக்கில், சீனக் கடற்பகுதியில் அமெரிக்கப் போர்க் கப்பல்களின் ரோந்து அதிகரித்துள்ளது. இந்த இரண்டு பிரச்சினைகளையும் சமாளிக்கும் வகையில், இரண்டு பெரிய ரோந்துக் கப்பல்களை தனது கடற்படையில் சீனா நேற்று சேர்த்துள்ளது.

மொத்தம் ஆயிரம் மற்றும் ஆயிரத்து 500 தொன் எடை தாங்கும் திறன் கொண்ட இக்கப்பல்கள், சீனக் கடற்பகுதியின் வடபகுதியில் ரோந்து வருவதற்காக பயன்படுத்தப்பட உள்ளன. இப்பகுதியின் கண் காணிப்புக்காக சீனா, 13 ரோந்து கப்பல்களை கடற்படையில் சேர்க்கத் திட்டமிட்டிருந்தது. கடந்த 2005இல் இத்தொகுப்பில் ஆறு ரோந்து கப்பல்கள் தயாரிக்கப்பட்டு கடற்படையில் சேர்க்கப்பட்டன. இந்நிலையில், அடுத்த மூன்று கப்பல்கள் தயாராகியுள்ளன. இந்தாண்டு ஜூன் மாதத்துக்குள் மீதி நான்கு கப்பல்கள் தயாராகி விடும். (த)

# ஐவரிகோஸ்ட்டை அடக்க இராணுவம்: அமெரிக்கா அடுத்த கட்ட நடவடிக்கை

அபிட்ஜான்,ஜன 09

பிரிட்டன் மற்றும் கனடா நாடுகள், ஐவரிகோஸ்ட் அதிபர் பேக்போவால் நியமிக்கப்பட்ட தூதர்களைத் திருப்பி அனுப்பியதற்கு பதிலடியாக, அந்நாடுகளின் தூதர்களை வெளியேற்றியுள்ளார் பேக்போ.

அவர் மீதான பிடியை மேலும் இறுக்கும் வகையில், பேக்போவுடன் அமெரிக்கர்கள் எவ்வித வர்த்தக தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அமெரிக்கா தடை போட்டுள்ளது. இந்நிலையில், ஐவரி கோஸ்ட்டுக்குள் இராணுவத்தை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், கனடா, ஆபிரிக்க யூனியன், மேற்கு ஆபிரிக்க பொருளாதாரக் குழு (எக்கோவாஸ்) ஆகிய அனைத்தும் ஐவரிகோஸ்ட் அதிப ராக அலசான் வட்டாராவையே ஏற்றுக் கொண்டுள்ளன. லாரன் பேக்போ பதவி யிறங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

கடந்தாண்டு டிசம்பர் 29ஆம் திகதி கனடாவும், 30ஆம் திகதி பிரிட்டனும், பேக்போவால் நியமிக்கப்பட்ட தூதர்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று திருப்பி அனுப்பி விட்டன. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, ஐவரி கோஸ்ட்டுக்கான அந்நாட்டுத் தூதர்களைத் திருப்பி அனுப்பியுள்ளார் பேக்போ.

இதையடுத்து, பேக்போவுக்கு மேலும் நெருக்கடி கொடுக்கும் வகையில், அவர் மற்றும் அவரது மனைவி சிமோன் மற்றும் பேக்போ அரசின் வெளியுறவு அமைச்சர் அல்சைட் ஜெட்ஜே உள்ளிட்ட மூன்று முக்கிய பிரமுகர்கள் ஆகியோருடன் அமெரிக்கர்கள் எவ்வித வர்த்தக தொடர்பையும் மேற்கொள்ளக் கூடாது என்று அமெரிக்க கருவூலத்துறை தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில், பேக்போவின் பிடிவாதம் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்வதால், அவரை இராணுவப் படையெடுப்பின் மூலம் பதவி இறக்குவதற்கான நடவடிக்கைகளில் ''எக்கோவாஸ்' இறங்கியுள்ளது.ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின் கோரிக்கையின் படி, ஐவரி கோஸ்ட்டில்அமைதி நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக மேலும் இரண்டாயிரம் வீரர்களைஐ.நா அனுப்பி வைக்க உள்ளது. (த)

# உஷார் நிலையில் வடகொரியா

வடகொரியாவின் பேச்சுவார்த்தை அழைப்புக்குத் தென்கொரியா மறுப்புத் தெரிவித்த நிலையில், தனது மேற்குக் கடற்கரையில் உள்ள இராணுவத்தை வடகொரியா உஷார் நிலையில் வைத்துள்ளது. இதையடுத்து, தென்கொரியா மற்றும் அமெரிக்க இராணுவப் படைகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலப் புத்தாண்டை ஒட்டி, இரு கொரிய நாடுகளும் பரஸ்பரம் அமைதிக்கு அழைப்பு விடுத்திருந்தன.

இதையடுத்து கடந்த 5ஆம் திகதி, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வடகொரியா அழைப்பு விடுத்தது. ஆனால்,''வடகொரியா இப்பிரச்சினையைத் தீவிரமாகக் கருதவில்லை ' என்று கூறிய தென்கொரியா, பேச்சுவார்த்தைக்கு வர மறுத்து விட்டது. இந்நிலை யில், வடகொரியாவின் மேற்குக் கடற்கரையோரம் நிறுத்தப்பட்டிருந்த அந்நாட்டு இராணுவம் நேற்று உஷார் படுத்தப்பட்டது. இதில் பீரங்கிப் படைகளும் உண்டு. வழக்கமான பயிற்சிக்காக அறிவிக்கப்படும் உஷார் நிலையாகவும் இது காணப்படவில்லை.

இதுகுறித்து செய்தி வெளியிட்ட தென் கொரிய அரசு செய்தி நிறுவனமான ''யோன்ஹப்',''இந்த உஷார் நிலை சமாதானத்துக்காக மேற்கொள்ளப்பட்டது மாதிரி தெரியவில்லை' என்று கூறியுள்ளது. இதையடுத்து, தென்கொரிய மற்றும் அமெரிக்க கூட்டுப் படைகள் உஷார் படுத்தப்பட்டன. ஆனால், வடகொரியாவின் உஷார் நிலை குறித்து, தென்கொரிய பாதுகாப்பு அமைச்சகம் கருத்துக் கூறவில்லை. (த)

# காணாமற்போன அமெ. யுத்தக் கப்பல் 200 ஆண்டுகளின் பின் கண்டுபிடிப்பு

யுத்தக் கப்பலொன்றை கடலுக்கு அடியில் இருந்து 200 ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டுபிடித்துள்ளதாக சுழியோடிகள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டன் கடற்படையினருடனான மோதலைத் தொடர்ந்து இந்தக் கப்பல் ரோட் தீவில் காணாமல்போயிருந்தது.

அந்தக் கப்பலை யாராவது கடத்தியிருக்கலாம் என ஆரம்பத்தில் அச்சம் வெளியிடப்பட்டது. எனினும் போரின் பின்னர் இடம்பெற்ற அசம் பாவி தங்கள் காரணமாக அந்த விடயம் பேசப்படவில்லை. கடல் வாழ் உயிரினங்கள் குறித்தும் நிலத் துக்குக் கீழ் உள்ள பாறைகள் குறித் தும் சுழியோடிகள் ஆய்வுகளை நடத்தி வருகின்றனர்.

அந்த ஆய்வின்போது கப்பலின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது அமெரிக்காவுக் குச் சொந்தமான யுத்தக் கப்பல் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ கலாபூஷணம் விருதுபெற்ற
எங்கள் அன்புக்குரிய
நாதஸ்வர மேதை
V.K.பஞ்சமூர்த்தி
அவர்கள் மேன்மேலும் விருதுகள் பெற்று நலமுடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
Dr.V.ஜெகறூபன்,
நாட்டியக் கலைமணி
திருமதி ஜனீத்திரா ஜெகறூபன்.
சிங்கம்ஸ் பார்மஸி,
கோண்டாவில். (108357)


# நாளை கொடியேற்றம்

காரைநகர், ஜன.9

காரைநகர் பயிற்சிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா நாளை திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து ஐந்து தினங்கள் இடம் பெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமையும் இடம்பெறும். (201-250)


## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான..

Diploma in Microsoft Office 2010
Diploma in PC Application
Dip. in Pre-Press Desktop Publishing
Dip. in Video Production & Multimedia
Dip.in Web Designing & Development
Diploma in Computerized Accounting
Adv. Dip. in Hardware and Networking
Internet E-mail
Batch iii- 10/1/2011 Time - 9.30 a.m.
Batch iv- 17/1/2011 OR 3.30 p.m.
முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
veta Experts in English Training
An ISO 9001:2000 Company
புதிய பிரிவுகள் ஆரம்பம்.




DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி.



## அக மகிழ்கின்றோம்

கலாநிதி. மா.வேதநாதன்



இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி.மா.வேதநாதன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியராகத் தரமுயர்ந்ததையிட்டுப் பெருமகிழ்வடைகின்றோம். அவ்வப்போது ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் பேராசான் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்றுப் புகழ்பெற எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பாள் அருள் புரிய பிரார்த்திக்கின்றோம்.

அ.சிவநாதன் அரவிந்தன்
H.S.B.C முகாமையாளர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வெவ்வேறு நாள்களில் உள்ளூராட்சித் தேர்தல்; எதேச்சாதிகாரத்துக்கு வழி செய்யும் ஏற்பாடா?

நாட்டில் உள்ள 299 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்களை இம்மாதம் இருபதாம் திகதி தொடக்கம் இருபத்தேழாம் திகதி வரை வெவ்வேறு நாள்களில் தாக்கல் செய்யலாம் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. 260 பிரதேச சபைகள், 39 நகர சபைகள் வியாழன் நள்ளிரவு நடை முறைக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டுவிட்டன.

மாநகர சபைகள் எதுவும் கலைக்கப்படவில்லை. இதேவேளை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் பின்னரே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்று மூன்று வருடங்கள் பூர்த்தியாகாத யாழ். மாநகர சபை, வவுனியா நகர சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கும் இப்போது தேர்தல் நடைபெற மாட்டாது.

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

உள்ளூராட்சி சபைகளுக்கான அதிகாரங்களைக் குறைக்கும் விதத்தில் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் திருத்திய பின்னரே அவற்றுக்குரிய தேர்தல்களை நடத்துவதென்று அரசாங்கம் முன்னர் கூறி வந்தது. ஆனால் அரசின் உத்தேச திருத்தச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டு அது நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே தேர்தல் குறித்த அறிவிப்பு வந்துள்ளது. இப்போது தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களைக் கோரும் திகதிகளை அறிவித்திருக்கிறது தேர்தல் திணைக்களம்.

ஜனநாயக நடைமுறைகளின் பிரகாரம், நாடாளுமன்றத்துக்காயினும் சரி, உள்ளூராட்சி சபைகளுக்காயினும் சரி அவை உரிய காலத்தில் கலைக்கப்பட்டு ஒரே நாளில் ஒரே தடவையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

ஜனநாயக நாடுகளில் எல்லாம் கைக்கொள்ளப்படும் நடை முறையும் அதுதான். ஆனால் இலங்கை அரசு அதற்கு முரணாக உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை வெவ்வேறு நாள்களில் நடத்தவுள்ளதாக அறிவித்திருக்கிறது.

உள்ளூராட்சி சபைகளுக்கு வெவ்வேறு நாள்களில் தேர்தல்களை நடத்துவது ஜனநாயகத்துக்கு ஊறு விளைவிப்பதாக, மீறியதாக அமையும் என்று தேர்தல் முறைகேடுகளைக் கண்காணிக்கும் குழு ("கபே") சுட்டிக் காட்டியிருக்கிறது.

தேர்தலை வெவ்வேறு நாள்களில் நடத்துவது ஜனநாயகத்தில் சிக்கலை, முரண்பாட்டை உண்டாக்கும் என்றும், மக்கள் விருப்பத்துக்கு மாறாக மாற்றுத் தரப்பினரின் ஆதிக்கத்தை அதிகரிக்கும் என்றும் அந்த அமைப்பு எடுத்துரைத்துள்ளது.

தெற்கில் நடத்தப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் வெவ்வேறு நாள்களில் நடத்தப்பட்டதால், அரச சொத்துக்கள் பல்வேறு தரப்புகளால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குற்றச் சாட்டுகள் எழுந்தன என்றும்-

அதே முறையில் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை வெவ்வேறு நாள்களில் நடத்துவதினால் வன்செயல்கள் இடம்பெறும் சாத்தியங்கள் அதிகம் என்றும்-

அதனால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை ஒரே நாளில் நடத்த ஏற்பாடு செய்யுமாறும் "கபே" அமைப்பு வலியுறுத்தியுள்ளது.சில உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை முன்னுக்கு நடத்தி அவற்றில் குறிப்பிட்ட ஒரு கட்சி ஆட்சியை கைப்பற்றினால் அந்தத் தரப்பையே பின்னர் நடைபெறும் தேர்தலிலும் தெரிவுசெய்யும் மறைமுகச் செல்வாக்கு மக்களிடம் திணிக்கப் படுவதாக அமையும்.

அதாவது உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல்களை வெவ்வேறு நாள்களில் நடத்துவதால், முன்பதாக நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள், பெறுபேறுகள் பின்னர் நடைபெறும் தேர்தல்களில் செல்வாக்கைச் செலுத்தும். ஒரு குறிப்பிட்ட கட்சி வெற்றி பெற்றால் அதே கட்சியைத் தாமும் வெற்றி பெறச் செய்தால் அதிக சலுகைகளைப் பெறலாம் என்ற உளவியல் உந்துதலை மக்களிடம் உண்டாக்கும்.

ஆகையால், நேர்மையான, அரசாங்கத்தின் செல்வாக்குக்கும், அதிகாரத்துக்கும் உட்படாத, ஆளாகாத, தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டுமானால்-

கலைக்கப்பட்ட சகல உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும். அது குறித்து அரசு சிரத்தை கொள்ளாவிடில், விதண்டாவாதம் செய்தால், பின்னடித்தால், போட்டிகள் மலிந்த தேர்தல்களை நடத்தித் தனக்குச் சாதகமான கட்சிகளை அல்லது குழுக்களை ஆட்சியில் அமர்த்தும் சூழ்ச்சியாக அமையும். நாடாளுமன்றத்தில் மட்டுமன்றி, உள்ளூராட்சிச் சபைகளிலும் அதே ஆளும் கட்சிகளும், கூட்டணிகளும் அரசோச்சும்.

நாடு முழுவதிலும் எதேச்சாதிகாரத்துக்கு வித்திடப்படும்; வகை செய்யப்படும். அது ஆளும் தரப்புமகள் கூட்டாக, எல்லா மட்டங்களிலும் மக்கள் மீது ஏகபோகம் செலுத்தும் நிலைக்கு நிச்சயம் வகை செய்யும்.

# தமிழர் புலம்பெயர்ந்து வாழ்வதால் தமிழ்மொழி பரந்து வியாபித்துள்ளது

### சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பேராசிரியர் சிவத்தம்பி

கொழும்பு,ஜன.9

நம் தமிழர்கள் புலம் பெயர்ந்ததால் தமிழ்மொழி இன்று உலகின் பல பாகங்களுக்கும் பரவியுள்ளது. ஒருவகையில் தமிழர்கள் புலம் பெயர்ந்ததால் ஏற்பட்ட பெரும் பயன்பாடாகவே இதனைக் கருத முடிகிறது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தனிநாயகம் அடிகளார் அரங்கில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் தொடக்க விழாவில் சிறப்புரை வழங்கும் போது பேராசிரியர் கா.சிவத்தம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மொழியை வளப்படுத்தி அதனூடாக எமது தமிழ் இலக்கியங்களை உலகத் தரத்துக்கு உயர்த்துவதற்கான பணியைத் தமிழ் எழுத்தாளர்கள் முன்னெடுக்க வேண்டும். எமது தமிழ் மொழியை வளர்ப்பதற்கு எவரும் தேவையில்லை. நாம் எம்மைத் தமிழால் வளர்த்துக் கொள்ளவே இத்தகைய மாநாடுகள் பயன்படும்.

இந்தியாவின் தமிழகத்திலும், இலங்கையிலும், சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலும் வாழும் தமிழ்மொழி இன்று உலகின் பல பாகங்களுக்கும் பரவியுள்ளது. நம் தமிழர்கள் புலம் பெயர்ந்ததால் இதனைச் செய்ய முடிந்துள்ளது. ஒருவகையில் தமிழர்கள் புலம் பெயர்ந்ததால் ஏற்பட்ட பெரும் பயன்பாடாகவே இதனைக் கருத முடிகிறது.

புலம் பெயர்தல் என்பது மலர்களுக்குரியதொன்றாகும். ஆனால் அது இன்று மனிதர்களுக்கும் உரியதொன்றாகிவிட்டது. முன்பு ஹிட்லரின் வெறித்தனம் காரணமாக யூதர்கள் புலம் பெயர்ந்தனர். இன்று இலங்கையிலும் இது நேர்ந்து விட்டது.

நாம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எமது தமிழ்ப் பண்பாட்டை ஏனைய மொழிகளிலும் எழுத வேண்டும். பிரசுர நிலையமொன்றை நிறுவி தமிழைப் பரப்பும் பணிகளிலும் நாம் ஈடுபட வேண்டும். தமிழ் மக்களின் அனுபவங்களையும் இன்றைய எழுத்தாளர்கள் கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும் பதிவு செய்தல் வேண்டும். வெறுமனே மொழியைப் பேசுவது மட்டுமல்ல தமிழின் உறவு முறையைப் பேணுவதிலும் நீண்டகால இலக்கியத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளமுடிகிறது.

சங்க இலக்கியம் என்று நாம் கூறுவது தமிழிலக்கியத்தை மட்டுமே குறிக்கும் இந்தியாவில் முதலில் தோன்றியது சங்க இலக்கியம் தான் ரிக் வேதம் கூட அதற்குப் பின்னரே உருவானது.

புலம் பெயர்ந்து வாழும் நாம் எமது அனுபவங்களைத் தமிழில் கொண்டுவர வேண்டும். அதன் மூலமே எமது வளர்ச்சியை நாம் எட்ட முடியும். அத்துடன் எமது அனுபவங்களைத் தமிழில் கொண்டுவர வேண்டும். எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அங்கு பெற்றுக் கொள்ளும் அனுபவங்களைத் தமிழில் தரவேண்டும். அதனையும் வருடாவருடம் தொகுத்துத்தர வேண்டும். இதன் மூலமே தமிழை மேலும் ஆழப்படுத்தமுடியும். மேலும் நாம் எமது அனுபவங்களையும் பதிவு செய்ய வேண்டும். அவை புனை கதைகளாகவோ, கட்டுரைகளாகவோ எவ்வாறாகவும் பதிவு செய்யப்பட்டுத் தொகுதிகளாக வெளிவர வேண்டும். ஆராய்ச்சி செய்வதை விட செயல் முறையில் காட்ட வேண்டும்.

சிருஷ்டி கர்த்தாக்களாலேயே மொழியை வாழவைக்க முடியும்.

முடிந்தவரை அனுபவங்களையும், பட்டறிவுகளையும் பதிவு செய்து அவற்றை வெளிக் கொணருவதில் இந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் பேராசிரியர் கா.சிவத்தம்பி தமதுரையில் குறிப்பிட்டார். (க)

# காய்கறி விற்பனையில் இலங்கை இராணுவம்

கொழும்பு, ஜன.9

இலங்கையின் இராணுவம் மக்களுக்குத் தேவையான காய்கறிகளை விற்கும் நடவடிக்கையில் இறங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இந்த முயற்சி குறித்துப் பலவிதமான கருத்துக்கள் எழுந்துள்ள நிலையில், இலங்கை இராணுவம் காய்கறிகளை விற்கும் நடவடிக்கையில் இறங்குவதன் நோக்கம் குறித்து பி.பி.சிக்கு செவ்வியளித்த இலங்கை இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல, இலங்கை இராணுவத்தினர் தமது முகாமுக்கு அருகே இருக்கும் பண்ணைகளில் இருந்து நேரடியாக காய்கறிகளை கொள்முதல் செய்து அதை கொழும்புக்கு கொண்டு வந்து அதை நேரடியாக மக்களுக்கு விற்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பான கட்டமைப்புக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும், இராணுவத்தினர் நேரடியாக இதில் ஈடுபடுவார்கள் என்றும் அமைதி காலத்தில் சிவில் நிர்வாகத்துக்கு உதவுவது இராணுவத்தின் கொள்கைகளில் ஒன்று என்பதால் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலரின் ஆலோசனையின் படி இதை தாங்கள் செய்வதாகவும் இராணுவப் பேச்சாளர் உபய மேத வல பிபிசியிடம் தெரிவித்தார்.

விவசாயிகள் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதால் அவர்களிடம் தாங்கள் பேரம் பேசப்போவதில்லை என்றும், இராணுவத்தினர் தங்களின் அதிகாரத்தை பயன்படுத்தி விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு பொருள்களை வாங்க மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளிடம் தற்போது இடைத்தரகர்கள் குறைந்த விலையில் வாங்கி அதை அதிக விலைக்கு விற்று லாபம் பார்த்து வருவதாகவும் இராணுவம் அவர்களை அகற்றப் போவதாகவும், இதன் மூலம் விவசாயிகளுக்கு நாங்கள் நியாயமான விலை கொடுக்கப்போவதாகவும் குறிப்பிட்ட பொருள்களுக்கு அமைச்சகங்கள் விலை நிர்ணயம் செய்திருந்தால் அந்த விலையை இராணுவம் கொடுக்கும் என்றும் அவர் கூறினார்.

முதல் கட்டமாக இந்த திட்டத்தை கொழும்பிலும் அதன் புறநகர் பகுதியிலும் செயல்படுத்த உள்ளதாகவும், தங்கள் கடைகளில் விற்கப்படும் காய்கறிகள் நிச்சயமாக சந்தை விலையை விட குறைவாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (த)

## சென்.பற்றிக்ஸ் பரிசளிப்பு விழா

குருநகர், ஜன.9

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் ஏ.ஈ.ஏ.ஜோசப், டாக்டர் திருமதி திரேசா ஜோசப் ஆகியோரும், கௌரவ விருந்தினராக யூனியன் வங்கியின் பிரதித் தலைவர் அலெக்ஸ் லொவலும் கலந்து கொள்வர். (ஒ-51)

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 26 | | 10.01.2011 திங்கட்கிழமை |
| திதி: | : | ஷஷ்டி பி.இ.12.26 வரை |
| நட்சத்திரம் | : | பூரட்டாதி பி.ப.02.56 வரை |
| சுபநேரம் | : | 12.33-02.03 வரை |
| ராகுகாலம் | : | 08.03-09.33 வரை |

# யாழ்ப்பாணச் சம்பவங்களை வைத்து நாட்டின் பெயரைக் கெடுக்க முயற்சி

### அமைச்சர் ரம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 9

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகளை வைத்து அனைத்துலக மட்டத்தில் இலங்கையின் பெயரைக் கெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றம்சாட்டியுள்ளார்.

வியாழன் அன்று கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் ரம்புக் வெல யாழ்ப்பாண நிலைமைகள் குறித்த விடயத்தை அரசு முதன்முதலில் வெளிப்படுத்தியது. அதுபோல இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுள்ளது.

அரசு தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி விசாரணைகளை முன்னெடுக்கும். இதுதொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அதிபர் மகிந்த ராஜபக்ஷ பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

அனைத்துலகமட்டத்தில் இலங்கை தொடர்பாகத் தவறான கருத்தைப் பரப்பு வதற்கு சில தரப்பினர் முயற்சி செய்கின்றனர். விரைவில் ஜெனீவாவில் அனைத்துலக மனித உரிமை மாநாடு நடைபெறவுள்ளது. அதை இலக்கு வைத்தே இத்த கைய செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இதைவிடப் பெரிய சவால்களை கடந்த காலங்களில் நாம் சந்தித்து வெற்றி பெற்றுள்ளோம். இப்போதுள்ள சவால்களையும் அதுபோலவே வெற்றி கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சம்பவங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தவறானவை என்று தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES – JAFFNA

CIFL
Strength & Integrity
Since 1966

A Finance Company registered with the central bank of Sri Lanka. CIFL is one of the oldest finance Companies with a Strong and established history for the last 44 years.

**It's time to venture with us to redefine who you are.**



### Assistant Branch Manager

- Assistant Branch Manager Having a professional qualification in the relevant field.
- Experience in leasing /credit and HP
- Preferably Banking experience above 5 years.

### Business Promotion Officer (HP/Leasing)

- Suitable candidates must have a dynamic personality with quality experiences and a sound educational background relevant to the position. Similar experiences in the finance sector will be an added advantage.
- Open to target driven individuals within the age group of 35

### Trainee business Promotion Officer (Fixed deposit,Leasing & hire purchase)

- Suitable candidates must have a dynamic personality with a sound educational background (G.C.E. A/L) relevant to the position applied. Having some experience will be an added advantage. School leavers are encouraged to apply.

### Receptionist

- Female candidates are encouraged to apply. Must have fluency in all three languages. Must be between the age limit of 19-23

### Remuneration

An attractive remuneration package on par with industry standards and excellent career prospects for career advancement awaits the right candidate

Interested applicants must apply within 7 days of this advertisement with completed bio-data and details of two non-related referees, clearly indicating the post and location (Jaffna) applied for on top left hand corner of the envelope to:

The Chief Manager- Human Resources
CENTRAL INVESTMENTS AND FINANCE LIMITED
No: 181/1A, Dharmapala Mawatha,
Colombo -7
T.P-0112698888/0114419419/0114419400
email: info@cifl.lk

www.cifl.lk


## மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளால் நெருக்கடி நிலை

யாழ். முற்றவெளிப் பகுதியில் பொதுமக்கள் சிலர் பட்டி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதால் போக்குவரத்தில் சிரமம் ஏற்படுவதாகப் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் மாடுகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு வந்து இப் பகுதியில் விட்டுச் செல்வதால் அவை வீதிக்குக் குறுக்கே நின்று போக்குவரத்துக்குச் சிரமத்தை ஏற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக இரண்டு மாடுகளைப் பிணைத்து விடுவதால் விதியில் பயணிக்கும் வாகனங்களின் சத்தத்துக்கு வீதிகளின் குறுக்கே ஓடிச் செல்கின்றன. எனவே இதனால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பமும் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர். (201-26)

## கூட்டம்

பளை,ஜன.9

பச்சிலைப் பள்ளி பெண்தலைமைத்துவ வாழ்வாதார நலன்புரிச் சங்கம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யுத்தத்தினால் கணவரை இழந்த பெண்கள் உட்பட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ரி.இராமலிங்கம் அறிவித்துள்ளார். (204-207)


### சந்திரகாந்தன் திருமண சேவை

அரச பதிவு: VW/FIN/R/I/12/2009. உள்நாட்டு, வெளிநாட்டு டாக்டர், எஞ்சினியர், ஆசிரியர் உட்பட அனைத்து மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு. நுபால் மூலமும், நேரடியாகவும் தொடர்பு கொள்ளவும். திருப்தியாகவும் துரிதமாகவும் செயல்படும் ஸ்தாபனம். T.P.0775081756, 0750405890
தொல்புரம் மத்தி, சுழிபுரம் தொடர்பு: S. ஆனந்தி

### விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையில் "Dimo Aceht" ரகவான் விசேடமாக பேக்கரிப் பொருள்களின் விற்பனைக்கு உரிய body யுடன் கூடியது. அத்துடன் பேக்கரிக்குரிய Electric gas Oven (புதியவை) விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 859/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.:0777736607. (108850)

### விற்பனைக்கு

NPVL தொடரிலக்கமுடைய (CAL MODEL) GN 125 புத்தம் புதிய கறுப்புநிற A LOVEL DISK BREAK உடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0750419101 (108846)

### விற்பனைக்கு

14....Mitsubishi Lancer கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779218444 (108856)

### விற்பனைக்கு

HSPDA DONGLE with 2 GB Memory விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0756935453 (108836)

### காணி வீடு விற்பனைக்கு

இல. 14, திருமகள் வீதி, அரியாலையில் $1\frac{1}{2}$ பர. காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: உரிமையாளர் அ. செல்வமலர், 0776177247, 0712829098, 0779918995 (108860)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 38 வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற நிரந்தர தொழில் புரியும் (Technician) மணமகனுக்கு தகுதியான மணமகள் தேவை.
தொடர்பு: 0213217824,00447886688821(லண்டன்)

### கன்ரர் வாடகைக்கு

அலுமினிய Body Data-709 $14\frac{1}{2}$ அடி Body வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:0771392482 (108742)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

3பேர்கொண்டகுடும்பத்துக்கு, அமைதி யான வீட்டுச் சூழலில் தங்கி இருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை. தகுந்த சம்பளம் தரப்படும்.
(108719) தொடர்பு: 0777061892, 0215210124

### காணி விற்பனைக்குண்டு

நீர்வேலி கந்தசாமி கோயில் வீதியில் $3\frac{3}{4}$ பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு: 0115758139, 0775302211 (108741)

### வீடு காணி விற்பனைக்கு

மல்லாகம் தேவாலய வீதியில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளும் கொண்ட பெரிய புதிய வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதில், 2 குளியலறை, 2 பாத்ரூம் (ஒன்று Attach Bathroom) உட்பட சகல வசதிகளும் பயன் தருமரங்களும் உண்டு. தொடர்புகளுக்கு 0779031513 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (108804)

### ஸ்ரீம் பொயிலர் விற்பனைக்குண்டு


அரிசியாலைப் பாவனைக்குரிய ஸ்ரீம் பொயிலர் தரமான நிலையில் சகல உபகரணங்களுடனும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776691263. (105490)



### வீடு விற்பனைக்கு

நெல்லியடி சயன்ஸ் சென்ரர் வீதியில், சயன்ஸ் சென்ரருக்கும் மாடி வீட்டுக்கும் இடையில் இருக்கும் சிறு வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778010482 (சி/574236)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் விசுவநாதர் சங்கரப்பிள்ளை

மண்ணில் 07.11.1914 — விண்ணில் 06.01.2010

சிவனோ டொக்கும் தெய்வந் தேடினுமில்லை
அவனோ டொப்பாரிங் கியாவரு மில்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

'பொன்கிரி',
பன்னாலை,
தெல்லிப்பழை. குடும்பத்தினர்.
(சி/5742236)


### மணமக்கள் தேவை

- 78இல் பிறந்த R.C வேதம் உடைய ஆசிரியர் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை.
- 76இல் பிறந்த 12இல் சூரியன் செவ்வாய் $20\frac{3}{4}$ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
- 82இல் பிறந்த உதயத்தில் செவ்வாய் $20\frac{1}{4}$ பாவமுடைய சைவ போசனமுள்ள இஞ்சினியருக்குப் படித்த சைவபோசனமுள்ள மணமகள் தேவை.
- 4.09.78இல் பிறந்த 12 இல் செவ்வாய் $14\frac{3}{4}$ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.

மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள் ஆசிரியர்கள் சைவபோசனமுள்ள அரச உத்தியோகத்தர்களும் செவ்வாய் பாவம்கூடியதும் குறைந்ததும் அரச உத்தியோகத்தரும் வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல 171/2, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர். T.P 0776070862 (108847)



## கண்ணீர் அஞ்சலி

வட்டுக்கோட்டை அரிமாக் கழகத்தின் உறுப்பினர்,
லயன் வி.அனுராதாவின் அன்புத் தந்தையும் எமது கழக
உறுப்பினரும் வலயம் 19 இன் வலயத் தலைவருமாகிய
லயன் K.விஜயேந்திரனின் பாசமிகு மாமனுமாகிய

**விஸ்வலிங்கம் தாமோதரம்பிள்ளை**

05.11.2011 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு
வட்டுக்கோட்டை அரிமாக் கழக உறுப்பினர்கள் தமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம். (108849)

அரிமாக் கழகம் (LIONS CLUB), வட்டுக்கோட்டை.



## அறிவித்தல்

பொதுமக்களுக்கும்
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ்
ஃபினான்ஸ் லிமிட்டட்
வாடிக்கையாளர்களுக்கும்

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட் வவுனியா கிளையில் பணியாற்றிய கீழ்க்காணும் நபர் தற்போது எமது நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என்பதையும் எதிர்காலத்தில் அவருடன் மேற்கொள்ளப்படும் எவ்வித வியாபாரத்திற்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்காது என்பதையும் இத்தால் அறியத்தருகிறோம்.



பீட்டர் மக்ஸி மரியான் துராம்
வாட் இல.08, பேசாலை,
மன்னார்.
ID Number : 781903884 V

CDB சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட்
தலைமை அலுவலகம்: இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10.



உங்கள் உயர்கல்வியை LONDON ல் தொடர...



With A/L No Need IELTS

INTAKES @ January, February, March, April

Note
Conditional Offer and CAS Statement Within 5 Days

We expert in Student Visas for,
UK, INDIA
SINGAPORE
MALAYSIA, UKRAINE
NEWZELAND, CYPRUS

AREA OF STUDIES...
- MBBS, MS, MD (Ukraine, India)
- COMPUTING & IT
- BUSINESS & MANAGEMENT
- ACCOUNTING & FINANCE
- TRAVEL & TOURISAM
- DESIGNING & ARCHITECTURE
- ENGINEERING
- HOTEL MANAGEMENT
- LANGUAGE & EDUCATION

Minimum Entry Qualification : O/L or Equivalent

Our Services for Students :
Visa Counseling & Consulting
Visa Processing
Career Advice
Scholarship
Accommodation
Travel Document
Airport Pick-Up
Part Time Jobs
Tourist Visa
Dependent Visa
Visit Visa
Appeal & Re-apply
Financial Support

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்

SIEC www.sriramleg.org

Jaffna Office: 111/2, Brown Road, Kokuvil East, Jaffna. Tel: 021-2221875

Kotahena Office: 169, George R De Silva Mawatha, Kotahena, Colombo-13. Tel: 011-2434989, 011-2434767

After Office Hours & Sundays Please Contact - 077 3502612


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி இணைப்பு வசதிகள் குடாநாட்டில் அதிகரிக்கப்படும்

## ரெலிகொம் வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.குடாநாட்டில் இந்த ஆண்டில் கேபிள் தொலைபேசி இணைப்பு வசதியை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்கப்படாத சகல பிரதேசங்களுக்கும் அவற்றை விஸ்தரிக்குமாறு தொலைத்தொடர்புகள் அமைச்சு பணிப்புரை வழங்கியுள்ளது.

மேற்படி தொலைபேசி இணைப்பு வழங்கப்படாத பிரதேசங்களுக்கு இவ்வாண்டில் பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்பட்டு இந்த இணைப்பை வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன

குறிப்பாக குடாநாட்டில் அதிகமானோர் கேபிள் தொலைபேசி வசதியைப் பெற்று வருகின்றனர்.

இதனால் அரசுக்கு அதிக இலாபம் ஈட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை யாழ். குடாநாட்டைவிட தென்பகுதியில் ரெலிக்கொம் நிறுவனத்துடன் போட்டி போட்டுத் தனியார் தொலைபேசி நிறுவனங்கள் சில இணைப்பு வசதிகளை அதிகரித்துள்ளன.

அந்த வகையில் பார்க்கும் போது குடாநாட்டில் சிறி லங்கா ரெலிகொம் நிறுவனத் தின் தொலை பேசிப் பாவனை அதிகரித்துள்ளது.

இதனால்தான் இந் தத் தொலைபேசி வசதியை சகல இடங்களுக்கும் கேபிள் வசதி மூலம் விஸ்தரிப்பதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (201-26)

# மயிலிட்டி காச நோய் வைத்தியசாலை சொந்த இடத்தில் திறக்கப்பட வேண்டும்

## டாக்டர் யமுனானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்டக் காசநோய் கட்டுப் பாட்டு அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா கோரிக்கை விடுத்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

மேற்படி வைத்தியசாலையை மீளத்திறப்பதன் மூலம் காசநோயாளர்களின் இடநெருக்கடிகைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

எனவே தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்தி இந்த வைத்தியசாலையை மீளத் திறந்துவைப்பதற்கு உரியதரப்பினர் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை கடந்த வருடத்தில் காசநோய்க்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 420. ஆக உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்ட அவர் இந்நோயாளர்களை உரிய வசதியுடன் பாரமாரிப்பதற்கு நிரந்தரமான- கட்டடவசதி ஒன்றும் தற்பொழுது அவசியமானது என மேலும் தெரிவித்துள்ளார். (201-26)

# நவாலி தெற்கு கொத்துக்கட்டிக்கு விரைவில் குழாய்மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,ஜன.10

நவாலி தெற்கு கொத்துக்கட்டிப் பகுதிக்கு குழாய் மூலமாக குடிதண்ணீர் விரைவில் வழங்கப் படவுள்ளதாகத் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி பே.தபேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக் மேலும் அவர் தெரிவிக்கையில்:-

பொக்கணையில் இருந்து கட்டுடையூடாக நவாலி அரசடிச் சந்தி வரை வழங்கப்படும் குடிதண்ணீர் விநியோகம் நவாலி தெற்கு, கொத்துக்கட்டி பகுதிவரை விஸ்தரித்தரிக்கப்பட்டு குடிதண்ணீர் பெறுவதற்கான நீர்த் தாங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டிய 22 ஆயிரத்து 470 ரூபா நிதியை 3 நீர்த் தொட்டிகளும் வைத்திருக்கும் மக்கள் இதுவரை செலுத்தவில்லை.

எனவே மக்கள் ஒன்று சேர்ந்து உடனடியாக நிதியைச் செலுத்தினால் மட்டுமே இதற்கான ஏற்பாடு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தொட்டிகளை நிர்மானிப்பதற்கும், பராமரிப்பதற்கும் ஒவ்வொரு சங்கத்தில் பதிவு செய்தவர்கள் மட்டுமே குடிதண்ணீர் பெறலாம் எனவும் பொறியியலாளர் தெரிவித்தார். (201-302)

## நோய்க் காப்பு...



மருத்துவ முகாம்: யூனிலிவர் அமைப்பின் இலவச சிக்னல் மருத்துவ முகாம் நேற்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமில் கொழும்பில் இருந்து வந்த 14 பல் வைத்திய நிபுணர்கள் கொண்ட 55 பேர் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மருத்துவ முகாமில் காட்சிப்படுத்தப்பட்ட பற்களால் அமைக்கப்பட்ட நுழைவாயிலைக் காணலாம், கொழும்பிலிருந்து வந்த பல் வைத்திய நிபுணர்கள் நோயாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடத்துகின்றனர். (7)

# தொல்லியல் எச்சங்களை சேதப்படுத்தினால் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

ஆனைக்கோட்டையில் உள்ள தொல்லியல் எச்சங்களை சேதப்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தொல்லியல் திணைக்களத்தின் வடபிராந்திய பணிப்பாளர் ஜெயந்த விஜயரட்ண அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள தொல்லியல் எச்சங்களை சேதப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன. அப் பகுதியை தொல்லியல் பிரதேசமாக பிரகடனப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அப் பகுதியில் வயல்களை வைத்திருப்போர் தமது வயல்களோடு தொல்லியல் எச்சங்கள் இருக்கின்ற பகுதிகளை இணைத்துள்ளார்கள்.



பெரும் தொல்லியல் மேடாக இருந்த அப்பகுதியிலுள்ள மணல் அகற்றப்பட்டுள்ளதால் அதனுடன் தொல்லியல் எச்சங்களும் போய்விட்டன. எனவே அப்பகுதியிலுள்ள தொல்லியல் எச்சங்கள் உள்ள பகுதியை வயலோடு சேர்ப்பதோ அல்லது தொல்லியல் சின்னங் களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதோ சட்டப்படிகுற்றமாகும் - என்றார் அவர். (ம-319)

# நெடுந்தீவு பல.நோ.கூ.சங்க படகில் தொலைபேசி வசதி

நெடுந்தீவு,ஜன.9

நெடுந்தீவு பல.நோ.கூ. சங்கம் வெளியிடங்களில் உள்ள மக்களின் பிரயாண வசதியைக் கருத்தில் கொண்டு சங்கப்படகில் தொலைபேசி வசதியை ஏற்படுத்தியுள்ளது.

பிரயாண சேவைகள் தொடர்பான விடயங்களை 0215680600 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளமுடியும் என சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம் தெரிவித்துள்ளார். (204-111)

# விலங்குக் கழிவுகள் வீதியில் கொட்டப்படுவதாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.9

சண்டிலிப்பாய் மேற்குப் பகுதியில் சேத்துப்பிட்டி வீதியில் விலங்குக் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதி யெங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதியில் இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற விலங்குகளின் கழிவுகளை மக்கள் கொண்டு வந்து தினமும் வீசி வருகின்றனர். இதனால் அப் பகுதியில் உள்ள மக்களும் வீதியால் செல்வோரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதுகுறித்து அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டெங்கு விழிப்புணர்வையொட்டி அப்பகுதியில் உள்ள பற்றைகள் பரவலாக துப்புரவு செய்யப்பட்டு வருகின்ற நிலையிலும் இத்தகைய சுகாதார சீர்கேடு குறித்து பொதுச்சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? என்றும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (204-9)

## வீதியின் அவலம்...



கவனிப்பார்களா?: யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பெரும் குழிக்குள் நேற்று சனிக்கிழமை பயணித்துக் கொண்டிருந்த பஸ் ஒன்று புதையுண்டுள்ளது.

இதன் காரணமாக சில மணி நேரம் போக்குவரத்து நெரிசல் அந்த இடத்தில் ஏற்பட்டது. (7)

# உள்நாட்டு இறை வரித் திணைக்களத்துக்கு நீண்டகாலத்தின் பின் பிரதி ஆணையாளர்

யாழ்ப்பாணம்,ஜன.9

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.கிளைக்கு நீண்டகாலத்துக்குப் பின்னர் பிரதி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் வருமான வரிநிர்வாகப் பொறுப்பு, உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தின் யாழ்.பிராந்தியக் கிளை க்கு வரி மதிப்பாளர் ஒருவரின் கீழேயே இதுவரையில் இருந்து வந்தது.

இதே வேளை யாழ்.பிராந்தியக்கிளையின் வரிநிர்வாகத்தை மேலும் மேம்படுத்தும் பொருட்டு தலைமை அலுவலகத்திலிருந்து பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி இக் கிளைக்குப் பொறுப்பாக ஜனவரி மாதத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். சுமார்30 ஆண்டுகளுக்கு பின்பு பிரதி ஆணையாளர் ஒருவர் யாழ்.பிராந்தியக் கிளைக்கு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

வருமான வரி, மொத்த விற்பனை வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் விருப்பத்திற்குரிய பெறுமதி சேர்வரி ஆகியவற்றை நிர்வகித்துவரும் யாழ். பிராந்தியக் கிளை மேலதிகமாக இந்த வருடத்திலிருந்து கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட மொத்த சில்லறை வர்த்தகத்தின் மீதான தேசக் கட்டுமான வரியையும் இவற்றுடன் நிர்வகிக்கவுள்ளது.



எனவே வர்த்தகர்கள், வரி செலுத்துவோர் மற்றும் பொது மக்கள் தமக்குள்ள பிரச்சினைகள், சந்தேகங்களை தெளிவுபடுத்து வதற்கு பிரதி ஆணையாளர் சிவாஜியுடன் அலுவலக நேர ங்களில் நேரடியாக அல்லது 021-222076 என்ற இலக்க தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ள முடியும். (201-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் தகவலும்தொடர்பாடல்தொழில்நுட்பமும் கற்கைநெறி 2010/2011

வவுனியா வளாகத்தின் 2010/2011 கல்வி ஆண்டுக்கான மேற்படி கற்கை நெறியைப் பயில விரும்பும் பல்கலைக்கழக அனுமதி கோரி நிற்கும் மாணவர்கள் பொது உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது அவசியமானதாகும்.

மேற்படி பரீட்சையினை வவுனியா வளாகத்தின் சார்பாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்லூரியே (UCSC) நடத்தவுள்ளது. எனவே மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பின் வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றோம்.

1. **21.01.2011** திகதிக்கு முன்பாக இணைய வழியூடாக விண்ணப் பிக்கவேண்டும். இணைய முகவரி **www.ucsc.cmb.ac.lk.**
2. **28.01.2011** திகதிக்கு முன்பாகப் பூரணப்படுத்திய இணைய வழி விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியுடன் (Printout) ஏனைய சான்றுப் படுத்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் சகிதம் பின்வரும் முக வரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

Senior Assistant Registrar/ Examinations & Registrations, UCSC,No-35, Reid Avenue, Colombo-07

மேற்படி பரீட்சை கொழும்பு, கண்டி, மிகிந்தலை, வவுனியா, யாழ்ப் பாணம் ஆகிய இடங்களில் ஒரே நேரத்தில் **20.02.2011** திகதியன்று நடைபெறும் ஏனைய விவரங்களை இணையத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம், அல்லது **07.01.2011** ஆம் திகதி " வீரகேசரி" பத்திரிகையைப் பார்வையிடவும்.

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்**
**வவுனியா வளாகம்,**
**07.01.2011**

## நவீன நாடகம்
## MODERN DRAMA



கட்டுரைகள்
1. நவீன நாடகம் என்றால் என்ன?
2. இலங்கைத் தமிழ் நாடகம்
3. தமிழ் நாடகத்தின் சுருக்கமான வரலாறு

**510 நாடகங்கள் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது இரண்டாம் பதிப்பு**

**ரூபா 150.00**

நாடகங்கள்
1. வாத்தியார் கவனம்!
2. நாடக விருந்து!

30, கடைச்சாமி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம்.

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 9

இளவாலை புனித யூதாதேயு ஆலய இளையோர் மன்றத்தினால் நடத்தப் படும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இளவாலை புனித யூதா தேயு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் மு.கொன்சலஸ் ரேகன் தலைமையில் நடைபெறும் இந் த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மாரீசன் கூடல் பங்குத்தந்தை அருட்பணி ஞானேந் திரன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக இளவாலை கன்னியர் மடம் ம.வி உப அதிபர் திருமதி நா.சத்தியவாணியும் கலந்துகொள்வர்.

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலியில் $1_{1/4}$ பரப்பில் 4 அறைகள், 2 கோல் மாபிள் பதிக்கப் பட்டது, கிச்சின், அற்றாச் பாத்றூம், றொயிலட் மாபிள் பதிக்கப்பட்டது, சுற்றிவர சுற்று மதில், இருபக்கப் பாதை என அனைத்து வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0773273125**

### வான் விற்பனைக்கு

53-9XXX இலக்கமுடைய NISSAN VANETTR வான் விற்பனைக் உண்டு (A/C, P/S) **தொடர்புகளுக்கு:0779353065**

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969 ஆம் ஆண்டு செவ்வாய் தோஷமுள்ள மொ.கி.பாவம் 13 அரச உயர்பதவி வகிக்கும் முதுமாணிப் பட்டதாரிக்கு அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு:0718475568

### மணமகள் தேவை

R.C மதம், 1977 ஆண்டு அரச உத்தியோகத்தரான மணமகனுக்கு அதேமதம் அல்லது இந்து மதத்தைச் சேர்ந்த சிவந்த மெல்லிய அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்பு: 0776341226**

### மணமகன் தேவை

26 வயதுடைய கௌரவ குடும்பம், ரோமன் கத் தோலிக்க மதத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு ஏறத்தாள 5 அடி, 4 அங்குலத்திற்குக் குறைந்த மணமகன் தேவை. பட்டதாரி ஆசிரியர் or அரசாங்க லிகிதர் விரும்பத் தக்கது. வயது 33 க்கு குறைவாக இருத்தல் நல்லது.

தொடர்புகளுக்கு: 0214925384

## தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாராப் பிரிவுப் பயிற்சிகள்

தென்மராட்சி, ஜன. 9

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முறைசாரா பிரிவினால் கணினி மற்றும் ஆங்கில மொழி விருத்தி ஆகிய பயிற்சி வகுப் புகள் பின்வரும் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன.

மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் கணினிப் பயிற்சிகளும் கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் ஆங்கில மொழிப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்களிட மிருந்து பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளதுடன் மேற்படி பாடங்களைப் போதிக்கக்கூடிய தகைமை யுடைய போதனாசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களைப் பயிற்சி நடைபெற வுள்ள பாடசாலைகளிற் பெற்று எதிர்வரும் 14 ஆம்திகதிக்குமுன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் அறிவித்துள்ளார். (201-207)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
டானியல்
தேவகுமார் (தேவன்)

தோற்றம்
26.10.1976

மறைவு
30.11.2010

'' நாள்கள் சில நாள்களாயினும்''
ஆறாது உன் பிரிவு எம் மனதில்
ஆண்டவன் பாதத்தில் அமைதிகொள் - எம்
தேவகுமாரனே !

தகவல்:
க.யேசுதாசன் பமிலஸ்
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மாமன், மைத்துனர்கள்,

# மரண அறிவித்தல்

## வைத்திய கலாநிதி
## வே.ஆனந்த நடேசன்



தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைப் பிறப்பிட மாகவும் லண்டனை (U.K.) வசிப்பிடமாகவும் கொண்ட Dr.வேலுப்பிள்ளை ஆனந்த நடேசன் 04.01.2011 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கச்சியம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் யோகராச மலரின் அன்புக் கணவரும் ராதை, ஆனந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும் முத்துலட்சுமிதேவியின் ஆருயிர்ச் சகோதரனும் சுப்பிரமணியம், மகாலிங்கம் தவராசமலர், ஞானமுத்து, ஜெயராசமலர், திருமதி புஸ்பராசா மலர் ஜோசையாகுமார், தவானந்தராசா ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**சுப்பிரமணியம், மகாலிங்கம் - 0044(0)2084049113**
**திருமதி ஆனந்தநடேசன் - 0044(0)2086482173**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லல்படும் முல்லைத்தீவு சிறாட்டிகுளம் கிராம மக்கள்

முல்லைத்தீவு, ஜன.9

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு சிறாட்டி குளம் பகுதியில் மீள்குடியமர்ந்து மக்கள் அடிப்படை வசதிகளின்றிச் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சிறாட்டிகுளம் கிராமத்தில் 150 இற்கும் அதிகமான குடும்பங்கள் மீள்குடியமர்ந்த நிலையில் வசித்து வருகின்றன.

ஆனால் இவர்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாமையால் தாம் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருவதாக இவர்கள் கவலை வெளியிட்டனர்.

இந்தக் கிராமத்திற்குச் செல்லும் நட்டாங்கண்டல் - சிறாட்டி குளம் பிரதான வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் பறங்கி ஆற்றுக்கான பாலம் புனரமைக்கப்படாமையால் மழை காலங்களில் ஆறு பெருக்கெடுத்தோடும்போது மக்களால் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் மழைகாலங்களில் ஒருவாரம் அல்லது இரண்டு வாரங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க வேண்டிய அவசியமும் தோன்றியுள்ளது.

ஆனால் தம்மிடம் இதற்கு வேண்டிய பொருளாதார வசதிகள் இல்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் அன்றாடம் கூலிவேலை செய்தே தமது சீவியத்தை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனைவிட இந்தக் கிராமத்தில் இயங்கிவரும் பாடசாலையில் தரம் -5 வரையான வகுப்புக்களே நடைபெறுகின்றன. இதற்கு மேலுள்ள வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்கள் நான்கு கிலோமீற்றர் தூரத்திலுள்ள நட்டாங்கண்டல் பாடசாலைக்கோ அல்லது ஒன்பது கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாண்டியன்குளம் பாடசாலைக்கோ செல்லவேண்டும். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லை. இந்தச் சிரமங்களின் காரணமாக அனேகமான பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடைவிலகிச் செல்வதைக் காணமுடிகின்றது.

அத்துடன் மருத்துவ வசதிகளைப் பெறவேண்டுமாயின் ஐந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள நட்டாங்கண்டல் மருத்துவமனை அல்லது 12 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மல்லாவி மருத்துவமனை ஆகியவற்றிற்கே செல்ல வேண்டிய பரிதாப நிலையில் இந்த மக்கள் உள்ளனர்.

இப்படியாக எதுவித அடிப்படை வசதிகளுமின்றி அல்லாடிக் கொண்டிருக்கும் இந்தக் கிராம மக்கள் தமக்கு எப்போது விடிவு கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். (க-6)

## மரம் வெட்ட அனுமதி

முல்லைத்தீவு, ஜன.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடுகளைப் புதிதாக அமைப்பவர்களுக்கும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்பவர்களுக்கும் மரம், தடிகளை வெட்டவும், மணல் ஏற்றவும் அனுமதி வழங்ககப்பட விருக்கின்றது.

இதற்கு கிராம அலுவலரின் சிபார்சுடன் உதவி அரசாங்க அதிபரின் மேலொப்பமும் பெறப்பட வேண்டும்.

அமைச்சர் றிசாத் பதியுதீனின் பணிப்புரைகளுக்கு அமைவாக இவை நடைமுறைப்படுத்தப் படவிருக்கின்றன. (க-500)




## தலைவிதி...




புற்களும் வெள்ளமும்: பூநகரி பரமன் கிராய்க் கிராம முன்பள்ளி புற்கள் நிறைந்து வெள்ள நீரால் சூழப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. (406)

# கிளிநொச்சி 50 வீட்டுத்திட்ட வேலைகளை வவுனியா அலுவலகம் கண்காணிக்கும்

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 50 வீட்டுத்திட்ட வேலைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களின் நலன்கருதி கிளிநொச்சி மாவட்டம் அறிவியல் நகரில் கிளிநொச்சித் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் 50 வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதனை மேற்படி சபையின் உத்தியோகத்தர்களே கண்காணித்து வந்தனர். ஆனால் இந்த வீட்டுத்திட்டத்தில் காணப்பட்ட தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாக இதனைக் கண்காணிக்கும் பணி வவுனியா தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமூகத்தில் இந்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக பார்வையிடுவதற்காகக் கொழும்பிலிருந்து வந்த பொறியியலாளர் குழு இதில் காணப்பட்ட காலதாமதம், தொழில்நுட்ப சீர்கேடு ஆகியவற்றை உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். இதைத் தொடர்ந்து இந்த வீட்டுத்திட்டத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-115)

# நிரந்தர நியமனம் கோரி கவனயீர்ப்பு போராட்டம்; வன்னியில் தொண்டர் ஆசிரியர்கள் நடத்த ஏற்பாடு

**பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர் ஒன்றியம் தெரிவிப்பு**

கிளிநொச்சி, ஜன.9

நிரந்தர நியமனம் கோரி வலயக் கல்வி அலுவலகங்கள் முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தை கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்குக் கல்வி வலயங்களைச் சேர்ந்த தொண்டராசிரியர்கள் 12 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளவுள்ளதாக மேற்படி வலயங்களின் தொண்டராசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் விடுவிக்கப்படாத பகுதியில் சேவையாற்றி நிரந்தர நியமனம் வழங்கப்படாது பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே மேற்கண்டாவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களின் தொண்டர் ஆசிரியர்களால் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுவிக்கப்படாத பகுதியில் சேவையாற்றிப் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒன்றியத்தின் தலைவராக சி.நகுலேஸ்வரன், செயலாளராக சி.சியேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகத்தினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக யுத்த சூழலிலும் கஸ்டங்களின் மத்தியிலும் எந்தவித வேதனமும் இன்றிச் சேவையாற்றி நிரந்தர நியமனம் மறுக்கப்பட்ட நிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட புதிய ஒன்றியம் சில தீர்மானங்களை எடுத்துள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் வலயக் கல்வி அலுவலகங்கள் முன்பாக நிரந்தர நியமனம் கோரிக் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளல், இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து உரிய தீர்வு கிடைக்காவிடின் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் பணிமனை முன்பாகக் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்துதல் போன்ற விடயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. (க-201-15)

# கிளிநொச்சி மாகாதேவா ஆச்சிரமத்துக்கு உதவுமாறு கேட்கிறார் தலைவர்

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி மாகாதேவா ஆச்சிரம சைவச்சிறார் இல்லத்துக்கு அனைவரும் மனமுவந்து உதவ முன்வருமாறு சைவச்சிறார் இல்லத் தலைவரும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பிராந்திய ஆணையாளருமாகிய தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னிப் போருக்குப் பின்னர் கிளிநொச்சி ஜெயந்திநகர் மாகாதேவா ஆச்சிரம சைவச்சிறார் இல்லம் மீளக் கட்டியெழுப்பப்பட்டு வறிய சிறுவர்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாடு முன்னெடுக்கப்படுகின்றது மேற்படி மாகாதேவா ஆச்சிரமச் சிறார்களின் உணவு, கல்விவசதி மற்றும் பிறதேவைகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியத் தேவை எழுந்துள்ளது எனவே எமது நாட்டிலும் புலம்பெயர் பிரதேசங்களிலும் உள்ள தமிழ் உறவுகள் மற்றும் பரோபகாரிகள் உதவ முன்வர வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த போரின்போது இந்த அச்சிரம சைவச்சிறார் இல்லம் முற்றாக அழிவடைந்தது. இதனால் சொத்துக்களுக்கும் கட்டடங்களுக்கும் பல மில்லியன் ரூபா அழிவு ஏற்பட்டது. தற்போது எமது உறவுகளின் உதவியுடன் 60 வீதம் மீளக் கட்டியெழுப்பப்பட்டு அபிவிருத்தி இடம்பெற்றுள்ளது.

இந்த ஆச்சிரமம் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களை மையமாகக் கொண்டு விதவைகள், அநாதைகள் மற்றும் கைவிடப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இயங்கி வருகின்றது. எனவே அனைவரும் உதவிகளை வழங்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-302)

# பூநகரிப் பிரதேசம் கரிக்கட்டுக் குளத்தில் தண்ணீரைச் சுத்திகரிக்கும் சாதனம்

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்திலுள்ள கரிக்கட்டுக் குளத்தில் நீரைச் சுத்திகரித்து குடிதண்ணீராக வழங்கும் நீர் சுத்திகரிப்பு இயந்திர சாதனமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பூநகரி 66 ஆவது படையணியின் தளபதியான வன்ன கொடித்துவக்குவின் நெறிப்படுத்தலின்கீழ் இராணுவத்தின் பங்களிப்புடன் இதை நிறுவும் பணிகள் இடம்பெற்றன.

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவின் கோரிக்கையொன்றுக்கு அமைய ''வோர்ட்டர் விஷன்'' சர்வதேச நிறுவனம் இதற்கு 25,000 அமெரிக்க டொலர்களை வழங்கி உதவியுள்ளது. இச் சுத்திகரிப்பு இயந்திர சாதனம் மூலம் நாளொன்றுக்கு 10000 லீற்றர்கள் வரையிலான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் மக்களுக்குக் கிடைக்கும்.

இதை நிறுவும் விழாவில் உரையாற்றிய சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கருத்து வழங்குகையில்:

இனங்களுக்கிடையில் நட்புறவை வளர்ப்பதற்கு ஏதுவாக கிளிநொச்சி மாவட்டப் பூநகரி மக்களுக்குக் குடிதண்ணீர்த் திட்டமொன்றை நிறைவேற்றி வைக்க முடிந்துள்ளமைக்காக உண்மையில் தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும் அதேபோன்று தமது குழந்தைகளைப் பேணிக் காப்பது போலவே தமது வீட்டு நீர்நிலையையும் பேணிக்காத்து பராமரிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

நீரை வீண்விரயம் செய்யாது உரிய பயனைப் பெறுமாறும் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்த விழாவுக்கு கிறிஸ்தவப் போதகரான சாம் ராஜசூரிய, கிளிநொச்சி பாதுகாப்புப் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு, 66 ஆவது படையணியின் தளபதி வன்ன கொடித்துவக்கு ஆகியோரும் பெருமளவிலான பொதுமக்களும் வருகை தந்திருந்தனர். (க-22)

# அதிபருக்கு அலுவலகம்

பூநகரி, ஜன.9

பூநகரி மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தமது நிர்வாகக் கடமைகளை ஆற்றும் பொருட்டு தனியான அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அதிபருக்கான அலுவலகம் மிகவும் துரிதகதியில் சென்ற பாடசாலை விடுமுறை நாள்களில் உயர்தர வகுப்புக் கட்டடத் தொகுதியுடன் இணைத்ததாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக வகுப்புக்கள்

யாழ்.நகரில் உள்ள பிரபல பாடசாலையில் 35 வருட காலம் கணிதம் கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியரால் ஆண்டு 6-11 வரை தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் கணிதம் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொ.பே:0214901637

## வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கருகில் சகல வசதிகளுடன் தனியறையும், அத்துடன் சமையல் செய்து சம்பாதிக்கக்கூடியவருக்கு சமையலறையுடன் படுக்கையறையும் வாடகைக்குண்டு. தங்கள் கைத்தொலைபேசி உட்பட சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 4105 C/o உதயன், 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

## கைதடியில் லயன்ஸ் கழகம் தொடக்க நிகழ்வு

தென்மராட்சி, ஜன.9

யாழ்.மாவட்டத்தின் 21ஆவது லயன்ஸ் கழகமாக கைதடி லயன்ஸ் கழகம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைக்கப்படவுள்ளது

சாவகச்சேரி பிரிவு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ள மேற்படி புதிய கழகத்தின் ஆரம்ப கால நிர்வாகிகள் பதவியேற்பு இடம் பெறும்.

சாவகச்சேரிபிரிவு லயன்ஸ்கழகத்தலைவர் லயன் தி.முருகதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306பி1மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவத்சலன் கலந்துகொள்வார்.

(201-207)

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை தம்பையா



வடமராட்சி, கெருடாவில், தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும் அராலி வீதி, சங்கானையை வதிவிடமாகவும் தற்போது லண்டன், ஈஸ்ற்ஹாம் நகரில் வசித்தவருமாகிய முருகுப்பிள்ளை தம்பையா 30.12.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியரின் அருமை மருமகனும் இராஜேஸ் வரியின் அருமைக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (Co-Op,பரிசோதகர், கெருடாவில்), புஸ்பராணி, சிவக்கொழுந்து மற்றும் தங்கம்மா (கனடா), செல்லத்துரை (இளைப்பாறிய தபால் அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரன் (லண்டன்), சரோஜினிதேவி (கனடா), ஜெகதீஸ்வரன் (லண்டன்), சத்தியானந்தவதி (ஜேர்மனி), குணதீஸ்வரன் (லண்டன்), லோகேஸ்வரன் (வசந்தன்-Toronto), தவனேஸ்வரன் (மோகன்-Lugano), நகுலேஸ்வரன் (Chandran -Zurich), சிவனேஸ்வரன் (சிவா-நியூயோர்க்), இராஜநந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கெங்காதேவி (இலங்கை), வேலாயுதம்பிள்ளை (லண்டன்), கணேஸ்வரி (லண்டன்), துரைராஜா (ஜேர்மனி), ஜெயந்தினி (லண்டன்), கோகிலா (கனடா), பிரியாந்தி (Lugano-சுவிஸ்), சுஜாத்தா (சூரிச்-சுவிஸ்), தர்சினி (நியூயோர்க்), சண்முகவடிவேல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ராஜினி, ரோகினி, உமா, ரமா, பாமினி, பார்த்தீபன், சுபாஜினி, கீதா, ஜெயதர்ஷன், ரமேஸ், கிரிசாந்தி, நிசாந்தி, குணதீபன், சங்கீதன், தினேஷ், அபித், பிரிசில்லா, யோயல், ஜோஸ்சுவா, நிதர்ஷன், சந்திகா, சுமாயா, சுமிலா, தாருண்யா, மோகிநாத், ஜஸ்சினியா, ஜெனுஷன், நிருஷன், கிரிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2011) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
பேர்த்தி - த.ராஜேஸ்வரன் (மகள்),
ரஞ்சித்குமார்-ராஜினி
T.P. No :- 024 5684037
H.P. No :- 077 2056103

நெளுக்குளம்,
வவுனியா. (வி/574443)

## கலை நிகழ்வு

பருத்தித்துறை வெண்நிலா சிறுவர் கழகத்தின் கலை நிகழ்வு இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் செல்வி பி.துஷ்யந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலகபதில் சமூக சேவை உத்தியோகத்தர் எம்.சி.சுரேந்திரா கலந்து கொள்வார்.(204-236)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA No.1புறொயிலர் குஞ்சுகள் 12.01.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

**ராஜீவ்,** நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே: 0776090926,0212222867

## தவறிவிட்டது

01.01.2011 இரவு கொழும்பிலிருந்து UNI TRAVELS BUS மூலம் யாழ் புயணித்த எமது கைக்குழந்தையின் பாலூட்டிப் பொருள்களுடன் கூடிய நீல பிளாஸ்ரிக் கூடை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எமது இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே: 0212225048

## உடன் வீடு தேவை

கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியை அண்மித்து ஒரு மைல் சுற்றாடலில் 65 லட்சத்துக்குட்பட்ட வீடு தேவை. தரகர் தேவையில்லை. உடன் காசு தரப்படும்.

விளம்பர இலக்கம் 4106,மே/பா உதயன்.
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(108758)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்யப்பட்டது 1Kg 450/= மட்டும்.

காலை 6 மணி தொடக்கம் இரவு8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர். 0212226944

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1978 5'5" கொழும்பு தனியார் கம்பனியில் உயர் பதவி வகிக்கும் மக நட்சத்திரம் மொத்த கிரக பாவம் 20½ உடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.

தொடர்பு: 0771523182 (108545)

## உடன் தேவை

ஒப்செற்மிசின் (Offset) (டேவிற்சன்) வேலை செய்யக்கூடிய ஒருவர் உடன் தேவை.

தொடர்பு: 0773979388
(சி- 574302)

## தேவை

வயோதிபத் தாயாரை தங்கியிருந்து கவனிக்க 40 வயதிற்கு மேற்பட்ட ஒரு பெண் உதவியாளர் தேவை. பொறுப்புகளற்றவர் விரும்பத்தக்கது. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு: 0779401002

## வேலையாள்கள் தேவை

இல.27, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலியில் அமைந்துள்ள போன் சொப் உடன் கூடிய Net Cafe இற்க்கு வேலையாள்கள் தேவை. Computer அறிவுடன் கூடிய இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

தொ.பே:021222 0066.

## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three-month English course for School leavers/Job seekers.
- The Course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the programme.
- Free Handouts.

Commencement 17th Jan 2011

Lessons on Weekdays from 3.30 - 5.45 p.m.

Application Forms could be obtained at the College office.

**Closing Date: 14th Jan 2011**

*English Language Teaching Unit*
*St. John's College, Jaffna*

## தைப்பூசம் அன்று (January 20) BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் வித்தியாரம்பம். மட்டுப்படுத்தப்பட்ட புதிய அனுமதிகள் ஏற்கப்படும்.

- 10 வருடமாக சர்வதேச தரத்திலான BBS இன் ஆங்கிலக் கற்கை நெறிகளால் யாழ்குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பயன் பெற்றுள்ளார்கள்.
- இது வரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதி சிறந்த பாடசாலைகளில் கற்பதற்கு அனுமதி பெற்றிருப்பதுடன் 5ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்.
- யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்கென் இயங்கிய ஒரே ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலை.
- அன்றிலிருந்து இன்று வரை அனைவரும் செலுத்தக் கூடிய ஒரே கட்டணம்.
- உங்கள் வசதி கருதி யாழ்குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான வளாகங்கள்.

**Dr. Maria Montessori & Canadian Early Learning Method** ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்.

### பாலர் பிரிவுகள்

**Play Group ( 2+ சிறார்களுக்கு)**
- Sensorial Activities
- விளையாட்டுகளுடன் கூடிய அதிநவீன கற்கை நெறிகள்.
- Song, Poems, Nursery Rhymes, Drama & Dialogue

**Montessori ( 3+ சிறார்களுக்கு)**
- மொழி அறிமுகம் - ஆங்கிலம் (Speech Skills) - தமிழ்
- எழுத்து அறிமுகம் - ஆங்கிலம் (Writing Skills) - தமிழ்
- எண் பயிற்சிகள் (Arithmetical Operations)
- Sensorial Activities
- Song,Poem,Drama,Dialogue

**Pre School ( 4+ சிறார்களுக்கு)**
- எண், எழுத்து கருதுகோள்
- ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
- Sensorial Activities
- Song,Poem,Drama,Dialogue
- அடுத்த கல்வியாண்டுக்கான முழுத் தகுதி நிலை

### பாட விதானம்

- பாடசாலை ஆரம்பம் காலை 7.30
- பாடசாலை முடிவு மதியம் 12.30
- வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச் செயற்பாடுகள்
  - Language Skils- English - 5 Hrs
  - Language Skils- Tamil - 4 Hrs
  - Maths - 4 Hrs
  - Sensorial Activities - 2 Hrs
- Song,Poem,Drama,Dialog - 2 Hrs
- Art and Craft - 2 Hrs
- Play Activities - 3 Hrs
- Baratha Natyam - 1.5 Hrs
- Computing - 1.5 Hrs

### எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்

- English Day & Concert - ஆங்கில தின கலைவிழா
- Sports Day- விளையாட்டு விழா
- Bharatham Festival- பரத நாட்டிய விழா
- Art & Craft Exhibition- சித்திர கைவேலைக் கண்காட்சி
- Muthamilzh Vizhla- முத்தமிழ் விழா
- Pre-School Graduation and Carol Ceremony

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர்: | 140, கோயில் வீதி நல்லூர். |
| கோப்பாய்: | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி: | 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி: | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்-1: | 252, ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய்-2: | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம்: | Lakshmi(புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி: | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |
| சங்கானை : | நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை |

British Business School — Where Students Come First

வெளிநாடுகளில் தேர்ச்சி பெற்ற கல்வியாளர்களால் சர்வதேச தரத்திற்கமைய நடாத்தப்படும் கல்வி நிலையம்.

## BRITISH BUSINESS SCHOOL

140, கோயில் வீதி, நல்லூர். ... 077 362 7055, 077 408 3656, 077 664 6357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுக் குற்றச் செயல்களின் பின்னணியில் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களும் இருக்கலாமாம்

## நாடாளுமன்றில் இப்படி சந்தேகம் தெரிவித்தார் வீரவன்ஸ

யாழ். குடாநாட்டுக் குற்றச் செயல்களின் பின்னணியில் சமாதானத்தை விரும்பாத தமிழ்க் கூட்டமைப்பின் சில உறுப்பினர்களும் இருக்கலாமென அமைச்சர் விமல் வீரவன்ஸ சந்தேகம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களின் பின்னால் அரசாங்கம் இருப்பது போல் ஒரு மாயையை ஏற்படுத்த சிலர் முனைகின்றனர். இது ஒருபோதும் வெற்றியளிக்காது. புனர்வாழ்வு பெற்று விடுதலையானவர்களே இந்தப் பின்னணியில் இருப்பதாகப் பாதுகாப்புப் படையினர் சந்தேகம் கொள்கின்றனர். அத்துடன் அங்குள்ள பாதாளக் குழுக்களும் இதனுடன் தொடர்புபட்டுள்ளன. இந்தியப் பிரதமரைக் கொலைசெய்ய விடுதலைப் புலிகள் முயற்சிப்பதாக அந்த நாடு கூறுகின்றது. எனவே புலிகளின் செயற்பாடுகள் இல்லையெனக் கூறிவிடமுடியாது.

அத்துடன்இயல்புநிலையைக் குழப்ப தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் கூட இவ்வாறான செயல்களில் ஈடுபடமுடியும். ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகள் இதில் ஈடுபட்டிருக்கலாம். குடாநாட்டு குற்றச்செயல்கள் தொடர்பில் கேள்வி எழுப்பும் சிலர் அவசரகாலச்சட்டத்தைத் தேவையில்லையென்று கூறி எதிர்த்து வாக்களிக்கின்றனர். எம்மைப் பொறுத்தவரை தற்போதுள்ள இந்தச் சட்டம் போதுமானதல்ல. இன்னமும் அது கடுமையானதாக்கப்பட வேண்டும். அப்போதுதான் இவ்வாறான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

அரசு இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதற்கு எந்தத் தேவையும் இல்லை. தேர்தல் வரும் நிலையில் அரசு இப்படிச் செயற்படுமா? ஜனாதிபதி கூறித்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட நாடாளுமன்றத்தில் யாழ். குடாநாட்டு நிலைமை தொடர்பில் அறிக்கை விட்டார். அந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காகவே ஜனாதிபதி அறிக்கை விடுமாறு கூறினார். அந்தளவுக்கு இந்த விடயத்தில் அரசு அக்கறையுடன் இருக்கின்றது.

வடக்கு மக்களை இனவாத ரீதியில் உசுப்பிவிட்டு உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவே இந்தத் திட்டமிட்ட செயல்கள் இடம்பெறுகின்றன.

பிரதம நீதியரசர் தொடர்பில் பொய்யான தகவல்களைப் புலிச்சார்பு ஊடகங்கள் மூலம் வெளியிட்டும் பெரும் குற்றச்செயல்கள் இடம்பெறுவது போலக் காட்டியும் தமது தேவைகளை நிறைவேற்றச் சிலர் முயற்சிக்கின்றனர். இதன் மூலம் வக்கிரமான சந்தோஷத்தை அடைய முயற்சிக்க வேண்டாம் - என்றார். (ஓ-15)

# பிரதி அமைச்சர் நீதிமன்றின் முன்தோன்றி வாதிட முடியும்

## ஐ.தே.கவின் கேள்விக்கு சபாநாயகர்

கொழும்பு, ஜன. 9

பிரதிஅமைச்சர் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிடுவது எந்த வகையிலும் நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறிய செயலாகாது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஜோன் அமரதுங்க, அமைச்சர் ஒருவரோ அல்லது பிரதி அமைச்சர் ஒருவரோ நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிடமுடியாது. ஆனால் நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறும் வகையில் பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா கடந்த வியாழக்கிழமை தனது கட்சிக்காரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்டுள்ளார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கௌரவத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் ஒரு செயலாகும். எனவே இவ்விடயத்தில் சபாநாயகர் கூடுதல் கவனம் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என சிறப்புரிமைப் பிரச்சினையை சபையில் எழுப்பினார்.

இவ்விடயம்" தொடர்பாக ஒழுங்குவிதிகள் பரிசீலிக்கப்பட்டு நாளை (இன்று) சபையில் அறிவிப்பதாகச் சபாநாயகர் தெரிவித்தார். இதன்படி நேற்று முன்தினம் சபை கூடியபோது "கௌரவ உறுப்பினர் ஜோன் அமரதுங்க எழுப்பிய சிறப்புரிமை மீறல் தொடர்பாக நான் நன்கு பரிசீலனை செய்தேன். அதன்படி கௌரவ அமைச்சராகப் பதவி வகிக்கும் ஒருவர் நீதிமன்றங்களில் வாதிடுவது தவிர்க்கப் படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பிரதி அமைச்சர்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதன் அடிப்படையில் டாக்டர்களாகத் தொழில் பார்க்கும் உறுப்பினர்கள் தமது தொழிலைச் செய்வதுபோல் சட்டத்தரணிகளாக இருப்பவர்களும் தமது தொழிலைச் செய்யலாம்.

எனவே பிரதி அமைச்சர் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்டமை சிறப்புரிமை மீறிய செயலாக அமையாது, என்று சபாநாயகர் கூறினார். (ஓ-சி)

# படையினருக்கு வீடுகள் கட்ட அதிகாரிகள் டிக்கெற் விற்பனை

கொழும்பு, ஜன. 9

படையினருக்குவீடுகள்அமைப்பதற்காக படை உயர் அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று டிக்கெற் விற்பனை செய்து பணம் திரட்டுகின்றனர் என்று ஐ.தே. கட்சி நேற்றுக் கூறியது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய வடமேல்மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சமல் பிரசன்ன சேனரத்தே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

படையினருக்கு வீடுகள் உட்பட அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று அரசு தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தது. இந்த வாக்குறுதி மூலமே அரசு படையினரின் குடும்ப வாக்குகளைப் பெற்றது.

தேர்தல் முடிந்ததும் படையினருக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் அரசு மீறிவிட்டது. இதனால் படையினருக்கு வீடுகள் அமைப்பதற்காகப் படை உயர் அதிகாரிகள் வீடு வீடாகச் சென்றும், வீதிகளில் வாகனங்களை நிறுத்தியும் டிக்கெற் விற்றுப் பணம் திரட்டி வருகின்றனர்.

யுத்தத்தை வென்று கொடுத்த படையினருக்கு அரசு ஏற்படுத்தும் அவமானமாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

அவர்களுக்கு இதன் மூலம் அரசு அகௌரவத்தை ஏற்படுத்தி விட்டது.

படையினர் அவர்களின் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கும் கஷ்டப்படுகின்றனர். இந்த விடயத்தில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை.

இதையிட்டு நாம் மிகுந்த கவலையடைகின்றோம் - என்றார். (ஓ-சி-2)

# புலிகளிடமிருந்து கிழக்கை மீட்டெடுத்த போது ஒரு பொதுமகன் கூடக் காயமடையவில்லை

## ஜனாதிபதி கூறுகின்றார் இப்படி

கொழும்பு, ஜன. 9

புலிகளிடமிருந்து கிழக்கை மீட்டபோது ஒரு பொது மகனுக்காவது சிறுகாயம் கூட ஏற்படவில்லை. அப்படியானால் வடக்கை மீட்டபோது மாத்திரம் ஏன் வேறு விதமாகப் பார்க்கவேண்டும். முழுதாக நாங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு உலகிலுள்ள கொடூரமான பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையே அல்லாமல் வேறொன்றும் இல்லை.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை கடுவெல வாசிகசாலை கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்துப் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்தியாவிலிருந்து வந்த சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியரொருவர் என்னைச் சந்திக்க வந்தார். அவர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள்சிறந்த முறையில் இடம்பெற்றது எனத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தினால் நாம் 30 வருடங்களாகப் பல்வேறு துன்பங்களை அனுபவித்தோம். அச்சத்துடனும் சந்தேகத்துடனும் வாழ்ந்தோம்.

இப்போது அதிலிருந்து நாங்கள் மீண்டுள்ளோம்.

பயங்கரவாதிகள் சேதப்படுத்திய வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகிய அனைத்தையும் நாம் மீளக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

அத்துடன் இந்த நாட்டை பெரும் அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்கின்றோம்.

நான் இந்தியாவுக்குச் சென்ற போது அங்குள்ள எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்தேன். அவர் "நாங்கள் இந்தியாவில் அரசை கடுமையாக விமர்சிப்போம், அவர்களது சகல நடவடிக்கைகளையும் கண்டிப்போம். இருந்தும் கொள்கை அளவில் வெளிநாடுகளில் எமது நாட்டை விமர்சிக்க மாட்டோம்"- எனத் தெரிவித்தார்.

எமது நாட்டுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை நிறுத்தும்படி சில தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

சில அரசியல்வாதிகளுடன் சில அரசசார்பற்ற நிறுவனங்களும் சேர்ந்துகொண்டன.

நாட்டைப் பற்றிச் சிந்தியுங்கள். தேர்தலின்போது என்னை விமர்சியுங்கள்.

ஆனால் சர்வதேச ரீதியில் நாட்டைக் காட்டிக் கொடுக்க முயற்சிக்காதீர்கள் - என்றார் ஜனாதிபதி. (ஓ-சி)

# வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 9

தீவிரவாதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களை அமைக்க உள்ளோம் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தச்) சட்ட மூலத்தை நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தச்) சட்ட மூலத்தின்கீழ் குற்றம்சுமத்தப்பட்டுள்ளவர்கள் மாகாண ரீதியிலான மேல் நீதிமன்றங்களில் பிணை கோரக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தச் சட்ட மூலத்துக்கு அமைய, நீதவான் நீதிமன்று மற்றும் மாவட்ட நீதிமன்றங்களிலும் வழக்குகளை விசாரிக்க முடியும்.

மேல் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளைக் குறைக்கச்செய்வதே எமது நோக்கமாகும். இதற்காக சில மாவட்டங்களில் மாகாண மேல் நீதிமன்றங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

சில நீதிமன்றங்களில் 10 வருடங்களுக்கும் அதிகமாகத் தீர்க்கப்படாத 800 வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன.

இவற்றைத் தீர்க்க ஓய்வு பெற்ற நீதிபதிகளை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தச்) சட்ட மூலத்தின்படி பல மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களும் விடுதலை பெறக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார். (சி)

# அடகு வைக்கக் கொண்டு வந்த நகை வங்கியின் முன் வைத்தே கொள்ளை

கொழும்பு, ஜன.9

சிலாபம் நகரில் உள்ள அரச வங்கியொன்றில் அடகு வைப்பதற்காக பெண்ணொருவர் கொண்டு வந்த 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்துடன் இருந்த கைப்பை அந்த வங்கியின் முன்பாகவே பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.


இந்தச் சம்பவம் தொடர்பாக சிலாபம், தெதுறு ஓயா பிரதேசவாசியான அவிராசோனாலி சேரசிங்க (25) எனும் பெண் சிலாபம் பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்திருப்பதாவது:

சம்பவதினம் அவசர தேவை ஒன்றுக்காக நகைகளை அடகு வைத்து பணம் எடுக்க வங்கிக்கு வந்தேன். கைப்பையில் மூன்று லட்சத்து 91 ரூபா பெறுமதியான நகைகளும், 5 ஆயிரம் ரூபா பணமும் இருந்தது.

வங்கியின் முன்னால் நான் வந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் கீழிறங்கி எனது கழுத்தை நெரித்தவாறு கழுத்தில் இருந்த சங்கிலியைப் பறிக்க முயன்ற வேளை கையிலிருந்த பை கீழே விழுந்தது. அதனையெடுத்துக் கொண்டு இருவரும் தப்பிச் சென்று விட்டனர் என அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (204-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுர பக்தி கொஞ்சும் ஆண்டாள் பாடல்கள்




மார்கழி மாதமென்றால் இந்து மதத்தவர்களின் ஞாபகத்திற்கு வருவது திருப்பாவை, திருவெம்பாவை விரதங்களாகும். திருப்பாவை வைஷ்ணவர்களுக்கும் திருவெம்பாவை சைவர்களுக்கும் உரியதாகும். திருவெம்பாவை பக்திக்கும், திருப்பாவை மதுரபக்திக்கும் முதலிடம் கொடுத்துள்ளது. பக்தி நெறியாலே இந்தப்பாரில் மக்கள் எய்திடும் மேன்மைகள் அதிகம் என்பது அனுபவத்தால் உணர்ந்த மெய்யன்பர்களின் கருத்தாகும். அந்த வகையில் தெளிவான ஞானத்தையும் உண்மையான இறைநிலையினையும் நமக்கு உணர்த்துவதற்காக இறைவனால் அனுப்பப்பட்டவர்கள்தான் ஆழ்வார்கள். பக்திநெறியின் ஆழம்கண்ட அவர்கள், பக்தி நெறியை உருவாக்கி ஆன்மாக்கள் பின்பற்ற வேண்டிய நெறி முறைகளை வகுத்துக் கொடுத்தார்கள்.

பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ்வாரின் வளர்ப்புப் பிள்ளையான ஆண்டாள் ஒரேயொரு பெண் ஆழ்வார். இவர் வைஷ்ணவ பக்தி நாயகி, உலகின் முதல் சிறந்த பெண்கவியும் கூட.நாச்சியார் திருமொழி, திருப்பாவை என்பன இவரால் பாடப்பெற்ற சிறப்புவாய்ந்த நூல்களாகும். சிறுவயது முதலே கண்ணன்பால் பக்திகொண்டு வளர்ந்தாள் கோதை. கண்ணனை இலயித்துக் காதல் கொண்டாள். பெரியாழ்வார் கண்ணனுக்காகத் தொடுக்கும் மாலையைத் தான் சூடி அழகுபார்த்தாள். அவளன்பு காரணமாக "அவள் சூடிக்கொடுக்க அீதைக் கொணர்ந்தே எனக்கு சூட்டுமின்" என்று இறைவனின் அனுமதியும் பெற்றவள். அதனால் "சூடிக் கொடுத்த சுடர்கொடியானவள்."

*"மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்*
*பெண்மையைத் தலைமையுடைத் தாக்கும் வண்ணம்*
*கேசவ நம்பியைக் கால் பிடிப்பேன்"* என்று இறைவனையே நினைத்து திருவரங்கத்தில் அரங்கநாதனின் காலடி பற்றிப் பக்தி ஒளியில் கலந்தாள் ஆண்டாள்.

இவரது பாடல்கள் இலக்கணச் சுவை, இலக்கிய நயம், பெண்மையின் உணர்வியல் வெளிப்பாடு, இரஸச்செறிவு, சடங்குநெறி போன்ற பலவித அழகியல், உளவியல் நோக்குகளில் ஆராயக்கூடியவை. மதுர பக்தியால் மாயவனைப் பாடிய நாச்சியார் திருமொழிப்பாடல்கள் அழகிய கனவுப்பாடல்களாக அமைக்கப்பட்டுள்ளன. அன்பிற் தொடங்கி கருணையிற் கலந்து இறைவனின் திருவருளமுது கிடைக்கப்பெற்றவள்; பக்தி நிலையில் நாயக- நாயகி பாவனையில் இறைவனை அடைந்தாள். இறைவனான பரமாத்மாவிடம், ஆண்டாளாகிய ஜீவாத்மா கொண்ட காதலானது மதுரபக்தியாகப் பாடல்கள் எங்கும் விரவியிருப்பதைக் காணலாம். 'ஔசித்யம்' எனப்படுகின்ற மனிதருடைய யதார்த்தமான உணர்ச்சி வெளிப்பாடுகளைத் தனது பாடல்களினூடாக வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

தனது மன எண்ணக் கிடக்கைகளைக் கனவு (பொய்) என்கின்ற நிலையினூடாகத் தோழிக்கு எடுத்துக் கூறுவதாக அமைந்த பாடல்கள் தோறும் 'ஸ்ருங்காரம்' முக்கியப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் அடிப்படையில் தோன்றும் வீரம், மகிழ்ச்சி போன்ற ஏனைய சுவைகளும் கூடியிருப்பதைக் காணலாம்.

*"கருபூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?*
*திருப்பவளச் செவ்வாய்தான் தித்திக்குமோ?*
*மருப்பு ஒசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்*
*விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் . ஆழி- வெண்சங்கே"*

இங்கே பெருமாளின் கையிலிருக்கும் வலம்புரிச் சங்கிடம் எம்பிரான் திறத்தைப்பற்றி கேள்விக் கணை தொடுப்பது அக உணர்வியலில் சிற்றின்ப உணர்வு பேதங்களை உள்ளுரையாகக் கொண்டிருந்தாலும் அதுவே ஆண்டாளின் 'ஜீவன் முத்தி' யாகிய பேரின்பத்தத்துவ விளக்கமாகிறது. இதுவே 'பஹிர் சிருங்கார அந்தர் பக்தி' என்றும் கூறப்படுகின்றது.

*"மனதுக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்..."*

என்கிறாள். கண்ணன் அன்பு செலுத்துவதில் கள்ளம் கபடம் உள்ளவன். அவன் மனதை ஏங்கவிட்டு மாயம் செய்பவன். ஆனால் அவனது அவதாரமான இராமன் பெண்கள் எல்லோர் மனதிலும் இடம்பிடித்தவன். ஆனால் தன் மனதில் சீதாவை மட்டுமே எண்ணியிருக்கும் 'ஏக பத்தினி விரதன்.'' இதனையிட்டே அவன் பெண்கள் மனதிற் மட்டுமல்ல தன் மனதிற்கு 'இனியன்' என்கிறாள். ஆனால் ஆண்டாள் கண்ணன் மேற்கொண்ட அளவற்ற காதலால்,

*"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*
*முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்*
*மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்*
*கைத்தலம் பற்ற..."* கனவு கண்டது மட்டுமன்றி எம்பிரானையே கணவனாகவும் அடைந்தாள்.

இவ்வாறாக இயற்கையிலே பெண்ணாகவும் அழகிய கண்ணனுக்கு நாயகியாகவும் ஆண்டாள் பாடிய பாடல்கள் இன்று நாம் வாய்மொழியால் பேசும் 'தெய்வீகக் காதலை' சிறப்பாக வெளிப்படுத்தியிருப்பதைக் காண்கின்றோம். பெண்ணாக இருந்து பெண்ணியல் உணர்வுகளை அனுபவரீதியாக உணர்ந்து பாடியமையால் மார்கழி மாதமொன்றால் 'கோதையின் பாடல்கள் ஞாபகம் வருவதில் வியப்பில்லை.

அ.உமாமகேஸ்வரி,
உடுவில் தெற்கு.

* * *

# விடியல் தேடும் அஸ்தமனங்கள்

உதயன் 25
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில்
பாராட்டுப் பெற்ற சிறுகதை 1



நிலவின் வெளிச்சம் அந்தப் பிரதேசத்துக்கு ஒரு வித அமைதியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. பச்சை மரங்களின் மேல் இலைகள் வெள்ளித் துண்டங்களாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. வழமைபோலில்லாது இன்றுமட்டும் ஒரு காட்டுக் குருவியின் மெல்லிய சப்தம் காற்றில் கலந்து அமிழ்ந்திற்று. குப்பிவிளக்கு காற்றின் அசைவிற்கு ஏற்பச் சுழன்று நிமிர்ந்து எரிந்து கொண்டிருந்தது. அதிகாலை மூன்றுமணி இருக்கும். மேனி தொட்டுக் கடந்துபோன காற்று மயிர்க்கால்களைச் சிலிர்த்து விட்டுப்போனது.

அருகில் கிடந்த குழந்தையை அணைத்துக் கொண்டாள் அவள். பிறந்து ஒன்பது மாதங்களேயான பிஞ்சுக் குழந்தையின் விழிகள் சங்குமடல்களாய் மூடிக்கிடந்தன. போர்வையை விலக்கி வெளியே மிதந்த பிஞ்சுப் பாதங்களைக் குளிர் தொட்டுவிடக்கூடாதென்ற எண்ணம் தோன்றிற்று அவளுக்கு. அந்தக் குழந்தையைத் தொட்டணைக்கும் போதும், உயிர்கலந்து தனை மறந்து பாலூட்டும் போதும் அவள் வாழ்வின் அஸ்தமனத்தின் அறிமுகமாய் அவள் பார்த்ததில்லைத் தன் மகவை.

அவளுக்கு வெறுப்பாய் இருந்தது. முகவரி தொலைத்த வாழ்க்கைக்கு அவள் பெயர், அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் ஏதும் அறியாமல் அவள் முகம் பார்த்துச் சிரிக்கும் அந்தக் குழந்தை மீது அவளுக்குப் பாசம் பொங்கிவிடும் "இனிஷியல்" தெரியாத அந்தப் பாலகன் மீது பச்சாதாபம் ஏற்படும். தன்னுடைய நிகழ்காலம் மறந்த அவளது தாய்மையுணர்வு அத்தனை கசப்புணர்வுகளையும் மறந்து எட்டிப்பார்க்கும்.

இமைகள் மூடி உள்ளம் நழுவி நழுவி நினைவுகள் உருவழிந்து ஆழ்துயில் கொள்ளும்போது மண்டைக்குள் உட்கார்ந்து மரங்கொத்தி ஒன்று குடையத் தொடங்கும். இப்படியே அவள் உறக்கம் தொலைத்த இரவுகள் ஏராளம். கண்களிலிருந்து கன்னம் வரை கோடுகிழித்த கண்ணீர்த்துளிகள் அவளின் கொடுமையான தனிமைக்குச் சாட்சியங்கள். விலகி ஓடும் நிலவை விரட்டுகின்ற மேகக் கூட் டங்களாய்த் தொடருகின்ற நினைவுகளின் மிரட்டல்களால் உறக்கம் தொலைத்துவிட்டிருந்தாள் நந்தினி. அவளின் நினைவுகள் பயங்கரம் சூழ்ந்த அந்தக் கொடிய காலத்தைச் சூழ்ந்து கொண்டன.

கறுப்புச்சேலை போர்த்திக் கொண்ட இரவு, ஊசி விழும் சத்தத்தையும் உரத் தொலிக்கச் செய்யும் நிசப்தம். அன்று விடிந்ததிலிருந்து பீரங்கிகளின் முழக்கங்களையும், துப்பாக்கிகளின் சத்தங்களையும் பெருகவிட்டு ஓய்ந்திருந்தது அந்தப்பகல். அடுத்து என்ன நிகழப்போகின்றது என்ற பயத்துடன் ஒவ்வொருவரும் உயிர்காக்கும் வழிதேடி விழித்தபடி. தூரத்திலிருந்து சத்தம் சிறிது சிறிதாய் அதிகரித்துப் பின் காற்றைக் கிழித்துவரும் பேரிரைச்சலாய் மாறியது. எல்லோரும் ஒருகணம் தம் இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டார்கள்.

இப்போது அவர்களின் கூடாரங்களுக்கருகில் "கும்" என்ற சத்தம். நந்தினி உட்படச் சிலரைத் தவிர ஏனையோரைத் தொலைத்தடங்கிய, ஏனையோரைத் தனக்குள் எடுத்த கோரம். மறுநாள் காலை அப்பகுதி முழுவதும் இயந்திரத் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கின. ரவைகள் அந்தக் கூடாரங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் பாய்ந்தன. அத்தனை அறிவிப்புகளும் அவர்கள் பாதுகாப்புத் தேடிய அந்த இடம் முழுவதும் படையினர் வசமாக்கப்பட்டு விட்டதென்பதாகவே இருந்தன.

"தொப்.....தொப்".... என்ற சப்பாத்துக்களின் சத்தங்களுடன் தோட்டாக் கோர்வைகளின் சத் தங்களும் சேர்ந்தே ஒலித்தன. ஒவ்வொரு கூடாரங்களையும் மனிதக் கண்கள் வேட்டையாடின.

இறுதி நொடிகள்...
இரக்கமற்ற பொழுதுகள்....

வயது வாரிக் கொட்டியிருந்த அவளின் அழகு அந்த மனித வேட்டைக்கு இரையாய்ப் போனது. அவள் பெண்மையின் கோடியில் சேமித்த உருவமில்லாத ஏதோவொன்று இழக்கப்பட்டுவிட்டது. அவள் கண்ணீர் காயும்வரை அழுது பார்த்தாள். அந்த அழுக்கு அழியவேயில்லை. பாவி என்றோ பரிதாபத்திற்குரியவளென்றோ சொல்லத் தனக்காகப் பல வார்த்தைகள் காத்திருப்பதைக்கண்டு அஞ்சினாள். தப்பிக்கவே முடியாத சாபங்கள். கடவுளே!

மரணம் தந்துவிடு.... இதயம் கெஞ்சிற்று. இந்தப் பிரார்த்தனையோடு அவள் ஒன்றரை வருடங்களைக் கடத்திவிட்டாள். அவளின் தேடல்கள் முடக்கப்பட்டு விட்டன. காலத்தின் கண்ணாமூச்சி ஆட்டத்தில், சுழன்றடிக்கும் புயற்காற்றுக்கு எதிர்த்து நிற்க முடியாத காகிதமாய் அங்கிங்கே பறந்து இப்போ ஓர் இளஞ் சூரியனுக்குத் தாயாகிவிட்டாள். ஓர் இராமனுக்கோ, இராவணனுக்கோ வாழ்க்கைப்படாது இளமையின் சந்தோஷங்களைத் தொலைத்துவிட்ட அவள் இன்று கணவனற்ற ஓர் இளந்தாய்.

அருந்ததி அழகானந்தா,
இணுவில்.

நந்தினி.....

கரைகடந்து பாயும் நதி இவள். மனிதக் கோப்பைகள் தம்முள் நிறைத்துவிடத்துடித்த பொழுதுகள் எத்தனை? அத்தனை வேதனைகளும் அவளை ஆழமாகப் பாதித்தன. "உந்தப் பெட்டை நந்தினீன்ர புருசனுக்கு என்ன நடந்ததாம்"

வன்னீல கடைசிநேரப் பிரச்சினையில ஒருதனுக்குக் கட்டி வச்சதாம். பெடியன் செல்பட்டுச் செத்துப் போச்சு"

"ஓ..... சின்னப் பெட்டை..... இப்பவே வாழ்க்கையை இழந்துவிட்டாள்"

(20 பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DIPLOMA IN NURSING (2 years)**

**HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE**

விண்ணப்ப இறுதித் தினம் 31.01.2011
கற்கை நெறிக் கட்டணம் 750/=

க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களைத் திருச்சிலுவை சுகநல நிலையம், 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குச் சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பிவைக்கவும்.

பணிப்பாளர்,
தொ.பே.இல: 021 300 1102 - OR 222 2512


# மலேசியப் பல்கலைக்கழகத்தில் புலிகளால் அச்சுறுத்தலாம்

## உள்விவகார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜன.9

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் ஆகியவற்றின் அச்சுறுத்தல்கள் மலேசிய பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்றன என்று அந்த நாட்டின் உள்விவகார அமைச்சர் ஹிசாமுதின் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த நிலைமை தீவிரவாதத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச மற்றும் தேசிய பொலிஸாரின் உதவிகளைப் பெற்று இவர்கள் சம்பந்தமான தகவல்களைத் திரட்டி வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், முஸ்லிம் ஆயுதக் குழுக்கள், சீக் ஆயுதக் குழு என்பன தமது இயக்கங்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்களை இணைத்துக் கொள்ள முயற்சித்து வருகின்றன.

இதேவேளை, கடந்த வருடத்தில் மாத்திரம் தீவிரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 12 இற்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-சி)


**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும், மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சுத்தம் செய்யப் பட்டது.
1Kg 430 ரூபா மட்டும்.
இரண்டு கிலோவுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 1Kg 420/=படி வழங்கப்படும்.

விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ்.எஸ். நாதன்,
16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776146434

**போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்**

ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன்
யாழ்.நகரில்
1. பொன்னான மேனியும்
2. பொலிவான கூந்தலையும் தந்து
3. சகல ரோக நிவாரணியாகத் திகழும்

போலியானது சரியானது

சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில் போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க இன்றிலிருந்து தைலப் போத்தலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ண மூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே, பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.'

Manufactured By:
Sithara Product
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) ARPR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகத்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 13.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.
தொ.பே: 021222 6944
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (108538)


### கால்நடை வளர்ப்போர் கூ.சங்கத்தில் மாலை வேளையில் பால் விற்பனை

நவாலி, ஜன.9

நவாலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது மாலை நேரத்திலும் பால் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, அண்மையில் திறந்து வைக்கப்பட்ட மேற்படி சங்கத்தில் காலையில் மட்டுமே பால் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அதிகளவான பால் கிடைப்பதைத் தொடர்ந்து மாலையிலும் சங்கம் திறந்திருக்கின்றது.

எனவே மக்கள் தேவையான பால், தயிர் என்பவற்றை இங்கு பெற்றுக்கொள்ள முடியுமென விற்பனை நிலையப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (201-100)

### இலக்கத்தகடு விநியோகம்

தென்மராட்சி, ஜன.9

சாவகச்சேரி நகரசபை அலுவலகத் தில் இந்த வருடத்திற்குரிய துவிச்சக்கர வண்டி இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எனவே இலக்கத் தகடுகளைப் பெற்று பின்னர் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நகர சபைச் செயலாளர் கொன்ஸ்ரைன்ரன் யக்கீல் அறிவித்துள்ளார். (201-202)

**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**




அமரர்
வேலுப்பிள்ளை செல்லையா (மெம்பர்)
தோற்றம் 31.03.1934 மறைவு 04.01.2006

ஐங்கரன் அடிசேர்ந்து ஆண்டுகள்
ஐந்து ஆன போதும்
எங்கள் குலதெய்வம் செல்ல
ஐயாவை மறக்க முடியுமா?
ஓம் சாந்தி!

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
(சுந்தரவாத்தியார்)

திருச்சிற்றம்பலம் சிதம்பரவல்லி மடியில் 23.09.1909
திருச்சிற்றம் பலவன் திருவடியில் 21.12.2009

திதி: மார்கழி பஞ்சமி
(09.01.2011)

எங்களை எல்லாம் கல்வி கேள்வி அறிவு ஞானம் பெற வளர்த்த எம் ஐயா, ஒரு சைவ சமயி என்னும் ஒழுக்க நெறி முறை நியமந்தவறாது இறுதிவரை ஒழுகிய உத்தமர் அவரது இழப்பு எமக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாதது. அவர் சமய சமூக ஆர்வலராக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வழியை எம்மால் இயன்றவரை பின்பற்றி ஒழுக வான் உறையும் தெய்வமாக நின்று எம்மை ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென இந்நாளில் பிரார்த்திக்கிறோம்.

யாமா வளவு,
காசிப்பிள்ளையார் கோயிலடி, தெல்லிப்பழை. குடும்பத்தினர்.


**STUDY FOR A DOUBLE DEGREE IN TBILISI, GEORGIA**

British degree in Advanced Diploma in Strategic Management and Leadership And Post-graduate Diploma in Management from Ilia State University One Year Program Enrolment Close 28 February 2011 for Program starting May 01 Applictions Close 30 January 2011

Fee $6000. Scholarship for the 40 candidates In 2011 of $3000

Ilia State University is a large national university operating under the European Union's Bologna Process with full accreditation by the European Union

Top International Faculty. Safe and cultured environment. Option to continue with one year MBA in Georgia or in London

Admission requirements: Bachelor degree, good knowledge of English OR minimum 3 years of work Experience. Visas will be arranged by the University. Interviews will be held in Colombo.

Apply Immediately with your CV to:

**Director, Advanced Management Studies Suite 402, Ilia State University 3/5 Cholokashvili Avenue, Tbilisi 0162, Georgia Phone: +995 3225 34 77**
**Email: nino.ositashvili@Iliauni.edu.ge**

**MR.S. DESANTHAN**
*CONTACT IN JAFFNA:*
*IIS City Campus,*
*Sivan Pannai Veethy, Jaffna.*
*Tel: 0212228060*

**மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தொலைக் கல்வி மூலம் பட்டப்படிப்பினைப் பெறுவதற்கான வாய்ப்பு தற்போது வன்னியில்**

விண்ணப்பப் படிவங்களையும் கைநூல்களையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சட்டவள நிலையம்,
கண்டி வீதி, கிளிநொச்சி,
தொலைபேசி: 0213212682, 0777705963

**பண்டிகைக்கால அதிர்ஷ்டம்**

15.12.2010 இல் இருந்து 14.04.2011 வரை ரூபா ஆறாயிரத்துக்கு (6000/-) மேல் தங்க நகைகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளரில் 15.04.2011 ஆம் திகதியன்று குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும்

அதிர்ஷ்டசாலிகளுக்கு..

முதலாவது பரிசு T.V.
இரண்டாவது பரிசு துவிச்சக்கரவண்டி
மூன்றாவது பரிசு C.D. பிளேயர்

என்பன பரிசாக வழங்கப்படும் என்பதை எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.



நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

**சிறி சிவாஞ்சனா நகையகம்**

இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 9227


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முரட்டு ஆட்டுக் குட்டி

ஓர் ஊரிலே ஒரு சிறிய ஆறு ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றங்கரை ஓரமாக இரண்டு ஆட்டுக் குட்டிகள் இருந்தன. ஒன்று வெள்ளை நிறத்திலும் மற்றது கறுப்பு நிறத்திலும் இருந்தது. இரண்டு ஆட்டுக்குட்டிகளும் எதிரெதிர்க் கரைகளில் இருந்தன. வெள்ளை நிற ஆட்டுக்குட்டி ஆற்றின் தெற்குக் கரையில் இருந்தது. கறுப்பு நிற ஆட்டுக் குட்டி வடக்குக் கரையில் இருந்தது. இரண்டு கரைகளையும் இணைக்க ஒரு பாலம் இருந்தது. அதன் அகலம் மிகக் குறைவாக இருந்தது. ஒரு சமயத்தில் ஒரு ஆட்டுக்குட்டி மட்டுமே அதில் நடந்து செல்ல முடியும். ஒருநாள் வெள்ளை நிற ஆட்டுக்குட்டி அந்த மரப் பாலத்தின் மீது ஏறி மறுகரைக்குப் பாடிக்கொண்டே சென்றுகொண்டிருந்தது. அதேநேரத்தில் கறுப்பு நிற ஆட்டுக் குட்டியும் எதிர்க்கரைக்குச் செல்ல வந்து கொண்டிருந்தது. இரண்டு ஆட்டுக் குட்டிகளும் பாலத்தின் நடுப் பகுதியில் எதிர் எதிராகச் சந்தித்தன. வெள்ளை நிற ஆட்டுக் குட்டி, கறுப்பு நிற ஆட்டுக்குட்டியைப் பார்த்து ''ஏய்! பின்னால் செல்! நான் முதலில் ஆற்றைக் கடக்க வேண்டும்'' என்றது. கறுப்பு நிற ஆட்டுக்குட்டியோ ''நீ பின்னால் போ! முதலில் நான்தான் ஆற்றைக் கடக்க வேண்டும்'' என்றது கோபமாக. வெள்ளை நிற ஆட்டுக்குட்டி கோபத்துடன் ''நான் ஏன் பின்னால் போகவேண்டும். நான்தான் இங்கு முதலில் வந்தேன்'' என்றது. கறுப்பு நிற ஆட்டுக்குட்டிக்கும் கோபம் வந்தது. ''முதலில் வந்தது நான்தான்; நீ அல்ல'' என அதுவும் கத்தியது.

இரண்டு ஆட்டுக்குட்டிக்களும் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் பிடிவாதமாக நின்றன. அவை ஒன்றுக் கொன்று சவால் விடுவதைப்போல் பாலத்தில் நின்றுகொண்டிருந்தன. இரண்டு குட்டிகளும் தங்கள் தலையைத் தாழ்த்திக் கொம்புகளால் முட்டிக் கொள்ளத் தொடங்கின. இரண்டு குட்டிகளும் ஆரவாரமாகக் கத்திக் கொண்டன. ஒன்றை ஒன்று முரட்டுத்தனமாகத் தாக்கிக் கொண்டன. அவை இரண்டும் ஒன்றை ஒன்று முரட்டுத்தனமாகத் தள்ளியமையால் இரண்டும் ஆற்றில் விழுந்து மூழ்கி இறந்தன.

''ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்.''

இ.மிதுஷா, தரம் 8,
யா/சென். மேரிஸ் வித்தியாலயம்.

## பயன் அற்ற சொத்து

கொன்றைவேந்தன் கதைத் தொடர் 1

ஓர் ஊரில் பணக்காரர் ஒருவர் இருந்தார். அந்த ஊரில் அவரே பெரும் பணக்காரர் ஆவார். பெருமளவு வயல் நிலங்களும் தென்னந் தோப்புகளும் பெரும் அளவிலான கால் நடைகளும் அவரிடம் இருந்தன. நூற்றுக்கணக்கான கிராமத்தவர்கள் அவரது தோட்டங்களில் பணிபுரிந்தனர். அவரது வீட்டில் பெருமளவு நெல், பயறு, கௌப்பி, உழுந்து, நிலக்கடலை, எள்ளு, செத்தல்மிளகாய், நெய் போன்றவை கையிருப்பில் இருந்ததுடன் பெருமளவு பணமும் தங்க நகைகளும் இருந்தன.

எவ்வளவு செல்வம் இருந்தபோதும் பிறருக்கு உதவும் பெரியமனம் அவரிடம் இல்லை. அவரது வேலையாள்களின் கூலியைத் கூடச் சரியாகக் கொடுக்கமாட்டார். பிச்சை கேட்டுச் செல்பவர்களைப் பேசி விரட்டுவார்.

ஒருநாள் இரவில் பல வெளியூர்த் திருடர்கள் வந்து அவரது வீட்டில் உள்ள அனைத்துச் செல்வங்களையும் திருடிக் கொண்டு வீட்டையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

கொன்றை வேந்தன் கதையில் ஔவையார் இப்படிக் கூறுகின்றார்.

''ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்''

நேசராஜ்குமார் வித்யாசாகர்,
தரம் 6 'பி'
கிளி/கிளிநொச்சி ம.வி.

## விடை தெரியுமா? 90

1. நாட்டில் வேகமாகப் பரவிவரும் வைரஸ் தொற்றுநோய் எது?
2. ரஷ்யா உற்பத்தி செய்யும் யுத்த விமானத்தின் பெயர் என்ன?
3. சர்வதேச விருதுக்குத் தேர்வான மோட்டார் வாகனப் பிரிவில் குறைந்த விலையில் வடிவமைக்கப்பட்ட சிறிய கார் எது?
4. உலகில் மிகச் சிறிய மொபைல் போன் எது?
5. உலகில் செஸ் சம்பியன் யார்?

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 00.01.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்

**விடை 87**

1. சச்சின் 4. ஐரோப்பா
2. இவோ சனாடர் 5. நாய்
3. 1500


**வெற்றிபெற்றவர் விவரம்**

1. சூ.பிரியதக்ஷி
தரம் 6 'ஏ'
யா/தம்பசிட்டி மெ.மி.த்.க.பாடசாலை.
2. சூ.புவித்ரா
தரம் 8 'ஏ'
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
3. க.ஜனனி
தரம் 7
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
4. சா.பபிதா
தரம் 8
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.







சி.கம்சன்,
உரும்பிராய் மேற்கு,
அன்னங்கை.



ஜெ.முருகதாஸ்
தரம் 4 'பி'
யா/சென்.பெனடிக் றோ.க.த.க. வித்தி.



அ.துசாயினி, தரம் 3,
மாதகல் விக்னேஸ்வரா வித்தி.



நாகேஸ்வரி,
7ஆம் கட்டைமதவடி,
சங்கானை.

## ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த அதியமான்

முன்னொரு காலத்திலே கடைசி ஏழு வள்ளல்களில் ஒருவராகிய அதியமான் என்னும் அரசர் இருந்தார். இவர் தம் நாட்டு மக்களிடமும் புலவர்களிடமும் மிகுந்த பற்றுக் கொண்டவர். ஒருநாள் அதியமானைக் காண அரசசபைக்கு ஔவைப் பிராட்டியார் அதியமானைக் காணவந்தார். ஔவையாரின் புலமைத் திறன்களை ஏற்கனவே அறிந்திருந்த அதியமான் தன் அரச சபையில் மிகுந்த மரியாதையோடு உபசரித்தார். அதேவேளை யில் அதியமான் தமிழ் காக்கும் ஔவைப் பிராட்டிக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று சிந்தித்தார். அவர் மனதில் சிந்தனை ஒன்று உதயமாகியது. நெடுங்காலம் வாழத் தனக்கு அளித்த அரும்பெரும் நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்து அருளினார்.

ம.சு.லோஜனா,
தரம் 4 'சி'
யா/இந்து மகளிர் கல்லூரி.

## அறிந்து கொள்ளுங்கள்

*மாமிசம் உண்ணும் விலங்குகளில் மிகப் பெரியது எது?
அலாங்காவிலுள்ள கொடிய கரடிகள்

*ஊர்வனவற்றில் மிகச் சிறியது எது?
கெக்கோ என்னும் ஒரு வகைப் பல்லியினம்

*பாம்புகளுக்குக் கண், இமை இல்லை. இவை எவ்வாறு தன் கண்ணைக் காப்பாற்றுகின்றன?
கண் விழியின் மீது கண்ணாடி போன்ற ஒரு செதில் காணப்படுகின்றது. இதன் மூலம் கண்ணைக் காப்பாற்றுகின்றன.

*யானையின் சராசரி ஆயுள்காலம் எவ்வளவு?
55 வருடங்கள்

*நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய மிருகங்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன?
ஆம்பியன்கள்.

*ஒரு மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலை என்ன?
98.4 பாகை பரனைற்று

*நத்தைக்கு எத்தனை கால்கள் உண்டு?
ஒன்று

சோ.கிருத்திகா,
தரம் 7 'ஏ'
யா/வட இந்து
மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமிதம்தான் கைபேசி

மூன்றாம் தலைமுறை (3G)கைபேசி
உன்னால்
முகத்தை பார்த்தே பேசி கொண்டிருந்ததால்
இரவு இனிதாய்
முடிந்து போனாதால், ஐயோ
எனது கனவுகள்
வருந்தியது பாவம்



- கவி

## தனக்காக மட்டும் வாழும் போது

நீ தனக்காக
வாழும்போது
சந்தோசமாக வாழ்கிறாய்
ஆனால்!
தனக்காக மட்டுமே
வாழும்போதுதான்
உன்னோடு
துன்பமும்
தொடர்ந்து வருகிறது...!!!

-அன்புமணி

## என்றென்றும் அம்மா...!



அம்மா மடியில் அணைத்து பிடித்தாள்
அன்பாய் , இதமாய் , சுகமாய்...

வாய் திறந்து பேச
கற்று கொடுத்தாள்,
என் குட்டி பல்லில்
கடிபட்டு சிரித்தாள்,
என் முட்டி நோக
விழுந்து நடந்த போது,
தட்டி கொடுத்தாள்...
சுட்டி பையன் என்று
பலர் புகழ, பெருமிதம் கொண்டாள்.
பட்டபடிப்பு முடித்ததும்
அவள் கண்களில் ஆனந்தக்
கண்ணீர்...

என்னை வளர்த்து
அவள் முடித்த போது ...
முதுமை பெற்றாள்,
உடல் முதிர்ச்சி பெற்றாலும்,
அவள் கண்கள் என்னைக் காணும்
பிறந்த குழந்தையாய்....

அவள் அன்பு சுழியில்
சிக்கி ஆனந்தம் கொள்வேன்
என்றும் அவள் நினைவுகளில்
'அம்மா!' என்று
இதயக் கதவுகள்
படபடக்க...
இன்று...
அவள் நிம்மதியாய்
உறக்கம் கொள்கிறாள்
அவள் கல்லறையில்......

- ரோஜினி

## புதுவித அக்கறைகள்

உங்களில் எவராவது
ஏதாவது கேட்பீர்கள்!
பரீட்சை பற்றியதாய்
அலுக்காமற் சொல்வேன் நான்!
திடீர்ப் பொழுதொன்றில்
எதிர்காலம் பற்றியதாய்
பேச்சொன்றும்
வெளிக்கிளம்பும்
முகமறியாதொருவனை
இயல்பறியாதொருவனைத்
திடுமெனப்பேசி
முடித்துவைக்க
அவசரமாய்க் கேட்பீர்கள்
நானோ நிதானிப்பேன்
என் வாழ்க்கை.... என் முடிவு
சிந்திப்பேன்...
திடுமென வார்த்தைகளோ
அனல் கிளப்பும்
எவனையாவது....பார்த்து....
அதற்கு மேல்'கேட்க இயலாது!
ஏன் இப்படியாய்
எதுவும் போயிற்று
நீவிர் சொன்னவனை
நிராகரித்தால்
வேறொருவனை நினைத்ததாய்
அர்த்தமுண்டா...?
நிதானமாய் பதிலளிப்பேன்
எப்படியோ ஒரு விதமாய்
என்னைப் புரிய வைக்க
நீவிர் நம்பிடுவீர்!

சில மனிதமது மீண்டும்
சந்தேகிக்கும்!
கோவிலதில் நேரம் கூட நின்று
கை கூப்பின்
வேறு யாரேனும்
அந்நேரம் வருவதுண்டோ?
என்பதுவாய்
எனைச் சுற்றி
வட்டமிடும் மனிதங்கள்!
உலகமிது எப்படியாய்த்
திருந்தி விடும்?
அதையும் புரிந்தவளாய்
அமைதியான கணங்களில்
சென்றிடினும்
ஏன் என்பது வாய்த்
தலை சரிக்கும்..
திகைத்திருக்குமெனைப்
பார்த்து
உலகமிது இப்படித்தான்
குரலொன்று வெளிக்கிளம்பும்
பொறுமையாயிரு!
உன்னில் பிழையில்லை!
மனமது ஆர்ப்பரிக்க
தொடருமென் பயணமது!

பிரியமுள்ள புரியாதவர்களே
புரிதலது வாழ்வியலில்
அவசியமாம்!
களங்கமற்ற மனமதனைத்
துடிக்க வைக்க
புதுவித வதந்தியதை
செப்பனிட்டு உருவாக்க
தாய்மை உள்ளமதை
கழங்கமதில் ஆழ்த்துவது
உங்களதன் குறிக்கோளா?
இனியேனும் திருந்திடுக
மனங்களைப் புரிந்திடுக!

-கீ.[illegible]

## பார்வையும் பிரிவும்

பார்க்கும் போதெல்லாம்
நினைத்தேன்...
உன்னை
பிரியக்கூடாது என்று...

பிரியும் போதெல்லாம்
நினைக்கிறேன்
உன்னை ஏன்
பார்த்தேன் என்று..!



- வீணா

## வருந்திட நினைத்திட்டாரோ

பிறந்த மண் புகுந்து
புது வாழ்வு காண்போமென்ற
எண்ணில்லாக் கனவுடனே
எம் மண்ணில் கால் பதித்தோம்
கனவுகள் கலைந்திங்கு
கானல் நீர் ஆனது ஏன்
வெஞ்சமர் தந்த
வேதனையும் தீரவில்லை
வன் வதைகள் திருமுன்னே
வருண பகவானும் - எம்மை
வருந்திட நினைத்திட்டாரோ

நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு.

## மறக்கக்கூட முடியவில்லை தோழியே!

நடந்து வந்து திரும்பிப் பார்த்ததில்,
ஞாபகச் சுவடுகளைக்
கைவிட்டு எண்ணிவிட முடிந்தது

ஓடி வந்து திரும்பிப் பார்த்ததில்,
ஓராயிரம் நினைவுகள்,
எண்ணி முடிக்க கூட
ஞாபகம் இல்லை...



புயற் காற்றும், கடு மழையும்
கொடும் பனியும், வாழ்வின் நினைவ
சிதைத்து, எரித்து...
தண்ணீரில் கரைத்து விட்டது.

ஆனால்,உன்ன மட்டும்
மறக்கக் கூட முடியவில்லை
தோழியே....

- மணிகண்டன்

## உயிர் கிடைக்க காரணமாக இருந்ததால்

அன்பே
உன் செல்' போன்
உனக்கு உயிர் என்று சொன்னாய்

புரிந்து கொண்டேன் இந்த
உயிர் கிடைக்க காரணமாக
இருந்ததால்

அதனை
உயிர் என்று கூறினாய்.

- பூமகள்

## கடைசி வரை தொடர வேண்டும்

அறிமுகம் இல்லாமல்
வந்தோம்
அடிகடி பேசி கொண்டோம்
உறவுகளுக்கு மேலே
உயிர் ஆனோம்...

காலங்கள் கடந்து
சென்றாலும்
கடைசி வரை தொடர
வேண்டும்
நம் உறவு...

- கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரத்துக்குள் தள்ளப்படும் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணக் குடாநாடு கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற அதி பயங்கரமான சட்டவிரோதச் சம்பவங்களின் மையமாக தற்சமயம் மாறிவருகிறது. ஒரு சம்பவம் இடம்பெற்ற பரபரப்பும் பயப்பீதியும் அடங்குவதற்கு முன்பே அடுத்த சம்பவம் தொடர்பான செய்தி வெளிவந்து விடுகிறது. பொது மக்களோ நிம்மதியையும் நித்திரையையும் தொலைத்துவிட்டவர்களாக எப்போது தங்கள் வீட்டுக் கதவும் தட்டப்படுமோ என்ற அச்சத்துடன் இரவுகளை கழிக்கின்றனர்.

ஊரெங்கும் இராணுவ முகாம்கள் அமைந்திருந்த போதிலும், காணுமிடமெங்கும் படைக் காவலரண்கள் தென்பட்ட போதிலும், பல பொலிஸ் நிலையங்கள் இருந்த போதிலும் நாளாந்தம் கொலையோ, கொள்ளையோ, ஆள்கடத்தலோ இடம்பெறுகின்றன. அது மட்டுமன்றி குற்றவாளிகளும் தப்பிச் சென்று விடுகின்றனர்.



குடத்தனையில் சுட்டுக்கொல்லப்பட்ட கேதீஸ்வரனின் இறுதிச் சடங்கில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.



## குற்றங்களைத் தடுப்பதில் அரசு அசமந்தம்

இவை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவனஈர்ப்புப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைத்தனர். அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, படையினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்ட பகுதிகளிலேயே இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் இது படையினருக்குத் தெரியாமல் நடைபெறமுடியாது எனவும் தெரிவித்தார். மேலும் இவை தொடர்பாகப் பிரதமர் பதிலளிக்க வேண்டும் எனவும் விசாரணைகள் தொடர்பான தகவல்களைச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அரசில் உள்ள மூத்த அமைச்சர்கள் இப்பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து குற்றவாளி

**சந்திரசேகர ஆசாத்**

களைச் சட்டத்தின் முன் நிறுத்த உதவ வேண்டும் எனவும் மேலும் இப்படியான சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். அவரின் கோரிக்கையின் நியாயத் தன்மையை எவரும் மறுத்துவிட முடியாது.

ஆனால் இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா கூறிய வார்த்தைகள் திருப்தியளிப்பதாகவோ, நம்பிக்கையளிப்பதாகவோ இருக்கவில்லை. மாறாகப் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கும் வகையிலும், அலட்சியமான முறையிலும் திமிர்த்தனமாகவும் அவரது பதில் அமைந்திருந்தமை கவலையளிக்கும் விடயம். ஒரு குறிப்பிட்ட பிரதேச மக்கள் கூட்டம் சந்திக்கும் உயிர் அச்சுறுத்தல் உள்ளிட்ட பயங்கர நிலைமை உதாசீனப்படுத்தப்படும் அளவுக்கு அரசு நோக்குகிறதா என்ற கேள்வி அமைச்சரின் பதிலைப் பார்க்கும் போது எழுகிறது.

**ஞாயிறு காரம்**

குறிப்பாக இப்பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கான அனுமதியையே தாங்கள் மறுத்திருக்க முடியும் எனவும், மனிதாபிமான அடிப்படையிலேயே நாங்கள் அதை அனுமதித்ததாகவும் அமைச்சர் சபையில் குறிப்பிட்டார். தமிழ் மக்கள் மேல் இழைக்கப்படும் அநீதிகளை வெளியே சொல்லும் உரிமையைக் கூடத் தங்களால் மறுக்க முடியும் என்ற அவரது கூற்று இந்த அரசின் சர்வாதிகாரப் போக்கைப் புலப்படுத்துகிறது.

அதுமட்டுமன்றி மாவை சேனாதிராஜா திகதி வாரியாகப் பட்டியலிட்டுச் சமர்ப்பித்த சம்பவங்களின் உண்மைத் தன்மையை அறிந்த பின்பே இது குறித்து பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர் பதிலளிப்பார் என்று அமைச்சர் நிமல் தெரிவித்தார். ஒருவர் உண்மையைக் கண்டறிய முயல்வதை எவரும் தவறு என்று சொல்லிவிட முடியாது. ஆனால் தமிழ் மக்களின் கவலையெல்லாம் உண்மையைக் கண்டறிவது என்ற பேரில் காலத்தை இழுத்தடித்து மேலும் பல கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும், கடத்தல்களுக்குமான கால அவகாசம் வழங்கப்பட்டுவிடக் கூடாது என்பதுதான்.

குற்றச் செயல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறியவதாயின் பொலிஸார், ஆயுதப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் ஆகியோரின் அறிக்கைகளை அடிப்படையாக வைத்தே ஓர் அமைச்சர் அதனைப் பெற முடியும். ஆனால் இச்சம்பவங்கள் தொடர்பாக இந்தத் தரப்பினரிடமிருந்து இதுவரை வெளிவந்த தகவல்கள் குழப்பம் நிறைந்தவையாகவே உள்ளன. மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்கள் தொடர்பு கொண்டு சில தகவல்களைப் பெற முயற்சித்த போது அவற்றைத் தர அவர் மறுத்துவிட்டார். யாழ். மாவட்ட பொலிஸ் தலைமையகமும் இதே நிலைப்பாட்டையே எடுத்ததுள்ளது.

சங்கானைப் பூசகர் நித்தியானந்தக் குருக்களின் கொலை, கொலை முயற்சி தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி அவற்றுக்கு முன்னாள் போராளிகளே காரணமென்றும், அவர்களுக்குப் படையினர் இருவர் உதவி புரிந்தனர் எனவும் தெரிவித்தார். அதில் படையினர் தொடர்புபட்டு இருந்தமைக்காக அவர் மன்னிப்பும் கோரி இருந்தார்.

கைது செய்யப்பட்ட நால்வரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று வரை அந்த விசாரணையின் விவரங்கள் எதுவும் வெளிவரவில்லை. சில விடயங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக இரகசியமாகப் பேணப்படலாம். ஆனால் இந்தக் கொலையின் காரணம் இதனுடன் சம்பந்தப்பட்ட வேறு நபர்கள் பற்றிய விவரம் என்பவை கூட வெளியிடப்படவில்லை. ஆனால் திருடப்பட்ட பொருள்களின் பெறுமதியை நோக்கும் போது கொள்ளை நோக்கத்திற்காக இந்தக் கொலை செய்யப்படவில்லை என்பது மிகத் தெளிவாகவே புரிகிறது.

அதேசமயம் பாதிக்கப்பட்டவர்கள் மேல் தனிப்பட்ட காரணங்களுக்காக கொலை முயற்சி மேற்கொள்ளப்பட வாய்ப்புக்கள் இல்லையெனவும் அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று உரும்பிராயில் உதவிக் கல்விப் பணிப்பாளர் மா.சிவலிங்கம் கொல்லப்பட்ட பின்பு ஒரு சிறுமியின் தோடு மட்டுமே களவாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனவே அச்சம்பவம் கொள்ளை நோக்கம் கொண்டதல்ல என்பதும் தெளிவாகிறது. ஆனால் இக்கொலை தொடர்பாகச் செய்தி வெளியிட்ட ஒரு சர்வதேச வானொலி, மாணவர்கள் சிங்களத்தில் தேசிய கீதம் பாடுவதை அவர் வலுவாக எதிர்த்தவர் எனவும் அதன் காரணமாகவே கொல்லப்பட்டார் எனவும் தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது.

ஆனால், பத்திரிகைப் பேட்டியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் சித்தசுவாதினம் அற்றவர் எனவும் அது சம்பந்தமான பிரச்சினையினாலேயே கொல்லப்பட்டார் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மனநோயாளி ஒருவர் மாவட்டத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்தார் என்பது உண்மையானால் இம்மாவட்டத்தில் கல்வித் திணைக்களத்தினதும், ஆசிரியர்கள், மாணவர்களினதும் நிலை எப்படியிருக்கும். அது மட்டுமின்றி சித்தசுவாதீனத்திற்கு மருந்து மரணம்தானா என்ற கேள்வியும் எழுகிறது.

கல்விப் பணிப்பாளர் கொலையின் காரணத்தைக் கண்டு பிடித்துவிட்டால், கொலையாளியோ அல்லது அதனுடன் சம்பந்தப்பட்டவர்களையோ ஏன் இன்னமும் கண்டறிய முடியவில்லை? ஏன் எந்த விவரமும் வெளிவரவில்லை.

விழா ஒன்றில் உரையாற்றிய இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரேர், பத்திரிகைகள் சிறு சம்பவங்களை ஊதிப் பெருப்பித்து அச்சமூட்டுகின்றன. எனப் பழியை ஊடக உலகின் மீது போட்டிருக்கிறார். அவரளவில் உயிர்கள் பறிக்கப்படுவது சிறு விடயமாகிவிட்டது.

இப்படியாக குடாநாட்டுக் குற்றங்கள் தொடர்பில் ஒரு சிலரிடமிருந்து வெவ்வேறு குழப்பமான கருத்துகள் வெளிவருகின்றன. பொலிஸ் தரப்போ மௌனத்தையே வழிமுறையாகக் கொண்டுவிட்டது.

எப்படியிருந்த போதிலும் அதி பயங்கரச் சூழலுக்குள் குடாநாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இப்படியான ஒரு நிலையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் ஒரு கவனஈர்ப்புப் பிரேரணையை முன்வைத்துள்ளனர்.

இதற்குப் பதிலளிப்பதற்கு அரசாங்கம் அவகாசம் கோரியுள்ளது. அவகாசம் வாங்கி அளிக்கப்படும் பதில் நியாயபூர்வமான உண்மைகளின் அடிப்படையில் வழங்கப்படுவதாக அமைய வேண்டும் என்பதே எமது மக்களின் எதிர்பார்ப்பாகும். அது மட்டுமன்றி இப்பிரச்சினையைத் தடுத்து நிறுத்த ஒரு திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதே எமது மக்களின் கோரிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் மீது கண்காணிப்பு

கொழும்பு, ஜன.9

சாரதி பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் வழங்கும் சேவைகளின் தரத்தை உறுதி செய்வதை கண்காணிக்கும் நடவடிக்கையை நேற்றிலிருந்து ஆரம்பித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

வீதி விபத்துகள் ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றன. 90 சதவீதமான வீதி விபத்துக்கள் பொறுப்பற்ற சாரதிகளினாலேயே ஏற்படுகின்றன. சாரதியத்தின் தரத்திற்கு சாரதி பயிற்சி பாடசாலைகளே பொறுப்பானவை.

தரமான சாரதிகளை உருவாக்கத் தவறும் சாரதிப் பயிற்சிக்கு பாடசாலைகளின் அனுமதியை இரத்துச்செய்வோமெனப் பிரதி போக்குவரத்து அமைச்சரான றோகன திஸநாயக்க கூறினார்.

நான்கு மாதங்களுக்கு ஒரு முறை சாரதிப் பயிற்சி பாடசாலைகள் மேற்பார்வை செய்யப்படும். பொறுப்பில்லாத சாரதிகளை கணிசமானளவில் உருவாக்கும் நிறுவனங்களின் சாரதி பாடசாலை அனுமதி இரத்துச் செய்யப்படும்.

பயிற்சிப் பாடசாலைகள் தமது மாணவர்களிடமிருந்து இலஞ்சம் பெற்றுக் கொண்டு, அவர்களைப் பரீட்சையில் சித்தியடைய வைப்பதாகப் பல புகார்கள் கிடைத்துள்ளன. சில பயிற்சியாளர்கள் மாணவர்களுடன் சேர்ந்து குடிப்ப தாகவும் எமக்குத் தகவல் கிடைத்துள்ளன. இது அவர்களின் தொழிலுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் செயலெனவும் அமைச்சர் கூறினார். (த)

## கடைகள் வாடகைக்கு

பண்டத்தரிப்பு பிரதான சந்தியில் கடைத் தொகுதிகள் வாடகைக்கு விடப்படும். பெரிய நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0750413767, 0779001382

## நிஜமொன்று வைகுண்டப் பேறுபெற்ற இரண்டாம் ஆண்டில்....



யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டேயரிஷி கோத்திர பத்மசாயிய வைசியச் செட்டிவாழ் குலத்தில் பிறந்த

**திருமதி தையல்நாயகி கிருஷ்ணசாமி செட்டியார்**

(ஓய்வுபெற்ற பெண் பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)

மண்ணுலகில்: 16.08.1933
வைகுண்டத்தில்: 01.01.2009
திதி: பூர்வபக்க பஞ்சமி (09.01.2011)

மார்கழி மாதப் பனியின் உறைவோடு
எம் உணர்வுகளும் உறைந்த- அந்தநாள்
01.01.2009
நம்ப முடியவில்லை அப்பப்பி நம்ப முடியவில்லை
நீங்கள் இறைவனடி சேர்ந்து இரண்டு வருடங்கள்
நம்ப முடியவில்லை அப்பப்பி நம்ப முடியவில்லை
கண் மூடி ஒருநிமிடம் நினைத்தால்- உன் உருவம்
நிழலான நிஜமாய்.....
தூக்கி முடிந்த உனது கொண்டை
மூக்கில் மின்னும் இரட்டை மூக்கு மின்னி
பச்சை நிற வெற்றிலைப் பை
நினைவுகள் நம்ப மறுக்கின்றது உங்கள் இழப்பை
நீங்கள் நிழலாய் தொடரும் ஓர் உணர்வு
ஆனால்! நம்பித்தான் ஆக வேண்டும்
நீங்கள் இறைவனடி சேர்ந்து இரண்டு வருடம்.

69B, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(108739)

## அனெக்ஸ் தேவை

நல்லூர் சுற்றுவட்டத்தில் பருத்தித்துறை றோட், ரெம்பிள் றோட், நாவலர் றோட் ஆகியவற்றில் சித்த வைத்தியருக்கு அனெக்ஸ் அல்லது சிறிய வீடு தேவை. இருவர் உள்ள குடும்பத்துடனும் சேர்ந்து வசிக்கலாம்.
தொடர்புக்கு: 0779723369

## வீடு வாடகைக்கு உண்டு

இல.115, பொன்னம்பலம் வீதி, அரியாலையில் மூன்று அறைகள், இரண்டு கழிவறைகள் கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய வீடு ஒரு சிறிய குடும்பத்துக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: 0217900366, 0750456931

## வேலையாள்கள் தேவை

சன்னதி முருகன் கேக் சொப்
இல.241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பெக்கணிக் வேலை, கேஸ்வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை. [ஆண்கள்] கணக்கு வேலை தெரிந்த [பெண்] பிள்ளைகளள் தேவை. தொ.பே.: 021 222 8076. (சி/674327)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய், வேம்பன் வீதியில் நில. பர.13 விஸ்தீரணமான காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0724363668

## 33ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

**திருமதி வாசுகி கெங்கேஸ்வரன்**

(யாழ்.பல்கலைக்கழகம் விவசாய பீடம்- 2004)

மண்ணில்: 09.01.1978
விண்ணில்: 03.01.2011



நெஞ்சம் வெடித்ததடி வாசுகி
வஞ்சி நீ நிரந்தரமாய் சென்று விட்டாய் என்ற
கொடுஞ் செய்தி கேட்கையில்
அஞ்சுகமே உந்தன் அள்ளும் சிரிப்பெங்கே
கொஞ்சிப் பேசும் அழகெங்கே
தஞ்சமென கதறியழும் உறவு நீக்கி- நீ சென்றதெங்கே

பிஞ்சுப் பாலகரிருவர் பால்மணம் மறக்குமுன்னே- உன்
மஞ்சள் குங்குமம் தானது காயுமுன்னே
வஞ்சிக்க மனமிரங்கினானோ காலனவன்- உன் ஆயுளில்
கஞ்சத்தனம் வைத்தானோ அந்தப் பிரம்மன்
கிஞ்சித்தும் நினைக்கலையே சுகி
வெஞ்சினம் கொண்டு வெம்புதடி அணி பதினொன்று

துஞ்சி துடிதுடித்து துவண்டழுது
கெஞ்சி அழைக்கின்றோம்- இறைவா
குஞ்சு குழந்தைகளுக்காய் அவளின்
நெஞ்சில் நிறைந்தவனுக்காய்- எமக்காயும்
பஞ்சாய் பறந்த அவளை நீ மீண்டும்
பூஞ்சிட்டாய் அனுப்பாயோ? வாசுகி மீண்டும் நீ வா...சுகி

கண்ணீருடன் கலங்கி நிற்கும்:
உன் ஆருயிர் நண்பர்கள்
11ஆம் அணி, விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(08748)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலி கங்கையை வடபகுதிக்குத் திசை திருப்புவது குறித்து 1933 ஆம் ஆண்டிலேயே ஆராய்ந்தது ஆங்கிலேய அரசு

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

**ஆவணப் பெட்டகம் 25**

**தாண்டவன்**

22.11.1926 அன்று ரி.பி.ரஸ்ஸல் யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

08.10.1927 முதல் தலைமை முதலியார் இராம லிங்கம் ஓய்வுபெற்றார்.

01.01.1928 ரஸ்ஸல் சுகயீன லீவில் இங்கி லாந்துக்குச் செல்ல ஜே.டி.பிறவுண் யாழ்ப்பாண அரச அதிபராகவும் பதில் மாவட்ட நீதிவானாகவும் நியமிக்கப்பட்டார்.

16.03.1928 ஜி.டி சொய்சா அலுவலக உதவி யாளராக நியமிக்கப்பட்டார்.

01.11.1930 அன்று ஈ.ரி. டைசன் அரச அதி பராக நியமிக்கப்பட்டார்.

04.09.1931

யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசஅதிபர் தலைமை யில் மரவரி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கள், பதநீர் என்பன சேகரிக்கப்படும் பனைமரங்களுக்கு வரி அறவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. (மர வரி இலங்கை சுதந் திரம் அடைந்து பல ஆண்டுகளின் பின் னரே நீக்கப்பட்டது)

26.10.1931

ஜே.ஆர்.வில்கின்சன் யாழ்ப்பாணக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார்

மே 1932

அரச அதிபர் ஈ.ரி. டைசன் லீவில் செல்ல வில்கின் சன் மே-யூன் ஆகிய மாதங்களுக்கு மேலதிக அரச அதிபராகப் பதவியேற்றார்.

1932 ஆம் ஆண்டு வடமாணத்திலுள்ள இறங்கு துறைகளிலிருந்து (தலைமன்னார் உட்பட) 1,084,733.99 சதம் வருமானம் கிடைத்தது.

1932ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வடபகுதி முழுவதும் பெருவெள்ளம் ஏற்பட்டது. வடபகுதிக் கான புகையிரதசேவை மாங்குளத்துடன் நிறுத்தப் பட்டது. நெடுந்தீவில் மயானத்தில் புதைக்கப்பட் டிருந்த சடலங்கள் வெள்ளத்தில் மிதந்தன. இந்த வெள்ளப்பெருக்குக் காரணமாக ஆனையிறவு, சிவியா தெரு, கரணவாய், வெள்ளாம்பறவை போன்ற இடங் களில் உப்பு உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

மே 1933

முதலியார் இராசநாயகம் அரசஅதிபரின் அனு மதியுடன் கச்சேரியிலிருந்த தோம்புகளைப் பரிசீ லித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார். யாழ்ப் பாணக் கச்சேரியிலுள்ள தோம்புகள் மிகவும் பழுத டைந்த நிலையில் காணப்படுவதாகவும் அவற்றை ஒழுங்காகப் பராமரிக்க அரசு உடன்நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் முதலியார் இராசநாயகம் பரிந்துரை செய்தார். அத்து டன் ஒல்லாந்தர் காலத்தில் எழுதப் பட்ட தோம்புகள் அதுவரை பிரதி யாக்கம் செய்யப்பட வில்லையெனவும் ஒல்லாந்தர் காலத் திலிருந்த சாதிகள், காணிகளின் பெயர்களிலேயே இப்போதும் தோம்புகள் காணப்படுவதாகவும் தோம்புகள் பிரதி பண்ணப்பட வேண்டியது அவசியமெனவும் முதலி யார் இராசநாயகம் தனது அறிக்கையில் சிபார்சு செய்தார். முதலியார் இராசநாயகம் 'Ancient Jaffna, History of Jaffna' போன்ற நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளதுடன் 'சிங்களப் பிர தேசங்களை ஆட்சி செய்த தமிழரசர்கள்' என்ற தலைப் பில் ஆய்வுக் கட்டுரையொன்றையும் றோயல் ஏசி யாற்றிக் சொசைற்றியில் வாசித்துள்ளார்.

1933 யூன் 08

அரச அதிபர் டைசன் லீவில் செல்ல புத்தளத்தில் உதவி அரச அதிபராகக் கடமையாற்றி வந்த எட்மண்ட் றொட்றிகோ யாழ்ப்பாண அரச அதிபராகப் பதவி யேற்ற முதலாவது இலங்கையர் என்பது குறிப்பிடத் தக்கது.

செப்.1933

மகாவலி கங்கையை வடக்கே திசை திருப்புவது பற்றி அரசு ஆராய்ந்தது. மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதன் மூலம் காடுகளில் தேங்கி நிற்கும் நீரை வடபகுதி நீர்பாசனத்துக்குப் பயன் படுத்தலாமென்பது அரசின் திட்டம் .

நவம்பர் 1933

அரச அதிபர் றொட்றிகோ வீதியோரங்களிலி ருந்த சிறியளவிலான இந்துக் கோயில்கள் அல்லது விக்கிரகங்களை அப்புறப்படுத்துமாறு உத்தரவிட் டார். அரச அதிபரின் இந்த உத்தரவுக்கு யாழ்ப்பாண இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதற்கு அரச அதிபர் "நீங்கள் இப்போது வீதியோரங்களில் மரங்க ளின் கீழ் விக்கிரகங்களை வைத்து வழிபடுகிறீர்கள். சிறிது காலத்தில் இந்த இடங்களில் பூசாரிமார் தோன்றி விடுவர். பின்னர் மக்களும் கூடி விடுவர். இது போக்கு வரத்துக்கு இடையூறாக இருக்கும். எனவே இதனை அனு மதிக்க முடியாது" எனக் கடிதம் மூலம் பதிலளித் தார். நூற்றுக்கு மேற்பட்ட வரு டங்கள் அரச அதிபர்களாகப் பதவி வகித்த ஆங்கிலேய அரச அதிபர்கள் செய்யாததை இலங்கையரான றொட் றிகோ ஏன் செய்தாரென்று புரியவில்லை. அரச அதி பரின் விளக்கக் கடிதம் இந்துசாதனப் பத்திரிகை யில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(வளரும்...)

---

# பல உயிர்ச்சத்துக்கள் உள்ளடங்கியுள்ள புளி மருத்துவத் தேவைக்குப் பெருமளவு பயன்படுகிறது

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

### புளி

வேறுபெயர்: திந்துருணி, ஆம்பிரம், எகின்.
தாவரவியற் பெயர் - ரமாரின்டஸ் இண்டிக்கா (Tamarindus indica)
குடும்பம் - சிசால்பினீயோய்டியே (Caesalpinioidea)
சிங்களப் பெயர் - சியம்பலா
சமஸ்கிருதப் பெயர் - ஆம்லிகா
ஆங்கிலப் பெயர் - Tamarind

வைணவ ஆழ்வார்களிலே திருமாலின் அவதா ரமாகப் போற்றப்படுவர் நம்மாழ்வார். அவர் திருக்குருகூரிலேயுள்ள ஆதிப்பிரான் பெருமாள் கோயிலின் புளியமரப் பொந்தில் தவமிருந்ததாக



வைணவ நூல்கள் கூறுகின்றன. அப்புளியமர இலைகள் இரவில் மூடிக் கொள்ளாதிருப்பதால் உறங்காப்புளி என்றும் அழைக்கப்படுகிறது. கோயிற் பிரசாதங்களில் புளிச்சாதம்/புளியோதரையில் பழப்புளி முக்கியபங்கு வகிக்கிறது. புளியில் சீனிப்புளி என்றும் ஒரு வகையுண்டு. அதன் கனிகள் மிகவும் இனிப்பானவை. புளி பெருமர வகுப்புக்குரியது. பரந்த வைரமான கிளைகள் இலகுவில் முறியாது. (பிடித்தாலும் புளியங் கொம்பைப் பிடிக்க வேண்டும் என்பது இதனால்தானோ?) கூட்டிலைகள் ஒவ்வொன் றிலும் 10-20 சிற்றிலைகள் இருக்கும். வைகாசி ஆனியில் பூக்கும். எனினும் பூக்கும் காலம் இடத்து கிடம் சிறிது வேறுபடலாம். சிறுகிளைகளின் நுனி யில் கொத்துக் கொத்தாகப் பூக்கும். பூக்கள் மஞ் சளும் சிவப்பும் கலந்த நிறம். கனிகள் நீண்டு, அல்லது வளைந்து காணப்படும். 100 கிராம் புளியில் 170 மி.கி கல்சியம், 110 மி.கி- பொஸ்பரசு, 10 மி.கி இரும்புச்சத்து என்பன உண்டு. மேலும் 8-15 வீத அளவில் தாத்தாரிக் அமிலமும் உள்ளது.

புளியிலை, பூ, காய், கனி, பட்டை, விதை, என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

புளியமிலையை அவித்த நீரால் வீக்கத்துடன் கூடிய புண்களைக் கழுவி வர வீக்கம் வற்றும்.

இலையைத் துவைத்து நீர் விட்டுக் கொதிக்க வைத்துக் கீழ்வாத வீக்கங்களுக்குப் போட வேதனை, வீக்கம் குறையும். புளியம்பிஞ்சு, இஞ்சி, கொத்த மல்லி, உப்பு என்பவற்றைச் சேர்த்துத் துவையல் செய்து உண வுடன் சேர்த்துண்ண பித்தம் தணியும், பசியெடுக்கும்.

புளியங்கொட்டையை அரைத்து மாவாக்கி, களி யாகக் கிண்டி கட்டிகளுக்குப் பூசிவர அவை குண மாகும். புளியம் விதையைப் பொடி செய்து 1 தேக்கரண்டி வீதம் காலை, மாலை கொடுத்து வர சீதபேதி குணமாகும்.

புளியங்கொட்டைத் தோல், கருவேலம்பட்டை என்பவற்றைப் பொடி செய்து சமவளவு உப்புச் சேர்த்து பல் துலக்கி வர பற்கூச்சம், பல்லீறுகளால் இரத்தம் வடிதல், பல்லீறுவீக்கம் என்பன குணமாகும்.

புளியம்பட்டையை இடித்துப் பொடி செய்து சமவளவு உப்புத்தூள் கலந்து வறுத்தெடுத்து வைத்துக் கொண்டு, ஒரு தேக்கரண்டி அளவில் எடுத்து சீரகக் குடிநீரில் காலை, மாலை குடித்து வர செரியாமை, வயிற்றுப்புண், வயிற்றுவலி என்பன தீரும். பழப்புளி, கரிசலாங்கண்ணி ஆகியவற்றைச் சமவளவெடுத்து அரைத்து நெல்லிக்காயளவில் காலை, மாலை சாப்பிட்டு வர மூலம் அடிதள்ளல் என்பன தணிவடையும்.

பூவைச் சிறிது நெய்விட்டு வதக்கித் துவையல் செய்துண்ண நாச்சுவையின்மை, பசியின்மை என்பன நீங்கும்.

புளியங்கொட்டை மேற்றோலை உலர்த்தி இடித்துப் பொடி செய்து ஒரு தேக்கரண்டி அளவில் எடுத்து சர்க்கரை அல்லது தேன் சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வரப் பெண்களுக்குண்டாகும் வெள்ளைபடுதல், பெரும்பாடு, நீர்க்கடுப்பு என்பன நீங்கும்.புளியம்பட்டையை எரித்து, வரும் சாம் பலை எடுத்து நீரில் கலக்கி ஊற விட்டு தெளித்தெடுத்த நீரால் வாய் கொப்பளித்து வர தொண்டைப் புண், வாயவியல் என்பன நீங்கும்.

எமது அன்றாட உணவில் இன்றியமையாது இடம் பெறும் பழப்புளி, நாச் சுவையின்மையை நீக்கிப் பசியைத் தூண்டுவதுடன் மலச்சிக்கலையும் நீக்குகிறது. ஆயினும் கடும் நோயுள்ளவர்களுக்கு பஸ்பம், செந்தூரம் போன்ற வீரியம் மிக்க மருந்துகளைக் கொடுக்கும்போது மருந்துகளின் வீரியத்தைக் கெடுப்பதால் பழப்புளி பத்தியத் திற்காகாது என விலக்கப்படுகிறது.

### கருங்குங்கிலியம்

தாவரவியற் பெயர் - கனேரியம் ஸ்ரிக்ரம் (Cannarium Strictum)
குடும்பம் - பேர்சரேசியே (Burseraceae)
சிங்களப் பெயர் - சால்
சமஸ்கிருதப் பெயர் - ரளதூப
ஆங்கிலப் பெயர் - Black Dammar

இது பெருமர வகுப்புக்குரியது. இலையுதிர் மரம். கூட்டிலைகள், சிற்றிலைகள் முட்டைவடி வாகவும் கூர்மையான நுனியுடனும் காணப்படும். பங்குனி, சித்திரையில் பூக்கும். பூக்கள் மஞ்சள் நிறம், நறுமணமுடையவை. மரத்திலிருந்து பெறப்படும் பிசினே கருங்குங்கிலியமாகும். இதுவே மருத் துவத்தில் பயன்படுகிறது.

கருங்குங்கிலியம் காது, மூக்கு, உதடுகளில் ஏற்படும் நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனைப் பொடி செய்து நல்லெண் ணையுடன் சேர்த்து சூடாக்கி அவ் வெண்ணையை மூட்டுவாதம், கை கால்பிடிப்பு, நாரிநோ போன்றவற் றிற்குப் பூசிவர அவை மாறும்.


(தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D(S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 145




அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.மயிரிழையில் பிழைத்துக் கொண்டதை இப்படிக் கூறுவர்.
6. போதை தருவது.
7.மேலும்,
9.இருபதுக்கு முந்தியது.
11. மன்மதன்/இளவேனில் காலத்துக்கு உரியவன்.
13. மாறுபடல்.
14.தடி.
16. தாய், சேய்க்கு ஊட்டுவது.
17. நிறை.
18. இது இரண்டொழிய வேறில்லை.
19. பாதை.
20. எழு/மேலெழும்பு
21.சமிபாட்டுத் தொகுதியில் தேவையற்ற அங்கம்

### மேலிருந்து கீழ்

1.அம்பிகாவதி மனம் கவர்ந்தவள்.
2.வசந்த காலம்.
3.நிறுத்துதல்.
4.ஒரு கோள்.
5.எவர் அங்கே?
8. விளக்கம்.
9.கொட்டகை.
10. எடை அளவு.
12.திட்டவட்டமாக அரைவாசி.
14.வர்த்தக நிலையம்.
15. பெண்பிள்ளை.
17.வனப்பு.
18.திறப்பு.
19.ஒரு திசையைக் குறிக்கும் சொல்.
20.உள்ளது.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 145**

நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 19.01.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.145 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.01.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 143 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)பாசாங்கு. (4)தமது. (7)துரு. (8)ருசிகரம்.(9)காம்போதி. (11)வம்பு. (12)ஆல். (13)தர்க்கம்.(15) வித. (16)கரு. (17)கரடி. (18)குளம்பு. (19) அரும்பு. (20)கடுகு.

### மேலிருந்து கீழ்

(1)பர்துகாத்தல். (2)சாரும். (3)குருதி. (4)தகவல். (5)மரம் (6)தும்புத்தடி. (10)போர்க்களம். (12)ஆம். (14)கரும்பு. (15)விரட்டு. (18)குரு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 143 இற்கான சரி யான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு **சி.பானுராஜா**
அக்கராயன் அ.மி.த.க.பாடசாலை, கோணாவில், கிளிநொச்சி.

2 ஆம் பரிசு **சி.அபிராமி,**
இல.199/1 கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு **கருணாநிதி நிதுஷா,**
பெரியபாதி,வதிரி,கரவெட்டி.

4 ஆம் பரிசு **திருமதி-ஜெயபுநீ நவரட்ணராஜா**
இல.2, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு **சபாரத்தினம் கணேஸ்வரி**
திருப்பரங்குன்றம்,நவாலி வடக்கு, மானிப்பாய்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **செல்வி.ஜே.வித்யாவி,**
கொமர்சல் வங்கி, இல.474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(2) **செல்வி,சர்மிலா புஸ்பாகரன்,**
யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(3) **வ.தி.ராஜாராம்,**
C/1/6 வேலுவனராம மாடி வீடு,ஹம்டன் லேன், வெள்ளவத்தை

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# விடியல் தேடும்....

(13 பக்கத் தொடர்ச்சி....)

ஊரின் கேள்விகளுக்கும் உயிரைப் பிளக்கும் விமர்சனங்களுக்கும் அவள் பல ஆயிரம் பதில் சொல்ல வேண்டியிருந்தன. அத்தனை பதில்களுக்கும் அழுவ தொன்றே ஆதாரமாயிருந்தது.

பிரியந்த சில்வா!

அவன்! இவள் குடியிருக்கும் வீட்டிலிருந்து நான்கு வீடுகளுக்கப்பால் உள்ள அந்தக் காவலரணி லுள்ளவன். வன்னியிலிருந்து வந்தவர்களின் விவரங் களைச் சேகரிக்க வந்தவன் இவளின் ஞாபகங்களைச் சேகரித்தான். விவரங்களுக்குப் பதிலாய் விம்மல் களையே கொடுத்தவளுக்காகப் பரிதாபப்பட்டான்.

ஒரு மார்கழிமாத மாலைப்பொழுது, சூரியக்கதிர் கள் மேற்கு நோக்கிச் சுருங்கிய தருணம் சுவரில் தலைசாய்த்து உட்கார்ந்திருந்தாள் நந்தினி- மடியில் குழந்தை, மனதில் நினைவுகளின் கனம்.

குயில் ஒன்று அங்குமிங்கும் பறந்து கொண்டிருந் தது. பின் வெளியிலிருந்த மஞ்சவண்ணாக் கிளையில் இருந்து கூவத் தொடங்கிற்று. அதன் குரலில் தவிப்பு இருந்தது.

துணை தொலைத்த தவிப்பா? துயர் மறக்கத் துடிப்பா? - அதற்கும் இவள் நிலையாகவேயிருந்தது.

ஆனால் சிறிது நேரத்தில் இன்னொரு குயிலுடன் சேர்ந்து பறந்து போயிற்று.

இப்போது எதையும் தன்னோடு சம்பந்தப்படுத்திப் பார்க்கும் அவளுக்குக் குயிலின் சிறுநேரச் செய்கை விழிகலங்க வைத்தது. தன் வாழ்க்கை மீதான அதிருப்தியின் வெளிப்பாடாக இருந்தது அது.

அவனுக்கோ நந்தினிக்கு நடந்தவை எவையுமே தெரியாது. வன்னிப் பெருநிலப்பரப்பில் அந்தக் காலப் பகுதிகளில் இருதரப்புக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம் இப்படி எத்தனையோ நந்தினிகளைச் சிதைத்து விட்டிருக்கின்றது என்பதை அறிவானா அவன்? - ஆனால் அத்தனையையும் மீறி அவளைக் காதல் செய்து கொண்டிருந்தான் அவன்.

பல வேளை வீடு தேடி வருவான்.

'' அம்மா கொஞ்சோந் தண்ணீ '' என்பான்

'' அம்மா அலவாங்கு தாங்க'' - என்பான்.

இப்படியே தன் வரவுகளை அதிகப்படுத்திக் கொண்டு ஒருநாள் தன் காதலைச் சொன்னான் அவன்.

அவள் கொதித்துப் போய்விட்டாள்

என்ன சொல்லிவிட்டான் இவன்? உன்னை என் னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றாள். அஸ்தமனங் களையே எண்ணிக் கொண்டிருப்பவளுக்கு ஒரு உத யத்தைப் பரிசளிக்க விரும்பினான் அவன். அவன் காதல் நேசத்தைப் போதித்தது அவளுக்கு. அவளோ சிறகு கள் உதிர்த்துவிட்டுத் தனிமைகளில் மூழ்கிப்போனாள்.

வாழ்க்கை தனக்குள் வரட்சியையும், வானவில்லை யும் காட்டிக் கொண்டிருக்கின்றது. எதை நாம் எண்ணிக்கொள்கின்றோமோ அதன்படி அமைந்து விடு கின்றது வாழ்க்கை என்று சொல்லிப்பார்த்தான் அவன். சுட்டுவிட்ட தீயே ரணங்களுக்கு மருந்தாகாது என்று தத்துவம் சொன்னாள் அவள்.

உன்னில் அதிகாரம் கொள்ள அழைக்கவில்லை. இனம், மதம், சாதி கடந்து வாழ்ந்து பார்ப்போம் என் றான் அவன். என் இனம் செய்துவிட்ட குற்றத்திற்காக என்னில் உன்னை நிறைத்துக் கொண்டு வாழ்ந்து விட்டுப் போகிறேன் என்று கெஞ்சினான். வறுமை விரட்டியபோது ஆயுதம் தரித்த அப்பாவி இவன்.''உன் கண்ணீரைத் துடைத்து, காயங்களை ஆறவிட்டுக் கொள்ள என்னோடு வந்துவிடு'' என்றான்.

இனங்கள் வந்து இடைமறித்தாலும் உறவுகள் உயிர் பிழிந்தாலும் உன்னை விட்டுப் பிரியமாட்டேன் பெண்ணே. எவ்வளவு தூரம் நீ கடந்து போனாலும் நீ நடந்து போகும் போது உனக்கு மேலாக வந்து கொண்டி ருக்கும் வானம் மாதிரி வந்து கொண்டிருப்பேன் என்று உருகிக் கொண்டிருந்தான் அவன்.

''பிரியந்த நான் உயிரோடு இருக்கும்வரை உன்னை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. உன்னில் தவறில்லை. உங்களால் நாங்கள் துவம்சம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறோம். இதற்குமேல் இங்கே நிற்காதே.... பிரியந்த திரும்பிப் போய்விடு'' ஆவே சமாய்க் கத்தினாள் அவள். அவன் எதுவும் செய்திடப் புரியாமல் நின்றான்.

மறுபடி அவன் பேசினான். ''நந்தினி நீ எதிர்க்கறதால எதுவும் இல்லை. இந்த நிமிசா ஒன்ன என்னவும் செய்ய முடியும். ஆனா ஒன்ன லவ் பண்றன். நீயில் லாம வாழ முடியாது'' அவன் வார்த்தைகள் கெஞ்சுவதை விடப் பல மடங்கு மேலாயிருந்தது அழுதுவிட்டிருந்தான்.

இப்போது அவனது துப்பாக்கி பேசத் தொடங்கியது.

ஒரிரு ரவைகளை அவன் தனக்குள் உமிழ்ந்து கொண்டான்.

''பிரியந்த... ஏன் இப்படிச் செய்தாய் '' சரிந்து கொண்டு போன அவனைத் தாங்கிக் கொண்டாள் அவள். பிரியந்த.... வாழ்க்கையின் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தவள் நான். ஏன் இப்படிச் செய்தாய்?

அவன் தள்ளாடிக் கொண்டே அவளின் பிடியிலி ருந்து நழுவினான். ''நந்தினி ஒங்கூட வாழ நெனச்சே, உனக்குப் பக்கத்தில சாகவேனும் கொடுத்துவைச் சிருக்கிறே என்ட லவ் சக்சஸ் ஆச்சி அவன் தன்னை மறந்து அழுது கொண்டிருந்தான். அதற்கு மேல் அவனால் பேச முடியாதிருந்தது.

''பிரியந்த உன் காதலை மதிக்கிறேன். அவள் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் அவளின் வேதனைகளைச் சொல்லிக் கொண்டிருந்தது. அவளின் கைவிரல்கள் அவன் தலைமுடியைக் கோதிவிட்டன.. ''ஏன் பிரியந்த கொள்கைகள் மாறாத அரசியற் சட்டங்களால் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறோம். உன்னில் எனக்கு வெறுப்பில்லை நீ கிழக்கிலிருக்கிறாய், நான் மேற்கிலிருக்கிறேன். உன்னிலிருந்து எனக்கான விடியல்களை எதிர்பார்க்க முடியாது. என்னால் நீ அஸ்தமித்துப் போகவும் முடியாது, எனக்கான அஸ்தமனங்கள் இழப்புகள் எனக்கு மட்டுமே.''

உலகத்தில் எத்தனையோ இனங்களிலிருந்தும் நாங்கள் ஏன் முரண்பட்டுக் கொண்டிருக்கிறோம்? நீங்கள் ஆள நினைக்கிறீர்கள். நாங்கள் அடி பணிந்து கொண்டே அநாதைகளாய்ப் போனோம். ஏன் பிரியந்த? நாங்கள் துன்பத்தின் ஒவ்வொரு அணுவை யும் அனுபவித்திருக்கிறோம். எங்களுக்காக எத்தனையோ பேரின் முகவரிகள் இழக்கப்பட்டிருக் கின்றன இந்த பூமியில்.

''நந்தினி...''

அவன் உடைந்து கொண்டிருக்கும் உயிர் சேர்த்துப் பேசினான். அவனது இருதயம் வலுவிழந்து கொண்டு போனது.

'' நந்தினி ....... நான்......

'' இந்த ஒண்ணரை வருஷத்தில ஒன்னை ........''

அவனது கைகள் இயக்கமற்றுக் கீழே விழுந்தன.

'' நந்தினி.....''

'' பிரியந்த......''

'' நந்......'' அவன் பேச்சு நின்று போனது ''பிரியந்த......'' அவளின் அலறலால் அந்தப் பிரதேசத்தின் அத்தனை அசைவும் நின்று போனது. அவனது உயிர் அவளருகிலேயே பிரிந்து போனது.

அவளைச் சுற்றி, உயிரற்ற பிரியந்தவின் உடலைச் சுற்றி பலநூறு பேர்கள். இப்போது இராணுவச் சிப்பாய்களின் ஜீப்புகள் வேகமாக வந்து கொண்டிருந்தன. சந்தேகத்தின் பேரில் அவளைக் கைது செய்யவா????

மாலை கடந்து இரவாகிவிட்ட தருணத்தில் நிலவின் முகம்மறைத்த பூமியின் பெரும்பரப்பை ஒளிமங்கச் செய்து கொண்டே வானேறிக் கொண்டி ருந்தது.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலில்லாக் கேள்விகள்



"தனிப்பட்ட கோப தாபங்களின் காரணங்களின் விளைவே அண்மைக்காலமாக குடாநாட்டில் இடம்பெற்றுவரும் அசாம்பாவிதங்கள். இதை ஊடகங்களே ஊதிப் பெருப்பித்து, யாழ்ப்பாணத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாகக் காட்ட முயல்கின்றன.'' யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எஸ்.பி.நெவின் பத்மதேவா மக்களுடனான கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இவருக்கு ஒருபடி மேலே போய் நமது 'மதிப்புக்குரிய' வீடமைப்புத் துறை அமைச்சர் விமல் வீரவன்ச '' குடாநாட்டில் அமைதியை விரும்பாத சக்திகளே இவ்வாறு அசாம்பாவிதங்களை ஏற்படுத்துகிறார்கள். இவற்றின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இருக்கலாம் நான் நினைக்கிறேன்'' என உலக மகா கண்டுபிடிப்பொன்றை சொல்லியிருக்கிறார். அவர் அப்படித்தான் சொல்வார். ஏனெனில் ஏற்கனவே இந்தியாவின் வங்க மொழியில் அமைந்த தேசிய கீதத்தை 'ஹிந்தி' மொழியில் அமைந்தது எனக் கூறித் தன்னுடைய மேதாவித்தனத்தை (?) வெளிப்படுத்தி, எல்லோரிடமும் வாங்கிக் கட்டியவர் அல்லவா? பரபரப்புக்காக எதையும் செய்ய- எதையும் சொல்ல- துணிந்தவர் அவர்.

எப்போதுமே தங்கள் மீதுள்ள தவறுகளை பிறர் தலையில் சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்வதில் அமைச்சர்களும் அரசு அதிகாரிகளும் கெட்டிக்காரர்கள் தான். ஆனால் பொய் சொல்வதற்கு நிறைய ஞாபக சக்தி வேண்டும். அது இவர்களுக்கில்லாததால் தாம் பொய் சொல்வதை மக்கள் உடனேயே அது பொய்தான் என அறியும்படி செய்துவிடுகிறார்கள். அரசின் மிக முக்கியமான அமைச்சர் விமல் வீரவன்ச. அதுபோலவே குடாநாட்டின் சட்ட ஒழுங்கைப் பாதுகாக்கும் பொலிஸ் துறைக்குப் பொறுப்பானவர் நெவின் பத்மதேவா. ஆனால் இவர்கள் இருவரும் கடந்த சில வாரங்களாக குடாநாட்டில் இடம்பெற்றுவரும் படுகொலைகள், கடத்தல்கள், ஆயுதக்குழுக்களின் பகிரங்க அராஜகங்கள் என்பன பற்றி சொல்லியிருக்கும் கருத்துகள் ஒன்றுக்கொன்று எதிரானவை. ''யாழ்ப்பாணத்தில் அமைதியை விரும்பாத சக்திகளே இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றன'' என அமைச்சர் விளம்ப, "இல்லையில்லை! தனிப்பட்ட பகைமைகளாலேயே இத்தகைய அசாம்பாவிதங்கள் நடக்கின்றன'' என பொலிஸ் அத்தியட்சகர் மறுத்தான் அடித்திருக்கிறார். இவர்களில் யாருடைய கூற்றை மக்கள் நம்புவது? எனத் தெரியாமல் தவிக்கிறார்கள்.

இதுவரையும் நடந்த பல கொலைகளுக்கான அல்லது கடத்தல்களுக்கான சூத்திரதாரிகள் கைது செய்யப்படவில்லை. சங்கானை குருக்களின் கொலையோடு தொடர்புடைய இராணுவத்தினரும், அவர்களுக்கு கஞ்சா கொடுத்துவிட்டு துப்பாக்கியை வாங்கிச் சென்றதாகக் கூறப்படும் மேலும் இருவருமே கைதாகி யிருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படியானால் இந்த இராணுவ வீரர்களையும், அவர்களது கைக்கூலிகளையும்தான் அமைச்சர் விமல் வீரவன்ச தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் என்று கூறுகிறாரா? அல்லது இராணுவத்தினரும் அவர்களோடு இயங்கும் இனம் தெரியாத குழுக்களும் தம்முடைய தனிப் பட்ட பகையைத் தீர்க்கவே இத்தகைய கொடூரங்களில் இறங்குவதாகப் பொலிஸ் அத்தியட்சகர் ஒத்துக்கொள்கிறாரா? ஏனெனில் மேற்கூறிய இருவரின் கூற்றுகளின் படியும் இங்கு ''அமைதியை விரும்பாத கூட்டமைப்பினரோ'' அல்லது 'தனிப்பட்ட பகையாளிகளோ' யாழ்ப்பாணச் சம்பவங்களின் சூத்திரதாரிகளாக இருந்தால் - அவர்கள் இனம்காணப்பட்டிருந்தால்- ஏன் இன்னமும் கைது செய்யப்படவில்லை என்ற கேள்வியையும் அவர்கள் இருவர் முன்னாலும் சமர்ப்பிக்க மக்கள் துடியாய் துடிக்கிறார்கள். இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் இராணுவத்தினரும் அவர்களோடு இணைந்து செயற்படும் இளைஞர்களும்தான். அப்படியிருக்க எந்த ஆதாரத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இத்தகைய கொடூரங்களைச் செய்வதாக விமல் வீரவன்ஸ கூறியிருக்க முடியும். நாடாளுமன்றம் என்பதால் ஆதாரங்களை எவரும் கேட்கமாட்டார்கள் என்ற துணிவில் வாய்க்கு வந்ததை- அது வாந்தியாக இருந்தாலும் கூட- கக்கிவிடுகின்ற இதுபோன்ற அமைச்சர்கள் இருக்கையில் இலங்கை மீது சர்வதேசம் எப்போதும் சந்தேகக்கண்ணைத் தானே வைத்திருக்கும்.

குடாநாட்டில் இடம்பெறும் கொலைகள், கடத்தல்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரேரணையைக் கொண்டு வரப்போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தது. அதுபோலவே பாரம்பரிய மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இது தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வியை எழுப்பியிருந்தார். கட்டு மீறிச் செல்லும் பயங்கரங்களின் உண்மையை அறிய சர்வகட்சி குழுவொன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றில் கோரியிருந்தார். ஆனால் இவை எவற்றுக்கும் அரசிடம் இருந்து தெளிவான பதில் இல்லை.

''நிலைமையின் உண்மைத் தன்மை எதுவும் தெரியாமல் அவை குறித்து கருத்துக் கூற முடியாது. அதற்கு அவகாசம் வேண்டும்'' என்று கூறி இந்த விவகாரத்திலிருந்து அரசு நழுவிவிட்டது.

''அத்துடன் யாழ்ப்பாணத்துக்கு சர்வகட்சிக்குழு அனுப்புமளவுக்கு அங்கு நிலைமைகள் ஒன்றும் மோசமாகிப் போய்விடவில்லை. தம்முடைய அரசியல் இலாபத்துக்காகவே எதிர்க்கட்சிகள் இவ்வாறு தேவையற்ற கூப்பாடுகளைப் போடுகின்றன'' என்று கூறி ரணிலின் சர்வகட்சிக்குழு அனுப்பவேண்டும் என்ற ஆலோசனைக்கும் அரசுத்தரப்பு வேட்டு வைத்துவிட்டது. யாழ்ப்பாணத்தில் அரசு கூறுவதுபோல ' எல்லாமே இயல்பாயுள்ளன' என்ற நிலையிருந்தால் சர்வகட்சிக்குழுவை அனுப்புவதற்கு ஏன் மாட்டேன் என அரசு அடம்பிடிக்கிறது என்பது புரியவில்லை. அண்மைக்காலமாகவே 'குழு' என்ற சொல்லே அரசுக்கு 'அலேர்ஜி' ஆகிவிட்டது. அது ஐ.நா.நிபுணர் குழுவிலிருந்து இப்போது சர்வகட்சிக்குழு வரை நீடிக்கிறது. சிலவேளைகளில் ரணில் கேட்டுக்கொண்டதைப் போல யாழ்ப்பாணத்தில் உண்மை நிலைகளை அறிய ஒரு குழு வருமானால் அதன்மூலம் சில திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்துவிடுமோ என்ற பயமும் இந்த சர்வகட்சிக்குழு திட்டத்தை அரசாங்கம் குப்பைத்தொட்டியில் வீசுவதற்குக் [illegible]

இவ்வாறு நா[illegible]

**சங்கானை குருக்களின் கொலையோடு தொடர்புடைய இராணுவத்தினரும், அவர்களுக்கு கஞ்சா கொடுத்துவிட்டு துப்பாக்கியை வாங்கிச் சென்றதாகக் கூறப்படும் மேலும் இருவரும் கைதாகியிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. அப்படியானால் இந்த இராணுவ வீரர்களையும், அவர்களது கைக்கூலிகளையும்தான் அமைச்சர் விமல் வீரவன்ஸ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் என்று கூறுகிறாரா?**

நடைபெறுகையில்தான் - யாழ்ப்பாணத்தில் நடைபெறும் திரைமறைவு வேலைகளையெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்களே- என்ற ஆத்திரத்தில் கேள்விகேட்ட கூட்டமைப்பினர் மீதே 'பிளேற்றை' திருப்பிப் போட்டார் விமல் வீரவன்ச. அதன் விளைவே கூட்டமைப்பினரே இத்தகைய குழப்பத்துக்குக் காரணம் என்ற அவரது ஆதாரமற்ற வசைபாடலாகும்.

என்னதான் கூட்டமைப்பினரின் மற்றும் அமைச்சர் டக்ளஸின் குடாநாட்டுக் குழப்பங்கள் தொடர்பான கேள்விகளை ஒருமாதிரிச் 'சளாப்பி' விட்டாலும் பதில் சொல்லவேண்டிய கட்டாயமொன்று அரசிற்கு இருந்தது. இதற்காக 'ரூம்' போட்டு யோசித்ததில் வந்த கண்டுபிடிப்புத்தான் தனிப்பட்ட பகைமை காரணமாகவே குழப்பங்கள் குடாநாட்டில் நிகழ்கின்றன என்ற அறிவிப்பாகும்.

சரி, தனிப்பட்ட காரணங்களுக்காகத் தான் இத்தனை கோரங்களும் அரங்கேறியிருந்தால்-

✱ எல்லாத் தனிப்பட்ட பகையாளிகளும் சொல்லிவைத்தாற் போல் ஒரு [illegible]தியில் மாத்திரம் [illegible]ழுந்து தமது பழிக்குப்பழி தீர்க்கும் படலத்தை ஆரம்பித்தது எப்படி?

✱பட்டப் பகலில் ஆயுதங்களோடு நடமாடும் அளவுக்குத் தனிப்பட்ட பகையாளிகள் சர்வ வல்லமை படைத்தவர்களா?

✱குடாநாட்டில் உரும்பிராய் பகுதியே அண்மைக்காலக் குழப்பங்களில் அதிகம் அனர்த்தம் நிகழ்ந்த பிரதேசம். பொலிஸார் கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக்கொண்டு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவது உண்மையென்றால் ஒரே பிரதேசத்தில் அடுத்தடுத்து- பகிரங்கமாக- குற்றச்செயல்கள் நடைபெறும் போது பொலிஸார் எந்த மரத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தார்கள்?

✱சங்கனைச் சம்பவம் தவிர்ந்த ஏனைய அசாம்பாவிதங்களோடு தொடர்புடைய எவருமே கைது செய்யப்படாத நிலையில் பொத்தாம் பொதுவாக தனிப்பட்ட பகையே காரணம் என அரசு சுட்டு விரலைநீட்டி விட்டு தப்பித்துக் கொள்வதிலேயே குறியாக இருப்பது ஏன்?

✱நாடாளுமன்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள் கவனயீர்ப்பு பிரேரணையில் கொண்டு வரப் போவதாக அறிவித்த கையோடு, திடீரென குடாநாட்டில் நிகழ்ந்த அசம்பாவிதங்களின் வேகம் அமுங்கிப் போனது எப்படி?

✱அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவரே குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக நாடாளுமன்றில் தெரிவிக்கும் போது, அப் படி எதுவும் நடைபெறவில்லை என அரசும், பொலிஸ் தரப்பும் மாற்றான தொனியில் கூறுவது ஏன்?

இது போன்ற நிறையக் கேள்விகள் மக்களிடம் உண்டு. ஆனால் அவற்றுக்கான பதில்கள் அரசிடமோ, பாதுகாப்புத் தரப்பிடமோ இருப்பதாகத் தெரியவில்லை. முன்னரும் - சென்ற வருடத்தின் முற்பகுதியில் - இதுபோன்ற அச்சுறுத்தலான சூழல் ஒன்று உருவாகியிருந்தது. அப்போது வெள்ளைவான் கடத்தல் தான் பிரபலமாகியிருந்தது. துப்பாக்கியோசை கேட்கவேயில்லை. அதுவும் ஒரு குறிப்பிட்ட 'சீஸனுக்குள்' தான் நடந்து முடிந்தது. இப்போது மீண்டும் அது போன்ற பிரளயகாலம் ஆரம்பித்து விட்டதோ என்று தான் அனைவரும் எண்ணுகின்றனர். ஆயினும் ஒரு பரிணாம வளர்ச்சி போன்று, முன்னர் தனியே கடத்தலில் ஈடுபட்டவர்கள் இப்போது துப்பாக்கிகளாலும் பேச முற்பட்டிருக்கிறார்கள்.

அரசுக்கு எதிரான தரப்புகள் குடாநாட்டுக்குள் நுழைகின்ற போதெல்லாம் இனந்தெரியாத நபர்களின் தாக்குதல்கள் நடப்பது வழமை. காணமல்போனோர் தொடர்பாக ஆர்ப்பாட்டம் நடத்த வந்த ஜே.வி.பி யினருக்கு நடந்த கதியை உலகே அறியும். அதற்கு யாழ்ப்பாணத்து மக்கள் மீது பழியைப் போட்டது அரசு. இப்போது தனிப்பட்ட பகையாளிகள் மீது எல்லாவற்றையும் சுமத்திவிட நினைக்கிறார்கள்.

ஓடுகாலி

குடாநாட்டில் தற்போது கண்காணிப்பு பணிகளுக்காக முக்கிய இடங்களில்- கொழும்பைப் போன்று-கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட போவதாக படைத்தரப்பு கூறியுள்ளது. இது குற்றங்களை கட்டுப்படுத்தவா? அல்லது தமது எதிராளிகளின் நடமாட்டத்தை அவதானித்து அவர்கள் மீதான தாக்குதலை இலகுபடுத்தவா? என்று மக்கள் இப்போதே தமக்குள் கேட்கத்தொடங்கி விட்டார்கள்.

கேள்விகளை தமக்குள் மட்டுமே கேட்கும் உரிமைதான் மக்களுக்கு உண்டு. வெளியே கேட்டாலும் பதில் எதுவும் உரியவர்களிடம் இருந்து வரப் போவதில்லை. சில வேளைகளில் ஆயுதமேந்திய 'தனிப்பட்ட பகையாளிகள்' வேண்டுமானால் வரக்கூடும் அதனால் நமக்கேன் பொல்லாப்பு என்று அநேக மக்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்க பழகிவிட்டார்கள். எல்லோரும் அப்படி இருப்பதே இப்போதைக்கு பாதுகாப்பாக இருக்க ஒரேவழி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS இன்றி STUDY IN UK





## இறுதி சந்தர்ப்பம்

**ONLY 40 SEATS ARE AVAILABLE**

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்!!!!

**DEC/JAN** மாதங்களில் விசா கிடைத்து பயணமான யாழ் மாணவர்களில் சிலர்



பதிவுகளுக்கு **COLOMBO - 0117 555511, JAFFNA - 021 7538395**
**HOTLINE - 0117 555514**

*விசா நடைமுறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டா. *

**எமது சேவை முற்றிலும் இலவசமானது**

*Condition Apply

**EXPONET**
Overseas Consultants

Head office -
379-1/2, Galle Road,
Colombo 6, Sri Lanka.

Jaffna Branch -
102 2/2, Navalar Road,
Jaffna.

London Branch -
No:56,The Gradens
Harrow Middlessex
Ha1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்துள்ளே தெய்வத்தைக் காண்போம்



சமூகத்தில் வேலையும் சேவையும் செய்து கொண்டிருக்கும் பொழுது மனம் வாழ்வின் நோக்கத்தில், இறை சிந்தனையில் இருக்க வேண்டும்(Head in the Forest Hand in the Society)என்று சத்தியசாயி பாபா கூறியுள்ளார். எந்த நோக்கத்தை எய்துவதற்காக, எத்தகைய அணுகுமுறையை நாம் கைக்கொள்ள வேண்டும் என்றும் சத்திய சாயிபாபா கூறுகின்றார்.

### ஆன்மீகமும் சமூகவாழ்வும் ஒன்றே

சமூக வாழ்க்கை நூல்கள், சமூக இயல் நூல்கள், அறிவியல் நூல்கள் என்பவைகளுக்கும் ஆன்மீக நூல்கள், தெய்வத்துவ ஆராய்ச்சிகள் இவைகளுக்கும் என்ன சம்பந்தம் ? எனும் கேள்வி சர்வசாதாரணமானது. எல்லோரும் கேட்கின்ற கேள்வியும் அதுவாகலாம். தெய்வ வழிபாட்டில் ஈடுபடும் சாதகனொருவன் சமூகத்தினிடத்தும், சமூகத்திலெழும் பல விதமான பிரச்சினைகளிடத்தும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற கேள்வியும் பல தடவைகள் மக்களிடத்தில் எழுகின்றது.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் 5**

ஆனால் இக்கேள்விகளுக்கு இடமேயில்லையென்பதை யாரும் உணராமல் இருப்பதுதான் ஆச்சரியம். இதுவா? அதுவா? இதுவும் அதுவும் ஒன்றா? இதுவானால் அது உண்டா? அதுவானால் இது உண்டா? என்ற கேள்விகள் எழுவதற்கு அடிப்படையாக இது அது என்ற இரண்டு பொருள்கள் இருக்க வேண்டாமா? இதுவும் அதுவும் ஒன்றேயென்றால் கேள்விக்கு இடமேது.

### சமுதாயம் இறைவனின் தோற்றம்

சமுதாயம் வேறு சாதகன் வேறு என்று எண்ணுவதற்கிடமில்லை. வேறென்றெண்ணி சாதகன் சமுதாயத்தினிடம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்று ஒரு கேள்வியை எழுப்பி வினாவினால் அது மனிதனின் அறியாமையின் கோளாறல்லவா! தெய்வத்தின் வெளிப்படைத் தோற்றமல்லவா சமுதாயம்.

### பூரணத்துவ சமூகம்

மனிதன் இல்லாமல் சமூதாயம் என்று ஒன்று உண்டா? மனிதர்களைக் கொண்ட கூட்டம் அல்லது பரம்பல் தானே சமுதாயம் மனிதனிடத்தில் தெய்வத்தன்மை இல்லாமல் எந்தச் சமூகம் பூரணத்துவத்தை அடைய முடியும்? பலன் பெற்றுத் திகழ முடியும். தெய்வத்துவமும் உலகில் மனிதன் மூலமாய் செயல்படாமல் எதன் மூலமாய் எவ்வாறு செயற்படும். ஒரு சமுதாயத்திலுள்ள மனிதர்கள் தெய்வத்துவம் வெளிப்பட்ட நல்லவர்களென்றால் சமுதாயமும் நல்லதாகவே அமையும். சமுதாயத்திலுள்ள மனிதர்கள் தீயவர்களானால் சமுதாயமும் தீமையுற்றழியும்.

### மனிதனிடத்தில் தெய்வத்துவம்

மனிதனிடத்தில் தெய்வத்துவம் இயல்பாகவே உள்ளுறைந்து வெளிப்படாத நிலையில் உள்ளது. ஒவ்வொரு மனிதனிடத்தும் அந்தத் தெய்வத்துவம் இயல் பாகவே வெளிப்பட்டுத் திகழ்கிறதென்றால் எல்லாச் சமுதாயங்களும் ஒன்றென்றல்லவோ சொல்ல வேண்டும். நன்மை, தீமைகளைப் பொறுத்தளவில் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபாடு இருப்பதை நீங்கள் அறிவீர்கள். தெய்வத்துவம் மனிதனிடத்தில் வெளிப்படும் நிலைக்கு வந்து அவனது அன்றாட வாழ்கையில் செயற்பட வேண்டும். அப்பொழுதே அந்த மனிதனால் சமுதாயம் பலன் பெறும். அவ்வாறு தெய்வத்துவம் மனிதனிடத்தில் வெளிப்படும்படி திகழ்வதற்கு அந்த மனிதன் இறைவனிடத்தில் இடையறா நோக்கும் கவனமும் ஆர்வமும் செலுத்த வேண்டும். சமுதாய வாழ்வில் இருக்கும் பொழுது இறைசிந்தனை இருக்க வேண்டும் என்பதற்கு இதுவே காரணம். குந்தகம் விளைவிக்கும் மனதை ஒழித்து கடவுளின் அருளை நாடினால் இறைவனின் சக்தியைப் பெறலாம். உன் உத்தரவை நாடி உன்னுள்ளேயே அவ்வருள் இருக்கின்றது. காத்துக் கிடக்கின்றது. நாம்தான் அதைப் புறக்கணிக்கின்றோம் என்று சத்திய சாயிபாபா கூறுகின்றார்.

### தெய்வத்துவம் வெளிப்படத் தடை

சமூகத்தில் வாழ்க்கையின் படித்தரம் உயர வேண்டுமென்று மக்கள் முழக்கமிடுகிறார்களேயன்றி உன்னதமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று கூக் குரலிடுவதில்லை. இதுவே சமூகத்தின் கீழ் நிலைக்குக் காரணம். உன்னத வாழ்க்கைக்கு அடிப்படை நல்லொழுக்கம், கீழ்ப்பணிவு,இரக்க உணர்ச்சி, பற்றற்ற நிலை இவையுண்டானால் ஆடம்பர வாழ்க்கையின் மீதுள்ள மோகம் அறுபடும். ஆனால் இப்பொழுது மனிதனோ ஆசைகளுக்கு அடிமையாகிவிட்டான். தன்னுள்ளே தங்கி நிற்கும் தெய்வத்தன்மையை வளர்க்க வழியற்றவனாய், செயலற்றவனாய், அதைத் தூண்டு வதற்கு நாட்டமற்றவனாய் இருக்கிறான்.

### நாம் நல்லவர்களாக மாற- ஆன்மீக சாதனை

நல்லொழுக்கத்தைப் பற்றியும் அவற்றை அடைய வேண்டிய முறைகளைப்பற்றியும் பலர் சொல்லக் கேட்டு நாங்கள் திருந்திவிட முடியாது. பலனடைந்து விட முடியாது என்று சத்தியசாயிபாபா கூறுகின்றார். நாங்கள் அவற்றைப் பழக்கத்தில் சாதிக்க வேண்டும். செய்து நடைமுறையில் பழக வேண்டும், நிலைநாட்ட வேண்டும். இதைத்தான் தெய்வீக அல்லது ஆன்மீக சாதனை என்று சொல்வர். ஏனென்றால் அதுதான் மனித வாழ்க்கையின் அடிப்படையைத் திருத்தும்.

### சமூகமுன்னேற்றத்திற்கு ஆன்மீக சாதனை

ஆன்மீக வாழ்க்கை தனிப்பட்ட நபருக்கோ, சமூகத்துக்கோ என்று சிலர் சொல்லக்கூடும். இது விந்தையான ஒரு கருத்து. தனிப்பட்ட நபரில்லாமல் சமூக மெங்கே தனிப்பட்ட நபரின் குணா குணங்களே சமூகத்தின் குணா குணங்கள். கடவுளிடத்தில் அருளை, நன்மைகளைப் பெற்றுக் கொண்டால் அந்த மனிதன் தன் சக தோழர்களிடத்தில், மனித சமுதாயத்தினிடத்தில் வெறுப்புக் கொள்ள இயலாது, சமூக முன்னேற்றத்தில் ஈடுபடுவான்.

> முடிவாக சொல்லப்போனால் சமூகத்தில் தெய்வத்துவத்தைக் காண்பது தவிர்க்க முடியாத ஒவ்வொருவரதும் கடமையாகும். ஒவ்வொருவனும் தன்சக்தியால், சாமர்த்தியத்தியத்தால் சமூகம் நலனடையப் பாடுபட வேண்டும்.

மேலும் மனிதன்

* விசாலமான மனப்பான்மையையும்
* தன்நலன், பிறன்நலன், யாவருடைய நலனையும் நினைந்து செயலாற்றும் தன்மையையும்
* உள்ளுணர்வினால் பார்க்கும் ஆற்றலையும் போற்றி வளர்க்க வேண்டும்.

மனிதனின் தனிப்பட்ட பண்புகள் யாவையெனின்

* தூய்மையைக் கடைப்பிடித்தல்.
* கூட்டுறவு கொள்ள ஆவலுறுதல்.
* எல்லோரும் ஓர் உறவு என்ற மனப்பான்மையைப் போற்றி வளர்த்தல்.

வாழ்வில் இவை யாவற்றையும் தடங்கல்கள் என்று நினைந்தால் அது வாழ வேண்டிய வாழ்க்கையாகாது. அவ்வாறு வாழும் வாழ்க்கை வாழ்க்கையுமாகாது.

**டாக்டர் இ.சிவசங்கர்**

மானிடர்கள் யாவரும் அமைதி, 'ஆனந்தம், சாந்தம் இவைகளைப் பெற முயற்சி செய்கின்றார்கள். இவைகளைப்பெற வேண்டுமானால் மனிதனுக்கு மனிதன் வித்தியாசமானவனென்ற மனப்பான்மை அறவே ஒழிய வேண்டும். சகோதரத்துவம் ஆத்ம உணர்ச்சியினால் தான் நிலைபெற்று வளரும். மனிதர்கள் யாவரும் ஆத்ம சொரூபங்கள்,வேற்றுமையற்றவர்களென்று உறுதி கொள்ள வேண்டும். இவ்விதமான விழிப்புணர்ச்சியே உன்னை மனிதனென்று சொல்வதற்கு உரிமை தரும். மனிதனாக வாழ்வதற்குக் கற்றுக் கொள். இதுவே சாதனை எனப்படும்.

ஆகவே சமூகத்தில் நாம் வாழும்போது கவனத்தை இறைவன் மீதே வைத்தபடி எமது கடமைகளை செய்து வருவோமானால், எம்மில் தெய்வத்துவம் வெளிப் பட்டு நாமும் நல்லவர்களாகி, சமூகமும் பலனடையும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல் என்பதன் வழிமுறைகளை சிறிசத்திய சாயிபாபா மேற்கண்டவழிகளில் கூறியுள்ளார். இவ்வழிமுறைகளில் வாழ்வதனூடாக எமது வாழ்வை செப்பனிட்டு நல்வாழ்வை அமைத்துக் கொள்ளலாம்.

வாழ்க இன்புற்று...

# தமிழறிஞர், தொல்லியலாளர் தேவராஜனுக்கு எலிசபெத் மகாராணியின் ராணிசேவை விருது

இரண்டாவது எலிசபெத் மகாராணியின் 2011 ஆம் ஆண்டுக்கான 'ராணி சேவை விருது' 2011 தமிழ் அரசியலிலும் குறிப்பாகத் தொல்லியலிலும் அறியப்பட்ட ஓர் அறிஞரும் எழுத்தாளரும் தற்பொழுது நியூசிலாந்தில் வாழ்ந்து வருபவருமான ஆறுமுகம் தேவராஜனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேவராஜனின் சமூகப்பணிகளை மதித்து இரண்டாவது எலிசபெத் மகாராணியினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் "Queens Service Medal 2011" இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கையில் தம் ஊரான வடமராட்சியில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டி பல பணிகளைச்செய்தார். கொழும்பிலிருந்த காலப்பகுதியிலும் தமது தொல்லியல் அரசியல் அறிவினைப் பல வகையிலும் பிரயோகித்தார். இன்று நியூசிலாந்தில் தமது தள்ளாத வயதிலும் தமிழ்ச் சமூகத்திற்கு பல பணிகளைச் செய்து வருகிறார். இதற்காகவே இந்தக் கௌரவ விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொல்லியல் அறிஞர்கள் பலருடனும் தொடர்புள்ள இவர் தமிழர் வரலாற்றையும் அரசியற் போக்கினையும் தொல்லியல் பரிமாணங்களின் மூலம் நிறுவிக் காட்டுவதில் முக்கியம் பெறுகிறார். இவரது இருமொழியாற்றலும் நீதித்துறையில் சேவையாற்றிய அனுபவமும் இங்குள்ள சங்கங்களுக்கும் அமைப்புக்களுக்கும் துணையாய் நிற்பதில் அவருடைய பணியைப் பரிமாணப்படுத்தி நிற்கின்றன. நியூசிலாந்துத் தமிழ்ச்சங்கம், நியூசிலாந்துத் தமிழர் பேரவை, நியூசிலாந்துத் தமிழ் மூத்தோர் அமைப்பு என்பவற்றில் இவருடைய பணிகள் முக்கியம் வாய்ந்தவையாக உள்ளன.


பாடசாலை நாள்களில் 'தமிழோசை' என்ற சஞ்சிகையை வெளியிட்டுவந்த இவர் பின்னாள்களில் சுதந்திரன் மற்றும் தமிழ்த்தேசிய நாளிதழ்களில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் - தமிழ்நாடு மற்றும் வெளிநாட்டு இதழ்களிலும் எழுதியுள்ளார். இவரது'காலந்தோறும் இலங்கையில் தமிழ்' என்ற கட்டுரை 'ஸ்ரீலங்காதீப' சிங்கள வார இதழிலும் வெளிவந்துள்ளது.

1972ல் வல்லிபுரத்தில் ஈமத்தாழியைக் கண்டுபிடிக்க இவர் உதவியுள்ளார். முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவில் நடைபெற்ற போது அதில் -வணஹிச்சல்ல தம்மரத்தின தேரர் 'சிங்களத்தில் தமிழ் மொழியின் செல்வாக்கு' என்ற கட்டுரையையும் - தொல்லியல் ஆணையாளர் சதாமங்களா கருணாரத்ன 'இலங்கைப் பிராமியக் கல்வெட்டுக்களில் தமிழின் செல்வாக்கு'என்ற கட்டுரையையும் வாசிப்பதற்கு இருவருக்கும் இந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். சிங்கள இலக்கிய மேதை சார்ள்ஸ் சில்வாவை ஊக்கப்படுத்தித் திருக்குறளை 'ஸ்ரீ கீய' என்ற பெயரில் மொழி பெயர்க்க வைத்தார்.1976 இல் நடைபெற்ற மட்டக்களப்புத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கிழக்கிலங்கையில் தமிழரின் தொன்மை என்ற இவரால் ... யில் பல தொல்லியற் சான்றுகளைச் சுட்டிக் காட்டினார்.1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படிக்கப்பெற்ற இலங்கையில் தமிழரின் தொன்மை கல்வெட்டுச் சான்றுகள் என்ற தலைப்பிலான இவரது கட்டுரை அந்த மாநாட்டின் கட்டுரைத் தொகுப்பில் வெளிவந்தது.

1991 ஆம் ஆண்டு காவிரிப்பூம் பட்டினம் தொடர்பான ஆழ்கடல் - தொல்லியல் ஆய்வில் பூம்புகார் ஆழ்கடல் ஆய்வுப் பணிகளைப் பார்க்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இதே ஆண்டில் தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்தியக் கல்வெட்டியல் மாநாட் டில் ஓர் அரைநாளை இலங்கைப் பிராமிக் கல்வெட்டு ஆய்வரங்கத்துக்கு ஒதுக்குவித்து -அதில் சிங்கள அறிஞர்களையும் பேசவைத்தார்.இந்தியாவில் இலங்கையின் பிராமிக் கல்வெட்டாய்வு பற்றிய பரவலுக்கு இவர் பல பணிகளைச் செய்துள்ளார்.

தொல்லியல் பற்றிய தெளிந்த அறிதலுடன் இலங்கை அரசியலில் நிறைந்த தகவல்களைத் தம்முள்ளே கொண்டுள்ள இவர் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.1954 இல் திரி சிங்கள பெரமுனவின் தமிழரெதிர்ப்புக் கட்டுரைகளுக்கு இவர் எழுதிய எதிர்ப்புக் கட்டுரைகள் டைம்ஸ் ஒப் சிலோன் நாளிதழ்களில் வெளிவந்தன.

'பல்கலைக்கழகத் தரப்படுத்தலால் தமிழ் மாணவருக்கு ஏற்பட்ட பாதிப்பு'- 'அரச சேவையில் தமிழர் பறக்கணிப்பு' 'அரசகரும மொழியாகத் தமிழ் அன்றும் - இன்றும்' ஆகிய ஆய்வுகள் இவரால் மேற்கொள்ளப்பட்டன. 2003 இல் சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய 'பயங்கரவாதம்' பற்றிய அனைத்துலக மாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்தார். மாநாட்டுத் தொகுப்பு நூலிலும் அது சேர்க்கப்பட்டது. தனிநாயகம் அடிகள் மேற்கொண்ட பற்றுதலினால்- இவர் எழுதிய 'தமிழ்த்திரு தனிநாயக அடிகள்' என்ற நூலுக்கு பேராசிரியர் க.கைலாசபதி வழங்கியுள்ள முகவுரையில் விரிவான ஆய்வுக்கு இவரது நூல் நல்ல வழிகாட்டி எனப் பாராட்டியுள்ளார். 2009 இல் குமரன் புத்தக இல்லம் வெளியிட்ட தனிநாயகம் அடிகள் பற்றிய தொகுப்பு நூலில் இவரது கட்டுரையும் மற்றும் பேராசிரியர் சண்முகதாஸ், அமுதன் அடிகள் (சென்னை) ஆகியோரின் கட்டுரைகளுமே சேர்க்கப்பட்டுள்ளன.



இந்திய வெளியுறவுச் செயலாளர்களான கே.பி. எஸ். மேனன், ஏ. பி. வெங்க டேஸ்வரன் ஆகியோர் இவரது உரைகளை நேரடியாகவே பாராட்டியுள்ளனர்.

நியுசிலாந்திலிருந்து
**எம்.வரதராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்துரை ஞானரத்தினம்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஞானரத்தினம் நேற்று முன்தினம் (07.01.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, செல்லத்துரை, குணரத்தினம், இராசதுரை மற்றும் செல்லம்மா, திலகம்மா, அப்புத்துரை, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, தனநாயகி, பேரின்பநாதன் (பிரான்ஸ்), உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும் யோகராணி, சிவசுப்பிரமணியம், இந்திரலீலா ஆகியோரின் அன்பு மாமியாரும் முரளிதரன், துளசிதரன் (அவுஸ்திரேலியா), சுரேஸ்காந் (லண்டன்), ஜனார்த்தனன் (பொறியியலாளர்), றஜீவ்காந் (இந்தியா), யதுகரன், லோஜிதா ஆகியோ ரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.11 மணியளவில் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி,கோப்பாய் மத்தி,கோப்பாய். தகவல்: குடும்பத்தினர்.

# அறிவித்தல்

பொதுமக்களுக்கும் சகல செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. வாடிக்கையாளர்களுக்குமானது



பாலச்சந்திரன் பிரபாஹரன் 781940810V
ஸ்டேஷன் ரோட், சாவகச்சேரி

செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. சாவகச்சேரி
ஆயுட் காப்புறுதிக் கிளையில் ஆயுட் காப்புறுதி ஆலோசகராக
பணியாற்றிய மேற்காணும் நபர் தற்போது
எமது நிறுவனத்தில் வேலை செய்யவில்லை.
எனவே எதிர்காலத்தில் அவருடன் மேற்கொள்ளப்படும் எவ்வித
செயற்பாடுகளுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும்
நாம் பொறுப்பேற்க மாட்டோம்
என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

சிரேஸ்ட முகாமையாளர் - மனித வளங்கள்
செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி.
செலிங்கோ டவர்,
இல. 106, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05.

# ஐந்து கண் பாலத்தில் தவறி விழுந்த நபர்

யாழ்ப்பாணம், ஜன.9

சண்டிலிப்பாய் ஐந்துகண் பாலத்தில் இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளுடன் தவறி விழுந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மேற்படி பாலத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் அருகே அமைக்கப்பட்ட தற்காலிக நடைபாதையூடாகப் பயணம் செய்த வேளை மேற்படி இளைஞர் தவறி விழுந்துள்ளார். எனினும் சம்பந்தப்பட்ட இளைஞர் காயம் எதுவுமின்றி தப்பியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (201-26)

# கலைமாணிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியது

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகினால் கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற கலைமாணி பகுதி I பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பரீட்சையை எழுதிய மாணவர்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் பார்வையிடலாம் என வெளி வாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் க.சிவராஜா தெரிவித்துள்ளார்.

# பஸ் மிதிபலகையில் பயணித்தவர் விழுந்து காயம்

தென்மராட்சி, ஜன.9

பஸ் மிதிபலகையில் பயணம் செய்தவர் தவறிவிழுந்து காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் அண்மையில் முகமாலையில் இடம்பெற்றது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குகதாஸன் (வயது 40) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (201-107)

# அறிவித்தல்

பொதுமக்களுக்கும் சகல செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. வாடிக்கையாளர்களுக்குமானது



சுயானா கனகலிங்கம் 857201760V
கைதடி மேற்கு, கைதடி.

செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. சுன்னாகம்
ஆயுட் காப்புறுதிக் கிளையில் ஆயுட் காப்புறுதி விற்பனை ஆலோசகராகப்
பணியாற்றிய மேற்காணும் நபர் தற்போது
எமது நிறுவனத்தில் வேலை செய்யவில்லை.
எனவே எதிர்காலத்தில் அவருடன் மேற்கொள்ளப்படும் எவ்வித
செயற்பாடுகளுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும்
நாம் பொறுப்பேற்க மாட்டோம்
என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

சிரேஸ்ட முகாமையாளர் - மனித வளங்கள்
செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி.
செலிங்கோ டவர்,
இல. 106, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05.


# இந்திய ஸ்தானிகரகம் கொழும்பு

## சொத்து தேவை இந்திய ஸ்தானிகரகத்துக்கு

1) கொழும்பு 03, 05 அல்லது 07 ஆகியவற்றின் மத்திய பகுதிகளில் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நிலம் தேவைப்படுகின்றது.

2) கொழும்பு 03,05 அல்லது 07 பகுதிகளில் குளியல் / கழிவறைகள் இணைந்த 3-4 படுக்கை அறைகள், விசாலமான புழங்கும் அறை, சாப்பாட்டறை, வேலையாளருக்கான அறை, கராஜ் மற்றும் சிறிய பூங்காவுடன் மாளிகை வீடு தேவை.

கரிசனையுடைய தரப்பினர் 2011 ஜனவரி 14ஆம் திகதி அல்லது அதற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

HEAD OF CHANCERY
36-38, GALLE ROAD, COLOMBO-03.
TELE.NO:- 011-2327587/2422788/2422789
FAX NO:- 011-2446403/2448166
E-MAILL:- hoc.colombo@mea.gov.in

(சி/574230)

# FREE SCHOLARSHIPS
## FOR STUDENTS & SCHOOL LEAVERS

USAID | SRI LANKA

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபாரத் தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளன.




சர்வதேச அங்கீகாரமுடைய சன்றிதழ் மற்றும் பாடத்திட்டம், கல்வி அமைச்சின் ஊடாகப் பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள எமது பயிற்சி நிலையங்களில் விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். க.பொ.த (சா.த), (உ.த) மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகியவர்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் நேரில் வரவும்

மேலதிக விவரங்களுக்கு :

Skills for Life IT ISLAND GATEWAY CENTRE
347, Kasthuriyar Road, Jaffna. 021 222 7967 / 021 567 5555

கிளைகள் :

New Market Building, Chavakacheri 021 227 0323
Luxmi Theatre Lane, Nelliady, 021 226 2395

** விண்ணப்பங்கள் 25.01.2011 வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் **

ENGLISH & IT @ GATEWAY FOR A PROMISING FUTURE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவாச நோய்களைத் தடுப்போம்



தற்போதைய உலகில் இறப்பு வீதத்தைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக நீண்ட காலத்திற்குரிய சுவாசநோய்கள் (வருடத்துக்கு நான்கு மில்லியன்) விளங்குகின்றன. அதிகரித்த புகையிலைப் பாவனை, ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம்,சரீர உழைப்பின்மை மற்றும் அதிகரித்த மதுபாவனை என்பவையே இந்த நோய்க்கான தூண்டற் காரணிகளாக அமைகின்றன.

பொதுவான சுவாச நோய்களாவன:

- ✱மூக்கிலிருந்து நீர் வடிதல்
- ✱ தடிமன் அல்லது ஜலதோஷம்
- ✱ கக்குவான் இருமல்
- ✱மார்புச்சளி நோய்
- ✱சுவாசக்குழாய் அழற்சி
- ✱ஆஸ்துமா
- ✱ நியூமோனியாக் காய்ச்சல்
- ✱கசம்
- ✱ சன்னி
- ✱சுவாசப்பைப்புற்றுநோய்



பொதுவாகச் சுவாசநோய்கள் கீழ்வரும் காரணிகளால் ஏற்படுகின்றன

✱ஒவ்வாமை- மகரந்தமணி, தொழில் சார் உணர்திறன்கள், தூசித்தெள்ளு,சில மருந்துப்பொருள்கள்.

✱நுண்ணங்கித் தொற்று- பக்றீரியா (குக்கல், கசம், ஈர்ப்புவலி), வைரஸ் (தடிமன், சுவாசக் குழாய் அழற்சி)

✱புகைப்பிடித்தல் (சுவாசப் புற்றுநோய்)

✱மன அழுத்தத்தால் தூண்டப்படுதல் (ஆஸ்துமா)

✱சில நோய்கள் பரம்பரையாகக் கடத்தப்படக் கூடியவை (ஆஸ்துமா)

✱அன்னியப்பொருள்களை உள்ளெடுத்தல்

✱குளிர் காலநிலை

✱ஆரோக்கியமற்ற உடற் பயிற்சி

✱ ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம்

சுவாச நோய்களைத் தடுக்கவும் நோய்க்குரிய சமூகத்திலிருந்து எமக்குப் பரவாது தடுப்பதற்குமான வழிமுறைகளாவன..

✱இருமும் போதும் தும்மும் போதும் மூக்கு,வாய்ப்பகுதிகளைக் கைக்குட்டையினால் மூடிக்கொள்ள வேண்டும்.

✱கண்ட இடங்களில் துப்புவதைத் தடுத்தல் அல்லது தவிர்த்தல் வேண்டும்.

✱நோயாளிகளால் ஆரம்பத்திலேயே இனங்காணப்பட்டுச் சிகிச்சைபெற வேண்டும்.

✱சிகிச்சை பூரணப்படுத்தப்பட வேண்டும்

✱குடும்ப உறுப்பினர்களுக்கான மருத்துவப்பரிசோதனை. (அவசியமான நோய்களுக்கு அனைத்து குடும்ப உறுப்பினர்களும் பரிசோதனையைச் செய்து கொள்ளவேண்டும்). (கசம்)

✱புகைத்தல்,மதுப்பாவனை போன்றவற்றை இயன்றளவு தவிர்த்தல்

✱சமையலின் போது புகை வெளியேறுவதை இயன்றளவு தடுத்தல்

✱நல்ல காற்றோட்டமும் சூரிய ஒளியும் உள்ள இடங்களில் வாழ்தல்.

✱எமது போசாக்கு நிலையையும் நோய் எதிர்ப்புச்சக்தி நிலையையும் நன்கு பேணுதல் வேண்டும்

✱வக்சின்கள் மற்றும் தடுப்பூசிகள் உரிய நேரத்தில் போட்டுக் கொள்ளப்பட வேண்டும். (BCG குக்கல்)

✱நோயாக்கியின் வாழ்தகவு கூடிய காலநிலை மாற்றங்களின்போது காலநிலைக்கேற்றவாறு எம்மை இசைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

✱காசநோயாளிகளாயின் அவர்கள் உரிய சிகிச்சையை முழுமையாகப் பெறுவதுடன், நோயாளியின் சளி சேகரிக்கப்பட்டு புதைக்கப்பட அல்லது எரிக்கப்படவேண்டும்.

✱மனப்பயிற்சிகள், சுவாசப்பயிற்சிகள் என்பவற்றில் ஈடுபடுவதன் மூலம் மன அழுத்தத்தைக் குறைக்க முயலுதல் வேண்டும்.

✱சளி மற்றும் சுவாசச் சுரப்புகளுடன் கையாண்டு முடிந்த பின் கைகளைச் சவர்காரமிட்டுக் கழுவுதல்.

✱வாய்ச்சுகாதாரம் மற்றும் தோற் சுகாதாரத்தைப் பேணுதல் வேண்டும்.


சுவாச நோய்கள் பொதுவாகக் காற்றுவழியான பரவுகையைக் கொண்டிருப்பதேர்டு, அவை சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்கள் மூலம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படக்கூடியவை. எனவே சிறந்த சுகாதாரப்பழக்க வழக்கங்களை நடை முறைப்படுத்து வதன் மூலமும் நோய்களுக்கான உரிய சிகிச்சைகளை முழுமையாகப் பெறுதல் மூலமும் சுவாச நோய்களை இல்லாதொழிப்போம்.

செல்வி க.யாதவனி,
(மருத்துவபீட மாணவி)

# பாம்புக்கடிக்கான முதலுதவி

✱ ஒருவரைப் பாம்பு கடித்து விட்டால் கடிபட்டவரையும் உங்களையும் மேலதிக பாம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

✱கடித்த பாம்பினை நன்கு அடையாளம் காணமுயலுங்கள். இதனால் அது எவ்வகையான பாம்பு என அறிந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்க வைத்தியருக்கு உதவியாக இருக்கும். பாம்பை அடையாளங்காணுவதில் அதிக




நேரத்தை செலவழிப்பதையோ அல்லது அம்முயற்சியில் மீண்டும் கடி வாங்குவதையோ தவிர்கவும்.

✱தீண்டப்பட்டவரைக் குறைந்த அளவு அசைவுடன் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றவும். அத்துடன் இலக்கானவரை அமைதியாக வைத்திருக்கவும். (அதிக அளவு அசைவும் மன உளைச்சல், அதிர்ச்சி என்பன இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தும். இது பாம்பின் விசம் உடல் முழுவதும் பரவுவதற்கு ஏதுவாகிவிடும்.)

✱தீண்டப்பட்ட அவயம் இதய மட்டத்திற்குக் கீழே வைத்திருக்கக் கூடியவாறு பார்த்துக்கொள்ளவும். இது விசம் பரவுதலைத் தடுக்கும்.

✱தீண்டப்பட்ட அவயவத்திலிருக்கும் நகைகளையும் (உதாரணம். காப்பு, மோதிரம்) மிக இறுக்கமான ஆடைகளையும் அகற்றவும்.

✱தீண்டப்பட்ட பகுதி சவர்க்கார நீரினால் மெதுவாகக் கழுவப்பட வேண்டும். (தோல் மேற்பரப்பிலிருக்கும் விசத்தை நீக்குவதற்காக)

✱தீண்டப்பட்ட இடத்திற்கு இரண்டு அங்குலம் மேலே துணியால் அல்லது பட்டியால் இறுகக் கட்டவும். வீங்கியிருந்தால் வீக்கத்திற்கு இரண்டு அங்குலம் மேலே கட்டவும்.

✱கட்டப்படும் பட்டி குறைந்தது ஒரு அங்குலம் தடிப்பானதாகவும் கட்டு இறுக்கமானதாகவும் இரத்த ஓட்டத்தைத் தடுப்பதாகவும் இருக்க வேண்டும். கட்டப்பட்ட பட்டியை வீக்கத்திற்கு ஏற்ப தளர்த்தி விடவும்.

✱தீண்டிய பாம்பு நன்கு விசம் நிறைந்த பாம்பாயின் தீண்டப்பட்ட அவயவத்தைக் கட்டுத்துணியால் நன்கு சுற்றிக்கட்டவும். இதன்போது இதயத்திற்கு மிக அண்மையான இடத்தில் (Proximal) ஆரம்பித்து விரல்களை நோக்கிச்சுற்றவும்.

✱நோயாளிக்கு உண்பதற்கோ அல்லது குடிப்பதற்கோ எதனையும் வழங்கக் கூடாது. இருப்பினும் சில கொடிய விசம் நிறைந்த பாம்புக்கடியால் கடுமையாக வலி ஏற்படும் போது வலி நிவாரணியாக இரண்டு பரசிற்டமோல்களை மீகக் குறைந்தளவு நீருடன் கொடுக்கலாம்.



✱வேறு யாரையாவது உதவிக்கு அழைக்கக் கூடியதாக இருப்பின் அவரது உதவியைக் கண்டிப்பாகப் பெற்றுக் கொள்ளவும்.

✱முடிந்தளவில் மிக விரைவாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும்.

✱வழங்கப்பட்ட முதலுதவியை வைத்தியரிடம் விளக்கவும். மற்றும் பாம்பு தீண்டியபோது நடந்தவற்றைத் தெளிவாக விவரிக்கவும்.

**தவிர்க்கப்பட வேண்டியவை**

✱காயம்பட்ட இடத்தை வெட்டுதலோ உறிஞ்சுதலோ தவிர்க்கப்பட வேண்டும்.

✱கடித்த இடத்தைப் பனிக்கட்டியால் தடவுதல் தவிர்க்கப்படவேண்டும்.

✱இரசாயனப் பொருள்களைக் காயத்தில் தடவுதல் தவிர்க்கப்படல் வேண்டும். கொண்டிஸ் போன்றவை இழையத்தில் சேதத்தை ஏற்படுத்தும்.

✱ஆடைகளை அகற்றுதல் தவிர்க்கப்பட வேண்டும். (மிக இறுக்கமானவற்றைத் தவிர)

✱மதுபானம் வழங்க வேண்டாம். இது விச அகத்துறிஞ்சலை அதிகரிக்கும்.

1.பெரும்பான்மையான பாம்புகள் விசம் அற்றவை அல்லது விசத்தை உட்செலுத்த மாட்டாதவை. எனவே நோயாளிக்குப் பயம் ஏற்படுவதைத் தடுக்கவும்

2.பாம்பின் பல்லின் அடையாளம் விசம் உள்ளே சென்றதற்கான ஆதாரம் அல்ல.

3.பாம்பு இறந்திருந்தால் அதனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும். இறந்தபாம்பு ஒரு மணிநேரம் வரை தெறிவில் செயற்பாட்டால் தீண்ட முடியும் என்பதால் மிகக் கவன்மாக இருக்கவும்.


கி.நிஷா
மருத்துவபீட மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையல் கண்காட்சி

பச்சிளைப்பள்ளி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் பச்சிளைப்பள்ளி உதயம் தையல் பயிற்சி நிலையத்தினரால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நிறைவு விழாவும் கண்காட்சியும்நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பச்சிலைப் பள்ளி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகபளைஉதவி அரச அதிபர் ரி.முகுந்தன் கலந்துகொள்வர். (204-207)




VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

**எமது சேவை முற்றிலும் இலவசம்**

**O/L உடன் குறைந்த கட்டணத்தில்!**

**NO NEED IELTS**

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தாதேவி சத்தியஜெயன்

[பொது முகாமைத்துவ உதவியாளர், தரம் I, நீதிக்கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்]



பண்டத்தரிப்பு, செட்டி குறிச்சியைப் பிறப்பிடமாகவும், செம்பியன் ஒழுங்கை கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வசந்தாதேவி சத்தியஜெயன் நேற்று (08.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு குலசேகரம் மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கமலராஜன்-கணேஸ்வரி தம்பதியரின் மருமகளும் சத்தியஜெயனின் அன்பு மனைவியும் கமலாசனி, கமலநாதன், இரங்கநாதன் (மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), உமாதேவி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் சி.சிவானந்தராஜா, இ.கலாவதி, இ.சண்முகதேவி, வரதராஜன் (லண்டன்), க.மனோரஞ்சன் (லண்டன்), ஸ்ரீகல்யாணி, கோபாலகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் காயத்திரியின் அத்தையும் எழில், பூரணி ஆகியோரின் பெரியம்மாவும் அருணின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சத்தியஜெயன் (கணவர்)
(களஞ்சியப் பொறுப்பாளர்,
கொலனியோ மோட்டர்ஸ், கொழும்பு).

இல.56, செம்பியன்ஒழுங்கை,
கொக்குவில்.
தொ.பே: 0212229990

## யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்-2011 வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம் : 16.01.2011 (ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி)
இடம் : சிவசம்பு மண்டபம் (யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)
தலைவர் : திரு.வே.சிவசுந்தரம் (அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

**★புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறும்.**

எமது பாடசாலையின் பழைய மாணவர் அனைவரையும் தவறாது குறித்த நேரத்திதுக்குக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வே.சிவசுந்தரம்,
தலைவர்.

அ.மயூரன்,
செயலாளர்.

## கையடக்க தொலைபேசி திருத்துநர் (Mobile Phone Technician)

தலை சிறந்த கையடக்கத் தொலைபேசி நிறுவனத்துடன் நீங்களும் ஒருவராக இணைந்திட இது ஒரு சிறந்த வாய்ப்பு. கையடக்கத் தொலைபேசி திருத்துதல் கல்விச் சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது இத்துறையில் இரண்டு வருட அனுபவம் மிக்கவராக இருத்தல் வேண்டும்.

தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை குறிப்பிட்ட 7 தினங்களுக்குள் எமக்கு கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அனுப்பி வைக்கவும்.

BRANTEL LANKA (PVT) LTD.
06, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு-04
info@brantel.lk

**மேலதிக தொடர்புகளுக்கு:**
10.01.2011 திங்கட்கிழமை முற்பகல் 11 மணி-பிற்பகல் 3 மணிவரை
MR.V.J.MOHAN
*RAAM SUPERCITY*
*306,Hospital Road, Jaffna.*

## SPONSORSHIP ONLY - 50, 000/=

UK,USA,CANADA,AUSTRALIA மற்றும் EUROPE போன்ற நாடுகளுக்குஉங்களின் தேவைக்கேற்ற முறையில்தேவையான தொகையை மத்திய வங்கி மூலமாக பதிவு செய்யப்பட்ட வங்கிகளில்நேரடியாகவும் ஒரே தினத்திலும்செய்து கொள்ளலாம்.

HOLIDAY VISA CENTER
07,W.A.SILVA MAWATTA, COLOMBO-06
HOTLINE - 0771250789/0772955977

## காணி விற்பனைக்கு

அளவெட்டி மலவேம்படிச் சந்தைக்கு முன்னாலுள்ள சிறு ஒழுங்கையில் 5½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
0754636860

## வீடு வளவு விற்பனைக்கு

அளவெட்டி அலுக்கைச் சந்தியில் இருந்து அம்பனை வீதியில் 5¼ பரப்புக் காணி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
0754636860

## தேங்காய் விற்பனை

ஊர்த் தேங்காய் விற்பனைக்குண்டு. (25/= - 30/= வரை) மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு:- மல்ரி பாம் சென்ரர், 61,இராமநாதன் வீதி, கலட்டி.

## கண்ணீர் அஞ்சலி

### திரு. நடராஜா சிவராஜா
அளவெட்டி

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், ஆரம்ப பிரிவு அதிபரும் தற்போது கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி தவபவானி சிவராஜா அவர்களின் அன்புக் கணவர் **திரு. நடராஜா சிவராஜா** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிராத்திக்கின்றோம்.

- அதிபர், ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள்
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு.

## வெற்றிடங்கள்

### வேலைத் தள பொறியியலாளர்கள் (SITE ENGINEERS)

சிவில் பொறியியலாளர்கள் பொறியியற்துறையில் B.Sc அல்லது NDT/ HNDE / NDES / NCT கழகத்தகைமை மற்றும் கட்டுமானத்தொழில் / வீதி மற்றும் நீர் குழாய் பொறுத்தும் தொழிலில் 5 வருட தொழில் அனுபவம்.

### வேலை கண்காணிப்பாளர்கள் (FORMAN) 5 வருட அனுபவம்

Form work - 02 Nos.
Reinforcement - 02 Nos.
Concreting - 02 Nos.
Large Dia Meter Pipe Laying Works - 02 Nos.

### மேற்பார்வையாளர்கள் (WORK SUPERVISORS)

கட்டுமானத்துறையில் 5 வருடஅனுபவம் /வீதிமற்றும் நீர்குழாய் அமைப்பதில் அனுபவம். ஆங்கிலம் /தமிழ் தேர்ச்சி மேலதிக தகைமை.

**சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.**

உங்களது பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்பத்தோடு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் உறவினரல்லாத நடுவர்கள் இருவரது பெயர்களை குறிப்பிட்டு இவ் விளம்பரம் செய்து 7நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

ISURU ENGINEERING (PTE) LTD.
No. 983, Pannipitiya Road Battaramulla
[illegible] 0112787747,
E-mail: [illegible]

FLEX Graphic

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

JAN 2011 TO JUN 2011

20

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள, முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.alimas.com, www.imat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679880, 071 803 4848

விண்ணப்ப முடிவு திகதி : 28.01.2011




## QUALITY CONTROLLERS (MALE/FEMALE)

- Age below 27 Yrs
- Should passed GCE A/L in science or Mathematics scheme
- Should have a sound knowledge in chemicals and related products
- 2-3 Yrs. experience in similar capacity in reputed company would be an added advantage
- Preference will be given to those who have qualified in Institute of Chemistry Ceylon.
- Fluent in English Language and should have excellent interpersonal Skills
- Be able to work in computerized environment **(MS word, Ms Excel, Power point, Internet, Email)**

## CLERKS

- Age below 26 Yrs and should have excellent interpersonal skills.
- Preference will be given to candidates with 2 years experience in Customer Service.
- fluent in English Language
- Ability to communicate in Tamil Language would be an advantage.
- Be able to work in computerized environment
- Good typing Knowledge is must.

## TECHNICAL ASSISTANTS (All ISLAND)

- Should have a Sound knowledge in spray paints and related products
- Minimum 3 Years experience in painting vehicles
- Age below 30 Yrs
- Preference will be given to those who are capable in using **Debeer / 2K paints**
- Communicate in Tamil language would be an advantage
- Should have a valid Driving Licence
- Willing to work in any part of the Island

Apply with complete CV and ***indicating the post*** on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.

**Company Transport will be provided from Colombo to Panadura**

C.P.T. General Manager,
CAUSEWAY PAINTS Lanka (Pvt) Ltd.
15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate, Panadura.

Sunny Auto HI-BUILD LACQUER | LUXURY EMULSION PAINT | Colour box | KENLUX | DEBEER CAR-REFINISHES OVER 50,000 COLOURS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவை வெற்றி கொள்வோம்

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவு நடத்தும் நீரிழிவை வெற்றி கொள்வோம் என்ற சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நேற்றுச் சனிக்



கிழமை ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பௌதிகவியற் றுறை முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் இ.குமார வடிவேல் பாரியார் சகிதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்த ஆரம்ப நிகழ்வில் நீரிழிவு வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிவன்சுதன் உள்ளிட்ட வைத்தியர்கள்,யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி ப்வானி பசுபதிராஜா,யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் விஸ்வநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் இடம்பெறவுள்ள இந்த விழிப்புணர்வுக் கண்காட்சியில் நேற்றையதினம் பாடசாலை,பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள், நீரிழிவு நோயாளர்கள் என வயது வேறு பாடின்றி அதிக எண்ணிக்கையானோர் பார்வையிட்டுச் சென்றனர்.

**வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன்**

*யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவு*



நீரிழிவு நோயாளர் தொடர்ச்சியாகச் சுகதேகியாக வாழ்வதற்கு சிறந்த உணவுப்பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். ஆராய்ச்சி முறையில் தெரிவு செய்யப்பட்ட உணவுகள் நீரிழிவுக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் உடல் நிறை அதிகரிப்பு,குருதி அமுக்கம் இவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட குழுநிலை ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு பிரிவுகள் மூலமும் நோயைத் தடுக்கும் வழிமுறைகள்,உணவுப்பழக்க வழக்கங்கள், உடற்பயிற்சிமுறைகள் நீரிழிவு நோயாளரின் உளத்தாக்கப் பரிசோதனை முறைகள், மேலதிக பிரச்சினைகள் வராமல் தடுக்கும் வழிமுறைகள், சிறுபிள்ளைகள், பெண்கள் சுகதேகியாகக் கர்ப்பகாலம் தொடக்கம் வாழ்வது எவ்வாறு போன்ற ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

குறைந்த செலவில் குருதிப்பரிசோதனை, கொலஸ்ரோல் அளவு,மாரடைப்புவீதம் போன்றவற்றையும் பரிசோதிக்க முடியும்.

அத்துடன் இலவசமாகக் கண்பரிசோதனையும் வழங்கப்படுகின்றன.

நீரிழிவு நோய் தவிர்ந்த ஏனையோருக்கும் இக் கண்காட்சி பயனுள்ளதாக அமையும்.

கண்காட்சியைப் பார்த்து வெளியேறும் நபர்



பூரண விளக்கம் பெற்றுள்ளாரா? என்பதைச் சோதிக்கும் வகையிலான போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

நீரிழிவு தொடர்பான பூரண அறிவை அவர்கள் பெற்றிருப்பின் சான்றிதழ் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நூல்கள், சிடிக்கள் போன்றனவும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

தொகுப்பு:
**சக்தி, நிஸா**



**திருமதி கனகேஸ்வரன்,**

*ஆவரங்கால் ஆயுள்வேத வைத்தியசாலை*



அனைவரும் விளங்கக் கூடிய முறையில் செய்முறை,மற்றும் படவிளக்கங்களாலும் நீரிழிவு பற்றிய தகவல்களையும் அதனைத் தடுக்கும் வழிமுறைகளையும் வழங்கினார்கள். முக்கியமாக நீரிழிவுத்தாக்கம் வயதானோருக்கு இருப்பதால் அவர்களுக்கு பயனுள்ள முறையில் இக்கண்காட்சி அமைந்துள்ளது.

குறைந்த செலவில் சிகிச்சை முறைகள் வழங்கப்படுகின்றன. முற்கூட்டியே நோய்த்தாக்கத்தை அறியக் கூடிய சிகிச்சை முறைகள் வழங்கப்படுவதாலும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

**திருமதி தனலட்சுமி,** இருபாலை.



நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தமக்குத் தெரியாத பல விடயங்களை அறிந்துகொள்ள முடியும். நான் வீட்டில் 'குளுக்கோ மீற்றர்' பாவிப்பதால் அதுபற்றி பூரணமாக விளக்கத்தைப் பெற்றேன்.

நீரிழிவு நோயாளருக்கான உணவுப் பழக்க முறைகள், தேவையான உடற்பயிற்சிகள், பாவிக்க வேண்டிய மருந்துகள் போன்ற விளக்கங்களையும் கொடுத்தார்கள்.

நீரிழிவு நோயுள்ள ஒருவரைவிட அனைவருக்கும் பயனுள்ளதாக இக்கண்காட்சி அமைந்துள்ளது.



ஊடக அனுசரணை:
உதயன்

## சுகவாழ்வுக்கானமாபெரும் கண்காட்சியும் விழிப்புணர்வு வார நிகழ்வுகளும்

நீரிழிவுச் சிகிச்சை நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலை

இடம் : நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
காலம் : 08.01.2011 முதல் 12.01.2011 வரை
காலை : 8.30 மணி - மாலை 7.30 மணிவரை

**உள்ளடக்கம்**

★ நீரிழிவு நோய் வருமுன் காப்பது எப்படி?
★ நீரிழிவு வந்தபின் வாழ்வது எப்படி?
★ கர்ப்ப காலத்திலிருந்தே குழந்தைகளைக் காப்பது எவ்வாறு?
★ நீரிழிவு நோயின் உளத்தாக்கங்களும் பரிசோதனைகளும் சிகிச்சை முறைகளும்
★ நீரிழிவின் பாதிப்புகள்

★ குறைந்த செலவில் இரத்த, சலப் பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படும்.
★ இலவச கண் பரிசோதனை
★ குளுக்கோஸ் மற்றும் இரத்த அழுத்தத்தை அளவிடும் மீற்றர் குறைந்த விலையில் வாங்கலாம்.
★ நீரிழிவு, உயர் குருதியமுக்கம், நுளம்புடன் ஒரு குருசேத்திரம், நீரிழிவை வெற்றிகொள்வோம், 2010 கண்காட்சி பற்றிய CD கள் விற்பனைக்குண்டு.
★ 'ஆரோக்கிய உணவு செய்வோம்' புத்தக வெளியீடு
★ உங்களுக்கு இனிவரும் காலங்களில் நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு உண்டா என்பதும் அதற்கான தடுப்பு முறைகளும் கூறப்படும்.
★ தனிப்பட்ட மற்றும் குழுநிலை ஆலோசனைகள் வழங்கப்படும்.
★ நீரிழிவுச் சிகிச்சை நிலைய ஆய்வுகளின் முடிவுகள் வெளியிடல்.
★ கலை நிகழ்ச்சிகள், இன்னும் பல.........

நீரிழிவு மற்றும் கொலஸ்ரோல் பரிசோதனைகளை மேற்கொள்ள விரும்புவோர் 12 மணித்தியாலங்கள் உணவு அருந்தாத நிலையில் வருகைதர வேண்டும்.

## நிகழ்ச்சி நிரல்

### விசேட நிகழ்வுகள்

இன்று (09.01.2011) பிற்பகல் 3.30 மணி
சிறப்பு விருந்தினர்: பேராசிரியர் S. சிவலிங்கராஜா
தமிழ்த்துறைப் பேராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்.

★ தமிழ்த்தாய் வாழ்த்து
★ வரவேற்புரை
★ புத்தக வெளியீடு

**'ஆரோக்கிய உணவு செய்வோம்'**

ஆய்வுரை: பேராசிரியர் S. சிவலிங்கராஜா
முதற்பிரதி பெறுநர்: திரு. T. அருணகிரிநாதன்
(ஆங்கில விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
பரிசில் வழங்கல்: திருமதி S. சிவலிங்கராஜா.

★ அபிநயப்பாடல்
★ நடனம் -வாழ்வக மாணவர்கள்
★ பாட்டு- வாழ்வக மாணவர்கள்
★ பாட்டு- செல்வி A.ஆதித்யா
★ நன்றியுரை

நாளை (10.01.2011) பிற்பகல் 4.00 மணி
★ வரவேற்புரை
★ நீரிழிவு சிகிச்சை நிலைய வளர்ச்சியும் சிகிச்சையும்
வைத்திய கலாநிதி R.பரமேஸ்வரன்
★ 'பழங்களும் நீரிழிவும்' - நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள்.
வைத்திய கலாநிதி திருமதி P.செல்வகரன்
★ [illegible]
★ நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். வீரர்கள் என்ன விலை?

ஐ.பி.எல். தொடர் அணியில் இடம்பெறும் கிரிக்கெட் வீரர்கள் நேற்று பல கோடி ரூபாவுக்கு ஏலம் போனார்கள். இந்திய வீரர் கவுதம் காம்பீரை கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் அணி 33. 12 கோடி ரூபா விலைக்கு வாங்கியது. இந்திய வீரர்கள் 48 பேர் பங்கேற்கின்றனர். கடந்த 3 தொடர்களில் பங்கேற்ற வீரர்களில் ஒப்பந்தம் முடிந்ததால், நடக்கவிருக்கும் தொடருக்கான புதிய ஏலம் நேற்றும்,இன்றும் பெங்களூரில் நடக்கிறது.

புதிய அணிகளான கொச்சி, புனே அணிக்கு தேவையான அனைத்து வீரர்களையும் ஏலத்தில் எடுக்கிறது. ஒவ்வொரு அணியும், எந்தெந்த வீரர்களை ஏலத்தில் எடுக்க உள்ளனர் என்பது குறித்து அதிக பரபரப்பு ஏற்பட்டுள்ளது.மொத்தம் 350 வீரர்கள் உள்ள இந்த ஏலத்தில், ரூ. 1200 கோடிக்கும் மேலாக செலவிடப்படுகிறது.


நேற்று நடந்த ஏலத்தில் வீரர்கள் எந்த விலைக்கு போனார்கள் என்ற முழு விவரம் வருமாறு:

இலங்கை அணி வீரர் டில்சான் ரூ. 8.7 கோடி ( ரோயல் சலஞ்ச்- பெங்களூர்) ஜாகீர்கான் ரூ. 12.3 கோடி (ராஜஸ்தான் ரோயல் சலஞ்ச்சர்) , நியூஸிலாந்து வீரர் ரோஸ்டைலர் - 13.8 கோடி ( ராஜஸ்தான் ரோயல் சலஞ்ச்சர்) , யூசுப் பதான் - ரூ.,28.98 கோடி, (கொல்கொத்தா நைட் ரைடர்ஸ்) , இங்கிலாந்து வீரர் பீற்றர்சன் - ரூ. 2. 9 கோடி ( டெக்கான் சார்ஜர்) , இலங்கை வீரர் மஹேல ஜெயவர்த்தன -

ரூ. 20.7 கோடி (கொச்சி அணி), யுவராஜ்சிங்- ரூ. 24.84 கோடி ( சகாரா புனே வாரியார் அணி )

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் கடந்த 3 ஆண்டுகளாக ருவென்ரி-20 தொடர் நடந்தது. நான்காவது தொடர் வரும் ஏப்ரல் 8 இல் தொடங்குகிறது. இதில் சென்னை, மும்பை, டில்லி போன்ற 8 அணிகளுடன் சேர்த்து, புதியதாக புனே கொச்சி என மொத்தம் 10 அணிகள் இம்முறை பங்கேற்கின்றன.

சென்னை சுப்பர் கிங்ஸ் (டோனி, ரெய்னா, முரளி விஜய், ஆல்பி மார்கல்), மும்பை இந்தியன்ஸ் (சச்சின், ஹர்பஜன், போலார்டு, மலிங்க) அணிகள் தங்களது 4 வீரர்களைத் தக்கவைத்துக் கொண்டன. ராஜஸ்தானின் வோர்ன், வாட்சன், பெங்களூரின் விராத் கோஹ்லி மற்றும் டில்லியின் சேவக் ஆகியோரை அந்தந்த அணிகள் தக்க வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. நேற்றைய ஏலத்தில் ஒவ்வொரு அணியும் ரூ.20 கோடி முதல் ரூ. 45 கோடி வரை செலவிட்டன.



கொல்கொத்தா, டெக்கான், பஞ்சாப் அணிகள் அனைத்து வீரர் களையும் விடுவித்துள்ளதால், இந்த அணியின் உரிமையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் பயன் படுத்தலாம். 4 வீரர்களை தக்கவைத்துள்ள மும்பை, சென்னை அணிகள் ரூ. 60 கோடியை மட்டும் பயன்படுத்தலாம் (த)

## சச்சின், கலிஸ் முதலிடம்



ஐ.சி.சி.டெஸ்ட் துடுப்பாட்டத் தர வரிசைப் பட்டியலில், இந்தியாவின் சச்சின், தென்னாபிரிக்காவின் கலிஸ் முதலிடத்தை பகிர்ந்து கொண்டனர்.

டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டுபாயில் நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில் துடுப்பாட்டத் தரவரிசைப் பட்டியலில் சச்சின், கலிஸ் தலா 883 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டனர். சமீபத்திய டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப், படுத்தியதே இதற்குக் காரணம். இதன்மூலம் சச்சின், 10ஆவது முறையாக முதல் அந்தஸ்தைப் பெறுகிறார். முதன்முதலில் கடந்த 1994இல் மேற் கிந் தியத் தீவுகளுக்கு எதிராக மும்பையில் நடந்த டெஸ்டின் போது, அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சச்சின், முதலிடம் பிடித்தார். தென்னாபிரிக்க தொடரில் சோபிக்கத் தவறிய சேவக், 4ஆவது இடத்தில் இருந்து 6ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். லட்சுமண் 9ஆவது இடத் தில் நீடிக்கிறார். காம்பிர், 15ஆவது இடத்திற்கு முன்னேறினார்.பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில், இந்திய சுழற் பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் 8ஆவது இடத்தில் உள்ளார். தென்னா பிரிக்கா வின் ஸ்டைன்முதலிடத்தில் நீடிக்கிறார். (த)

## அரையிறுதியில் பயஸ் பூபதி ஜோடி

சென்னை ஓபன் ரெனிஸ் தொடரின் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி முன்னேறியது.

சென்னை ஓபன் ரெனிஸ் தொடர், நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. மைதானத்தில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி, ஜேர்மனியின் பிலிப் மார்க்ஸ், இங்கிலாந்தின் கென் ஸ்குப்ஸ்கி ஜோடியை சந்தித்தது.

விறுவிறுப்பான காலிறுதியின் முதல் செட்டை பயஸ்-பூபதி ஜோடி 6-4 என கைப்பற்றியது. தொடர்ந்து அசத்திய இந்திய ஜோடி, ''டை-பிரேக்கர்' வரை நீடித்த 2ஆவது செட்டை 7-6 என தன்வசப்படுத்தியது. இறுதியில் பயஸ்-பூபதி ஜோடி 6-4, 7-6 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறியது. அரையிறுதியில் இந்திய ஜோடி, குரோஷியாவின் மரின் சிலிக், இவான் டோடிக் ஜோடியை எதிர்கொள்கிறது. (த)

## திருமண பந்தத்தில் அஜந்த மெண்டிஸ்



இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸிற்கு நேற்று முன்தினம் திருமணம் நடைபெற்றது. இதன் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இவருடைய திருமண வைபவத்தின் போது கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இராணுவ அதிகாரி ஜெகத் ஜயசூரிய, பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

25 வயதுடைய அஜந்த மெண்டிஸ் 44 ஒருநாள் போட்டிகளில் விளையாடி துடுப்பாட்டத்தில் 91 ஓட்டங்களை பெற்றுள்ளதோடு, பந்து வீச்சில் 78 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார். (த)

## பிபா நிறைவேற்றுக் குழுவில் மணிலால் பெர்னாண்டோ

சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனத்தின் (பிபா -) நிறைவேற்றுக் குழுவுக்கு இலங்கையரான மணிலால் பெர்ஞண்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய கால்பந்தாட்டக் கூட்டுச் சம்மேளனத்தின் சார்பில் இருவரை சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. 4 பேர் இப்பதவிக்குப் போட்டியிட்டனர்.

45 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதில் வோராவி மகுடி 24 வாக்குகளையும் மணிலால் பெர்னாண்டோ 23 வாக்குகளையும் பெற்றுத் தெரிவாகினர்.



ஜப்பானைச் சேர்ந்த காஸோ தாசிமாவும் சீனாவைச் சேர்ந்த ஸாங் ஜிலோங்கும் இப்பதவிகளுக்குப் போட்டியிட்ட போதிலும் வெற்றி பெறத் தவறினர்.

இலங்கையைச் சேர்ந்த ஒருவர் 'பிபா' நிறைவேற்றுக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

ஆசியாவின் கால்பந்தாட்ட வளர்ச்சிக்காக தான் பாடுபடப்போவதாக மணிலால் பெர்னாண்டோ இத் தெரிவின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் உறுதியளித்துள்ளார். ஆசிய கால்பந்தாட்டத்திற்கான தருணம் வந்துவிட்டது எனக் கூறிய அவர் தன்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். (த)




## டெஸ்ட் தரவரிசையில் விரைவில் இங்கிலாந்து முதலிடம் பிடிக்கும்

டெஸ்ட் தரவரிசையில் இங்கிலாந்து விரைவில் முதலிடத்தைப் பிடிக்குமென தென்னாபரிக்க முன்னாள் அணித்தலைவர் ஷான் பொலக் கூறியுள்ளார்.


டெஸ்ட் தரவரிசையில் இப்போது இந்தியா முதலிடத்தில் உள்ளது குறிப்படத்தக்கது.

பிரிட்டனில் இருந்து வெளியாகும் டெய்லி மிரர் பத்திரிகையில் இது குறித்து பொலக் எழுதியிருப்பதாவது:

இப்போது டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இந்தியா உள்ளது. ஆனால் அந்த இடத்தை நோக்கி இங்கிலாந்து வேகமாக முன்னேறி வருகிறது. விரைவில் முதலிடம் படிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆஸ்திரேலிய மண்ணில் அந்த அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து வீரர்களின் ஆட்டம் அபாரமாக உள்ளது. அணியின் அனைத்து வீரர்களும் தங்களது பங்களிப்பை சிறப்பாக செலுத்தி வருகின்றனர். ஆஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை இதுபோன்ற ஒரு நெருக்கடியான நிலையை முன்பு சந்தித்தது இல்லை என்றே நான் நினைக்கிறேன். ஆஷஸ் தொடர் முழுவதுமே இங்கிலாந்தின் ஆதிக்கம்தான் நீடிக்கிறது என்று பொலக் அப்பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் இப்போது 129 புள்ளிகளுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. 116 புள்ளிகளுடன் தென்னாப்பிரிக்கா 2-வது இடத்திலும், 112 புள்ளிகளுடன் இங்கிலாந்தும், 110 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியாவும் முறையே மூன்றாவது, நான்காவது இடத்தில் உள்ளன. ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் ஆஸ்திரேலியா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்தில் கண் வைத்துள்ள பங்களாதேஷ்

'தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா....' என்ற பாடல் வரிகள் பங்களாதேஷ் அணி வீரர்களின் காதுகளிலும் கேட்டிருக்க வேண்டும். ஏனெனில் அந்த அணி டெஸ்ட் அந்தஸ்துள்ள அணியாக இருந்த போதும் பல அணிகளிடம் அடி வாங்கித் துவண்டு போயிருந்தது.

பங்களாதேஷ் அணியுடனான சுற்றுப்போட்டியில் விளையாடும் பல முன்னணி நாடுகள் தமது முன்னணி வீரர்களை விடுத்தே விளையாடும். அந்தளவுக்குப் பங்களாதேஷ் அணியின் திறமை இருந்தது. அவ்வாறு முன்னணி அணிகளால் மிகக் கீழ்தரமாகப் பார்க்கப்பட்ட பங்களாதேஷ் அணிதான் இன்று எழுச்சியின் உச்சத்தில் நின்று கொண்டு ஏனைய அணிகளுக்கு ஆப்புவைக்கக் காத்திருக்கின்றது.

திறமையான வீரர்கள் மற்றும் ஆக்ரோஷமான வீரர்கள் ஆகியோரையும் பங்களாதேஷ் ஒருங்கே கொண்டிருந்தாலும் அவர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்படவில்லை.

பங்களாதேஷ் அணியை எழுச்சி பெறவைப்பதற்கு அந்த அணி வீரர்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட திறமையை வெளிக்கொணருவதே வழியெனத் தெரிந்துகொண்டு அதன்படி முதலில் வழிநடத்தியவர் டேவிட்வட்மோர்.

இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு காரணமாக அமைந்த வட்மோர் 2003 ஆம் ஆண்டு இலங்கை அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராக இணைந்து கொண்டார்.

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் எல்லா அணிகளிடமும் வாங்கிக்கட்டிபின் தங்கிய நிலையில் இருந்த பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளர் என்கின்ற பெரும் பொறுப்பை எடுத்த வட்மோர் அந்த அணியின் பலம், பலவீனம் என்பவற்றை ஆராய்ந்து உரிய முறையில் வளர்த்தெடுத்தார்.

அந்த வளர்தெடுப்பின் பிரதிபலன் 2004 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இடம்பெற்ற முக்கோணக் கிரிக்கெட் தொடரில் வெளிப்பட்டது. உலகச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியை இங்கிலாந்து மண்ணில் தோற்கடித்து அதிர்ச்சி வைத்தியத்தை கொடுத்தது பங்களாதேஷ்.



தரவரிசையில் கடைசி இடத்திலிருந்த பங்களாதேஷ் உலகச் சம்பியனான அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்து முழு உலகின் கிரிக்கெட் ரசிகர்களையும் தம் மீதான பார்வைக்குத்திருப்பியது.

வட்மோரின் பயிற்சி, பங்களாதேஷ் இளம் வீரர்களின் ஆக்ரோஷமான வலிமை இவையிரண்டும் பங்களாதேஷின் எழுச்சியின் ஆரம்பப் படிகளாயின.

இருப்பினும் பங்களாதேஷ் அணியினால் தொடர்ச்சியாக வெற்றிகளை பெறமுடியவில்லை. ஆயினும் தோல்விகளினைக் கண்டு அந்த அணி துவண்டு போகவில்லை. 2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்னதாகப் பங்களாதேஷின் அப்போதைய அணித்தலைவராக இருந்த ஹபிபுல் பசார் "இலங்கை அல்லது இந்தியா இரண்டில் ஒன்றை விழ்த்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறுவோம்'' என எச்சரிக்கை மணி அடித்திருந்தார்.

அந்த எச்சரிக்கையை கவனத்திற் கொள்ளாமல் களமிறங்கிய இந்திய அணி பங்களாதேஷிடம் அடிவாங்கித் தனது வாலைச் சுருட்டிக்கொண்டது. உலகின் முன்னணி வீரர்கள் பலரை (சச்சின், டோனி, சேலாக், யுலாராஜ், ஹர்பஜன், டிராவிட்) கொண்டிருந்தாலும் இந்தியா இளம் பங்களாதேஷின் மிரட்டலுக்கு அடி பணிந்தது.

வாழ்க்கையில் மேடு, பள்ளம் வருவதுபோல, பங்களாதேஷ் அணியும் வெற்றியையும் தோல்வியையும் மாறி மாறி சந்தித்தது. ஒரு கட்டத்தில் உலகின் ஜாம்பவான்கள் யாரோ அவர்களை எல்லாம் வென்று சாதனை படைக்கும் பங்களாதேஷ் பின்னர் அடுத்த போட்டிகளில் தோல்வியடைந்து விடும்.

2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் முடிவடைந்தது முதல் 2009 ஆம் ஆண்டு இறுதிப் பகுதிவரை ஏனைய அணிகளிடம் அடிவாங்கும் அணியாகவே பங்களாதேஷ் இருந்து வந்தது.

இருப்பினும் தற்போது பயிற்சியாளர் ஜேமிசிடன்ஸ் மற்றும் களத்தடுப்புப் பயிற்சியாளர் ஜலியன் ஆகியோரது சிறந்த வழிகாட்டல்களினால் அது புது மெருகூட்டப்பட்ட அணியாக மிளிர்கிறது.

1994/1995 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் எவ்வாறு இலங்கை அணி அர்ஜுன ரணதுங்க தலைமையில் மிகச் சிறப்பானதாக அமைந்தது. அர்ஜுன ரணதுங்க, ஜெய சூரியா, களுவிதாரண, அரவிந்த டீ சில்வா, அவிஸ்க குணவர்தன, முத்தையா முரளிதரன் என மிகச் சிறந்த கூட்டணி அமையப்பெற்று 1994/1995 ஆம் ஆண்டு காலங்களில் மெல்ல மெல்ல எழுச்சிபெற்றுச் சொந்த மண்ணில் உலகக் கிண்ணம் இடம் பெற்ற போது இலங்கை அதனை எவ்வாறு கைப்பற்றியதோ அதே போன்றதொரு நிலைமை இந்தமுறை உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்களா தேஷுக்கு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் சகிப் அல்ஹசன் தலைமையிலான பங்களாதேஷின் கூட்டணியும் அதன் எழுச்சியும் அவ்வாறே அமைந்துள்ளன. அதிரடியான ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான இம்ரூகைல்ஸ் - சால்பியா நவீஸ் ஆகியோரின் துணிச்சலான துடுப்பாட்டம் அணிக்கு ஆரம்பத்திலேயே நல்ல ஓட்ட எண்ணிக்கையையும் ஓட்ட விகிதத்தையும் பெற்றுக் கொடுக்கிறது.

சிட்டிக் - ரகிபுல் ஹஉசைன் ஆகியோரின் நிதமான ஆட்டமும், பந்துகளை பதம் பார்த்து எல்லைக்கோட்டுக்கு அனுப்பும் திறமையும் அணிக்குப் பலமான அஸ்திவாரமே.

மத்திய வரிசையில் களமிறங்கும் சகலதுறை ஆட்டக்காரரும் அணியின் தலைவருமான சகிப் அல்ஹசன் தனது அணியின் நிலையறிந்து ஓட்ட விகிதத் தேவைக்கேற்ப அதிரடியாகவும் இலக்குகள் வேகமாக் சரிக்கப்படும் நிலையில் அணி தத்தளித்துக் கொண்டிருந்தால் நிதானமாகவும் ஆடக்கூடியவர்.

துடுப்பாட்டத்தில் ஓட்டங்களைக் எடுப்பதிலும் பந்து வீச்சில் எதிரணியின் இலக்குகளைக் கொய்வதிலும் களத்தடுப்பில் பிடிகள் எடுப்பதிலும் இவரது திறமைகள் அபாரம். அணியை வழி நடத்துவதோடு மட்டுமன்றி ஏனைய வீரர்களின் திறமைகளுக்கு முன்னுரிமை அளிப்பது சபாஷ்.

மத்திய வரிசையில் களமிறங்கும் விக்கெட் காப்பாளரான ரகீம் பங்களாதேஷ் அணியின் செல்லப் பிள்ளையாகவும் சுட்டிப் பிள்ளையாகவும் வலம் வருகின்றார். குள்ளமான உயரமுடைய இவர் களத்தில் விக்கெட் கீப்பிங்கில் ஈடுபடும் போது அணியின் ஏனைய வீரர்களை உற்சாகப்படுத்துவது தனிரகம்.

பந்துவீச்சில் கலக்கும் ரூபைல் குசைன், அப்துல் ரசாக், நமீம் இஸ்லாம் ஆகியோரின் பங்களிப்புகளும் தாராளம். எதிரணியின் ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது முதல் இலக்குகள் எடுப்பது வரை கூட்டணி பலமானதே.

களத்தடுப்பிலும் பங்களாதேஷ் அணி பலமாகவே காணப்படுகின்றது. நியூஸிலாந்துடன் சொந்த மண்ணில் இடம் பெற்ற போட்டியின் போது அப் துல் ரஷாக், சுயோ ஆகியோரின் பிடியெடுப்புக்கள் அபாரம். எல்லைக் கோடு வரை பந்தை விரட்டிச் சென்று எல்லையைத் தொடவிடாது மறித்து விக்கெட்டினை நோக்கி எறிந்து ரன் அவுட் ஆக்குவது களத்தடுப்பின் பலம்தான்.

2009 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்ற பங்களாதேஷ் அணி மேற்கிந்திய தீவுகளின் இரண்டாம் நிலை அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி முதன் முறையாக ஒரு டெஸ்ட் தொடரை வென்றது.

இதன் பின்னர் சகிப் அல் ஹசன் தலைமையிலான கூட்டணி ஏனைய அணிகளுக்கு மெல்ல மெல்ல சவால் விடுத்தது.

இங்கிலாந்துடனான போட்டியில் 2-1 என்ற கணக்கிலும், நியூசிலாந்து மண்ணில் இடம் பெற்ற போட்டியில் 3-0 என்ற கணக்கிலும் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்தது. அதன் பின்னர் இலங்கை இந்திய அணிகளுடனான முத்தரப்பு ஒரு நாள் போட்டியிலும் தோல்வியடைந்தது.

அதன் பின்னர் பங்களாதேஷ் அணி மிகக்கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தது. பயிற்சியாளர் சிடன்ஸின் வழிகாட்டலின் கீழ் காலை முதல் மாலை வரை வலைப் பயிற்சி, களத்தடுப்பு பயிற்சி என்பவற்றை மேற்கொண்டு வந்தது.

நியூசிலாந்து மண்ணில் தோற்றதற்குப் பழி தீர்க்கும் முகமாக தமது சொந்த மண்ணில் நியூசிலாந்தைப் புரட்டி எடுத்தது பங்களதேஷ் அணி. ஒரு போட்டி மழையினால் கைவிடப்பட ஏனைய 4 போட்டிகளிலும் வெற்றி பெற்று தமது மண்ணில் புதிய வரலாற்றுச் சாதனையினை பதிவு செய்தது பங்களாதேஷ்.

நியூசிலாந்துடனான போட்டியின் போது எத்தகைய ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டாலும் அந்த இலக்கை விரட்டும் திறனும், எத்தனை ஓட்டங்கள் பெற்றாலும் அதற்குள் எதிரணியை வீழ்த்தச் செய்யும் பாங்கும் வெளிப்பட்டமை பயிற்சிகளின் விளைவே.

புதியதொரு எழுச்சியில் பலமானதாக இருக்கும் பங்கா தேஷ் அணி முதன் முறையாக தனது மண்ணில் உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தவிருக்கிறது. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளின் போது அமைதியாக இருந்து தீடீர் எழுச்சி பெற்ற கென்யா தனது சொந்த மண்ணில் நடத்திய உலகக் கிண்ணப் போட்டியில் அரையிறுதிப் போட்டிவரை முன்னேறிது.

இதே போன்று சொந்த மண்ணில் நியூசிலாந்தை பங்களாதேஷ் புரட்டி எடுத்த விதமும், குறிப்பாகப் பங்களாதேஷ் ரசிகர்களின் ஆதரவும் அந்த அணிக்கு மேலும் பலம் சேர்க்கிறது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக அதிகளவில் கிரிக்கெட் ரசிகர்களைக் கொண்டிருப்பது பங்களாதேஷ் அணி.

நியூசிலாந்துடனான போட்டியின்போது பங்களாதேஷ் வீரர்கள் எல்லைக் கோட்டுக்கு ஒவ்வொரு பந்துகளையும் விரட்டும்போது அரங்கமே அதிரும்படியான கரகோஷம் பங்களாதேஷ் வீரர்களுக்குக் கிடைத்தது. தற்போது உலகக் கிண்ணத்துக்கான ரிக்கெற் விற்பனை பங்களாதேஷில் ஆரம்பித்த நாளில் ரசிகர் கூட்டம் குவிந்து அலைமோதியதையும். ரிக்கெற் விற்பனையின் போதே இவ்வளவு ரசிகர்கள் எனில் போட்டியில் பங்களா தேஷின் ஆதரவுக்கரங்கள் நிச் சயமாக எண்ணில் அடங்காத வையாகவே இருக்கும்.

இவற்றை எல்லாம் சமாளித்து பங்களாதேஷ் அணியை எதிர்கொண்டு வெற்றிபெறுவது எதிரணிகளுக்கு இலகுவானதாக இருக்கப் போவதில்லை.

மொத்தத்தில் பங்களாதேஷ் கிண்ணத்தில் கண் வைத்து விட்டது. *

டிலீப்

## பங்களாதேஷ்



இப்துல் ரஷாக், அவ்ரப் அகமட், இனாமுல் ஹைறக், இம்ருல் கைஸ், யகுருல் இஸ்லாம், யுனைட் சித்திக், முகமதுல்லா, மஸ்ரலிமோர்ரஸ்மா, மேகப் ஹொஸைசன், மொகட் அஷ்ரப்புல், முஸ்லிக் ரகீம், நமீம் இஸ்லாம், ரகிபுல் ஹஸைசன், நொபிடில் ஹசன், ரூபல் ஹவைன், சவிபுல் இஸ்லாம், சகதட் ஹொஸைசன், நல்ஸ், சகிப் அல்ஹசன், நகிம் இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VISA - வீசா
Consultancy Service

*UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,*

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC,** 734, Hospital Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### *திருமதி சின்னம்மா வன்னியசிங்கம்*



கரணவாய், கரவெட்டியைச் சேர்ந்த திருமதி சின்னம்மா வன்னியசிங்கம் நேற்று (08.01.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மீனாட்சி (கண்டாவளை) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வன்னியசிங்கம் (தேயிலைத் தொழிற்சாலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்புத் துணைவியும் சோமசேகரம் (சட்டத்தரணி), செல்லம்மா (கண்டாவளை), ஜெயராஜா (மொழிபெயர்ப்பாளர்), சிவமணி (நூலகர்), ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு தாயும் விஜயலஷ்மி (உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), சுந்தரலிங்கம் (கண்டாவளை) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிருபா, சேயோன், பகீரதன், இரவிரதன் ஆகியோரின் பேர்த்தியும் வைஷ்ணவி, சாம்பவி, ஆதித்தியன், பிரதீஸ், கயாணி, கயாணா, துஷாரா, குபேரா, குபேரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபதி ராயன்,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

*தகவல்:*
வ.சிவமணி (மகள்).


### கடை வாடகைக்கு

இல. 206, 208, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள [மொத்த சதுர அடி 1850 கொண்டது] முதலாம் மாடி வாடகைக்கு விடப்படும்.

தொடர்புக்கு : 0212228171, 0774322873

### வாடகைக்கு

யாழ். நகருக்கு மிக அண்மையில் காட்சியறை/அலுவலகம் நடத்தக்கூடிய கட்டடம் வாகனத் தரிப்பிட வசதியுடன் உடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு : 0779353036

### வீடு வாடகைக்குத் தேவை

3 பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு, யாழ். மாநகர சபை எல்லைக்கு வெளியே கொக்குவில், கோண்டாவில், மானிப்பாய், கோப்பாய், ஆனைக்கோட்டை, அரியாலைப் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 0772246743

### முக்கிய அறிவித்தல்

முதல்வன் மணிக்கூடு திருத்தகத்தில் மணிக்கூடு திருத்தக் கொடுத்து இதுவரை காலமும் எடுக்காதவர்கள் 05.02.2011இற்கு முன்னர் உங்கள் மணிக்கூடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிர்வாகி, 18 A, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 14 Sri Mitsubishi Lancer கார் உடன் விற்பனைக்குண்டு

T.P : 0775343401

### வாடகைக்கு

கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி ஆகியவற்றில் வீடும், கடையும் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 0212223479, 0215670313

### தேவை

தனியார் மருந்தகம் ஒன்றுக்குப் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் ஒருவரும், மருந்து விற்பனையில் அனுபவம் உடையவர்களும் உடன் தேவை.

தொடர்பு : 0772178701

ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் & பயிற்சியகம்,
*148, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*(உதயன் முன்பாக)*

**சான்றிதழ் வழங்கலும், புதிய மாணவர் அனுமதியும்**

கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், புதிய மாணவர் அனுமதியும் இன்று (09.01.2011) முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும்.

இயக்குநர்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும் செல்வி ரேணுகா சோமசுந்தரம் அவர்களின் தந்தை

**நல்லதம்பி சோமசுந்தரம்**

அவர்கள் 05.01.2011 அன்று இறைவனடி எய்தியமையை இட்டு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள்,
**யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்.**





### ஹோட்டல் வெஸ்ரேன் பரடைஸ் (Hotel Western Paradise)

கொழும்பு, தெஹிவளையில் அதிசொகுசு தங்குமிட அறைகள் மலிவு விலையில் வாடகைக்கு பெற்றிடலாம். (A/C, Non A/C) வாகன வசதியும் கிடைக்கும்.

தொ.பே.இல. 0112739922, 0112730645
9A, Council Avenue, *தெஹிவளை,*
*(தெஹிவளை மாநகரசபை அருகாக)*

### UK VISAS

எமது சேவையில் எல்லா விதமானவிசாக்களும் ஒழுங்கு செய்துதரப்படும்.

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Colombo 6,
Contact: 0774-550747
FLEX Graphic

### CALL SERVICE

T.P : 021-222 4459, 0774192275

Computer,(Laptop, Desktop) Mobile Phone, TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்கள் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

### STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax :222 4460.

**CERTIFICATE IN HARDWARE TECHNOLOGY**

Computer Assembling, Repairing, Maintenance, Software Installation, Internet Connection, என்பன ஆரம்பத்தில் இருந்து பிக்கப்படும்.

**8 Students in a Batch**

உங்கள் கணனிகளில் ஏற்படும் பழுதுகளை நீங்களே சரிசெய்து கொள்ளலாம், ஆண்கள், பெண்கள், பாடசாலை மாணவர்கள், தொழில் புரிபவர்களுக்கென விஷேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

DURATION 1 MONTH, RS. 2000/-
(கைலச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)


## மரண அறிவித்தல்

### *திருமதி நடேசு பொன்மணி*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு பொன்மணி நேற்று முன்தினம் (07.01.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் நடேசுவின் அன்பு மனைவியும் மாணிக்கம், காசிப்பிள்ளை, தவமணி, குணசேகரம், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, கனகசபாபதி மற்றும் சிவமணி, அருளம்பலம், குணபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகேஸ்வரி (சுவிஸ்), காந்தமூர்த்தி, செல்வச்சந்திரன் (ஜேர்மனி), ஜெயராசா (ஜேர்மனி), பாஸ்கரன் (லண்டன்), கலாதேவி (வவுனியா), றமணன், நிர்மலன், லோகேஸ்வரி, திவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயும் குணதேவன் (சுவிஸ்), கஜனி, விசிதா (ஜேர்மனி), துர்க்கா (ஜேர்மனி), றஜிதா, உதயரூபன் (செலான் வங்கி, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் விதுர்சன், ஐஸ்வினி, அபினேஸ், வேணுஜன், ஜதுசன், தனுஜன், பானுஜா, சங்கீத்தன், சுவேத்தா, டிஸ்னுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மேற்கு, பத்தகலட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

(108879)


### THE MOST ECONOMICAL MBA STUDY IN UK

OUR SERVICE ABSOLUTELY FREE
Before the visa or after getting visa

flex Institute
4, IBC Road, Colombo 6.
Hotline: 0777-761346
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk
FLEX Graphic

### STUDY MBBS

In Armenia @ YSMU
Results is not required
A/L Biology Student per Academic year
USD 3000-$500 with accommodation

Study in Cyprus At Cothm
Earn per month 500 Euro
Study Engineering in India

Also student placement service
UK,Canada,Malaysia,Singapore,Australia,denmark
Open on Weekdays at 9am-5pm






HANIYA EDUCATION
#22, Initum Road, Dehiwela.
Hotline: 0770531050
Tel: 0112728489
info@haniyaeu.com www.heniyaeu.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி வடிவேலு செல்லமுத்து (செல்லம்)

இலகடி, வலந்தலையைப் பிறப்பிடமாக வும், பொன்னம்பலம் வீதி, காரைநகரை வதி விடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு செல்லமுத்து நேற்று (08.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகளும், வடிவேலுவின் அன்பு மனைவியும், அமரர் சிறீதரன் மற்றும் சிறீகாந்தன், அருந்தவம் (ஆசிரியர், யா/ஆறுமுக வித்தியாசாலை, சுழிபுரம்), கலைமகள், சிவரூபன் திருமகள் (ஆசிரியை, யாழ்ற்ரன் கல்லூரி), ஞானரூபன் (Prince Electronic, சங்கானை), பூமகள் (பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வமலர், பகீரதன், (பகவதி அழகுமாடம், சங்கானை), தில்லைநாதன், கோமதி, சிதம்பரநாதன் (பிரதேச செயலகம், காரைநகர்), கர்ஜனா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொன்னம்பலம் வீதி, காரைநகரிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10 | 25 |
| ★ | ★ |
| 01 | 12 |
| ★ | ★ |
| 1955 | 2006 |



### முத்து அப்புக்குட்டி துரைச்சாமி

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி)

நீங்காத நினைவுகள்
உங்கள் பிரிவின் நாள்கள்
தாங்காது எங்கள் மனம்
உங்கள் வார்த்தையின் குரலை
எங்கள் விழிகள் கண்ணீரில்
சென்றதோ ஆண்டுகள் நான்கு
ஆனாலும் நாம் இங்கு தவிக்கிறோம்
உங்கள் நினைவால்
உங்கள் திருவடியில்

"புஷ்ப மஹால்",
அம்மன் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(108881)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### செல்வன் சிவநாதன் துஷ்யந்

(St. Johns College, Grade-10)

தோற்றம்
24.05.1995

மறைவு
26.11.2010

கடந்த 26.11.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புப் புதல்வனின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல்12 மணியளவில் இடம்பெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

தகவல்:
குடும்பத்தினர், (செல்வா மினி, சத்தி)

(108877)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் 2011ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவும் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணியளவில் யாழ். நகரில் குறுக்குத்தெருவில் இல. 56 உள்ள விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இதில் பதிவு செய்த அனைத்து கழகங்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் எஸ். நமணன் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம், ஜன. 9

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு கொக்குவில் பொது நூலகமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஒன்றுகூடல் நிகழ்வு

குருநகர், ஜன. 9

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

(ஓ-51)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 9

வதிரி, பூவற்கரை விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (ஐ)


### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடனடியாக உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம். அழையுங்கள்.
Computer Repair 0771329513.

### SALESMAN தேவை

யாழ். நகரில் இயங்கும் ஜவுளி நிறுவனத்துக்கு O/L, A/L எடுத்த ஆண்கள் தேவை. பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு : 0772850753

### ஜிஜே பியூட்டி பாளர்

உரிமையாளர் :- S.Kayanthini
[Dip.in Sri Lanka and India]
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க சாவகச்சேரியில் அழகுக்கலை டிப்ளோமா 20.01.2011 காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. விண்ணப்பப் படிவங்களை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.
சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.
T.P : 0772198058

### கார் விற்பனைக்கு

வைத்தியரின் தனிப்பாவனையில் சிறிதுகாலமே பாவித்த புதிய 2007 Model TOYOTA Passo, Peral White நிறமான KL xxxx தொடரிலக்கமுடைய Full option (A/C, Power Steering, Power Mirror, Power window, Remote Key, Central Locking) கார் உடன் விற்பனைக்கு (Very Economic 15-20 k.m/L.)
தொடர்பு : 0779611993, 0212263682

### பேராதனை வெளியீடு

அளவையியல் - புதிய பாடத்திட்டம் தொடர் :- 1
"விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்"
விலை - 100/=
ஆசிரியர்கள், கல்வி நிலையங்கள் விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். (முழுப்பதிப்புரிமை உடையதால் பிரதி செய்து விநியோகித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்)
தொடர்புகளுக்கு : 0772780346

### கிராபிக் டிசைனர் தேவை

Photo shop இல் அனுபவம் வாய்ந்த Computer வடிவமைப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மூர்த்தி கலர் லாப்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 1558.

### தைத் திருநாளை முன்னிட்டு நிரு சிடி பிளாசாவின் மலிவு விற்பனை

*பக்திப் படங்கள், பாடல்கள்.
*புதிய, பழைய, இடைக்காலப் படங்கள்.
*வடிவேல், விவேக் காமெடி *GAME-CD
*SPOKENENGLISH *கர்நாடக இசைக்கச்சேரிகள்.
*ஆங்கிலப் படங்கள்/தமிழாக்கப் படங்கள்.
*பாடல் பதிவுடன் கஸட்.
அனைத்தையும் DVD/VCD களில் மலிவு விலையில் பெற்றிட...

நிரு சிடி பிளாசா (NIRU CD PLAZA)
பிரதான வீதி-சித்தன் கேணி

இன்றுமுதல் 09-01-2011
தொடக்கம் 13-01-2011

(108872)


## கண்ணீர் அஞ்சலி

### நடராசா சிவராசா J.P.

(பரிபாலன தர்மகர்த்தா, அளவெட்டி, பெருமாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம்)



நீண்டுவளர் மனிதமாய்
நின்வரவு பெற்றேனே!
வேண்டுமொரு பண்புதனை
விருப்புடனே கற்றேனே!
ஆண்டு பல தொடருமென்று
ஆவலும் கொண்டேனே!
மாண்டீர்கள் என்றறிந்து
மீளாத் துயருற்றேனே!

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும், அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

111/01, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(108884)

அ. பழனியப்பமும்
குடும்பத்தினர்.

## ஏழாலை தெற்கு களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

ஏழாலை தெற்கு,
களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை (10.01.2011) திங்கட் கிழமை தொடக்கம் 19.01.2011 புதன் கிழமை வரையான பத்து நாள்களும் தினமும் காலை 8 மணிக்கு அபிஷேகம் இடம் பெற்று தொடர்ந்து 10 மணிக்கு பூஜை, பஜனை, சொற்பொழிவு நிகழ்வுகள் இடம் பெற்று பகல் அன்னதான நிகழ்வு இடம் பெறும். தேவஸ்தானத்தில் பாலஸ்தா ன வேலைகள் நடைபெறுவதால் வழமையான உற்சவங்கள் இடம்பெறமாட்டாதென்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(108870)

தேவஸ்தானத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பெரியபிள்ளை வல்லிபுரம் (சோதிடர்)



தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு, பாலாவோடையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெரியபிள்ளை வல்லிபுரம் நேற்று (08.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித்தம்பி வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் கண்மணி, வன்னியசிங்கம், ஈஸ்வரி, பாலசிங்கம், தர்மராசா, பஞ்சலிங்கம் (சோதிடர்), இராசமலர், பாலகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் கந்தப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் தம்பிஐயா, பத்மாவதி, சத்தியானந்தமலர், சந்திரவதனா, பத்மநாதன், இரத்தினமாலா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்திர முகவரி:
குருந்து வீதி,
தையிட்டி,
K.K.S.

தற்காலிக முகவரி:
மில்லேன்,
உடுவில் தெற்கு,
பாலாவோடை,
மானிப்பாய்.

(108878)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே.
0774955674.

### திருமதி செல்வராசா நேசமலர்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா நேசமலர் நேற்று (08.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் ரிசாந்தினி, லோகரூபன், கார்த்திகா (மாணவி, யா/அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர், நீர்வேலி), மகேஸ்வரி, பத்மநாதன் (U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணராசா (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர், இணுவில்), சறோஜினிதேவி, தனபால சிங்கம், விஜய சுந்தரவல்லி (கண்டி), யோகராணி (U.K.) ஆகி யோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு, இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
T.P. 021 3207172.

(சி-574487)

தகவல்:
செ. செல்வராசா
(ஓய்வுபெற்ற ஊழியர்,
நல்லூர் ப.நோ.கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலை,கொள்ளைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட உயர் அதிகாரிகள் பங்குபற்றினர்.

பொது மக்களின் சார்பாக யாழ்.வர்த் தக சங்கப் பிரமுகர்கள், சமாதானத்துக் கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள், யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும்சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலர்கள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் கடந்த ஒரு வருடத்துக்கு மேலான காலத்தில் மக்கள் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். எனினும் கடந்த ஒரு மாதமாகத் தொடரும் கொலைகள், கொள்ளைகள், ஆள்கடத்தல்கள் போன்றவற்றால் மக்கள் பீதியில் உறைந்து போயுள்ளனர். இத்தகைய சம்பவங்கள் தொடராமல் இருக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு பேணப்படுவதை பொலிஸார் உறுதிப்படுத்த வேண்டும்'' என்று பொதுமக்கள் பிரதிநிதிகள் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தினர்.

இதற்குப் பதில் அளித்து உரையாற்றிய பொலிஸ் மா அதிபர் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் இல்லை. அதேவேளை நாட்டின் ஏனைய மாகாணங்களில் இடம்பெறும் வன்செயல்களுடன் ஒப்பிடும்போது, இங்கு குறைந்த எண்ணிக்கையான குற்றச்செயல்களே இடம்பெறுகின்றன.

ஏற்கனவே இடம்பெற்ற சம்பவங்களுடன் தீவிரவாதச் செயற்பாடுகளுக்குத் தொடர்புகள் இருப்பதாகவும் கண்டறியப்படவில்லை.

பெரும் பாலான சம்பவங்கள் சொந்தக் காரணங்களுக்காகவே இடம்பெற்றுள்ளன என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. நடந்த சம்பவங்களை ஊடகங்களை மிகைப் படுத்தியுள்ளன என்றே கருதுகின்றேன்.

எனினும் எதிர்காலத்தில் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும். பொலிஸ் ரோந்து சேவையை விஸ்தரிக்க இருக்கின்றோம்.

பொலிஸ் ரோந்தை தீவிரப்படுத்த கூடுதல் ரோந்து வாகனங்களும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் - என்றார் பொலிஸ்மா அதிபர்.

தெற்கிலிருந்து தடைசெய்யப்பட்ட போதைப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அதை நிறுத்த உடன் நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ்மா அதிபர் உறுதியளித்தார்.

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் நிலை யங்களில் தமிழில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

''தற்போது 300இற்கு மேற்பட்ட தமிழ் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். 2,500 தமிழ் பொலிஸாரை வடக் குக் - கிழக்கில் நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்'' என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (உ-ஐ)

## குழம்பியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா), தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகியன இணைந்து பெரிய அளவிலான கூட்டமைப்பு அமைக்க முயற்சி எடுக் கப்பட்டுள்ளது. அதில் இணைந்து போட்டியிடுவீர்களா என அமைச்சர் டக்ளஸிடம் ஏனைய பிரதிநிதிகள் கேட்டனர்.

அரச தரப்புடன் இல்லாது வெளியில் அமையவிருக்கும் இந்தக் கூட்டணியில் இணைவதன் மூலம் அரசுக்கு ஒரு நல்ல பாடம் புகட்டலாம் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதை ஏற்க மறுத்த அமைச்சர் டக்ளஸ், அரசுடன் சேர்ந்தே தேர்தலில் போட்டியிடப்போவதாக தெரிவித்தார்.

இதேகருத்தை தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிப் பிரமுகர்களும் தெரிவித்துவிட்டனர். தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இருந்து இவ்விரு கட்சிகளும் வெளியேற எடுத்த முடிவு மூலம் அரங்கம் பிளவுபட்டு விட்டது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஒ-ஐ)

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பது தெரியவந்தது. நாம் மக்களுக்காக இங்கு பணியாற்றுகிறோம் என்ற வகையில் மக்களின் அச்சத்தை நீக்கவும் - இத்தகைய வன்செயல்களை நிறுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். மீண்டும் படையினரும் பொலிஸாரும் இணைந்து ரோந்து நடவடிக்கைகளையும் சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவிருக்கிறோம். இரவிலும் ரோந்து இடம்பெறும்.

இத்தகைய செயற்பாடுகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

மக்களைப் பாதுகாக்க முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார் தளபதி ஹத்துருசிங்க. (ஒ-ஐ)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியின் மூன்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நால்வர் கொண்ட குழு வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணிக்காக நியமிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## வீட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்கு நடந்த இந்தச் சம்பவத்தை அறிந்திராத அவரது உறவினர்கள் இவர் கடத்தப்பட்டுவிட்டார் என்று கருதிப் பதற்றமடைந்தனர். இதுகுறித்து அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் கொடுத்துவிட்டனர்.

இந்நிலையில் அவர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையைப் பெற்றுக் கொண்டு நண்பர்களின் உதவியுடன் நள்ளிரவு வேளை வீடு திரும்பிவந்தார்.

அதன் பின்னரே வீட்டாருக்குப் 'புதினம்' தெரியவந்தது.

சம்பவத்தில் காயமடைந்தவர் வர்த்தகர் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வீட்டார் செய்த முறைப் பாடு வாபஸ் பெறாத நிலையில் நேற் றுக்காலை பொலிஸார் பிரஸ்தாப வர்த் தகரை பொலிஸ் நிலையம் அழைத்திருந்தனர். அவரை விசாரணைக்காக நீண்டநேரம் வைத்திருந்துவிட்டு மாலை 5 மணிக்கே வீடு செல்ல அனுமதித்தனர். (ஒ-9)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

நாளைய சந்திப்பில், இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படைகள் குறித்து ஆராயப்படும் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ஒ-ஐ)

## உருள்ளிராயி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போயுள்ளனர். மற்றும் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். இத்தகைய சம்பவங்களால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இவர்கள் குறித்து இதுவரை எதுவித தகவலும் தெரியவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-9)


Hotel Vacancies

A well established star class hotel situated in Jaffna is looking for Dynamic, Self motivated and 02 to 03 Years well experienced persons for the following categories,
Secretary to the Managing Director (Female) - (English speaking)

* **Receptionist** (Male/Female) - (English speaking)
* **Telephonist** - (English speaking & writing)
* **Barman**
* **Waiters**
* **Room boys**
* **Kitchen helpers**

Please send the CV with the contact details of two non related referees within 05 days.
Write the Post Applying in the left corner in the Envelope.

The Managing Director,
Tilko Jaffna City Hotel,
70/6, K.K.S. Road,
Jaffna.

e-Mail: Citystarkb@gmail.com

புதுவருட கட்டண குறைப்புடனான
ECHS வகுப்புகள் ஆரம்பம் 14.01.2011
IELTS (With Spoken English)
* General training (With Spoken English) (4moth 64 hrs)
* Academie training (3moth 48hrs)
University Students க்கான
* Advanced Diploma in English (3moth 48 hrs)
* Diploma in English (4moth 64 hrs)
தவணை முறை கட்டணம்
தெரிவுப்பரீட்சை:- (14.01.2011) வகுப்பு ஆரம்பம் (16.01.2011)
* அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
* ஒரு வகுப்புக்கள் 10 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி
தொடர்புகளுக்கு: European College of higher studies
315 1/2 Parameshwara Junetio, Palay Road, Jaffna.
(யாழ்பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்)
Tel:- 0771882507/ 0213734747.

பிரத்தியேக வகுப்பு
ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு யாழ்.நகர எல்லைக்குள்.
தொடர்பு:- 0777742610

CANTER FOR HIRE
"350, MITSUBISI" கன்ரர் லொறி மூலம் மிகக் குறைந்த கட்டணத்தில் கொழும்பு-யாழ்ப்பாணத்துக்கு இடையில் பொருள்கள் கொண்டு வந்து தரப்படும்.
தொடர்புக்கு.T.P:0775125985.

வீட்டுப்பணிப்பெண் தேவை
பலாலி வீதி, கந்தர்மடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு 23 வயதிற்குட்பட்ட திருமணமாகாத பெண் ஒருவர் வீட்டுப் பணிப் பெண்ணாக உடனடியாகத் தேவைப்படுகிறார். விரும்புபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். T.P:0750392379.

பதவி வெற்றிடம்
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. Clerk (full time)
2. Instructor (MSO, DTP) full time
14.01.2011 ற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்
Softview Computer College
43,Thaddatheru Junction, Jaffna.

தேவை
1. லொறிச் சாரதி
(சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்)
2. வீடு பராமரிப்பாளர்
(யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள்)
TP.No:0789141582

A/L Day Class
கலை, வர்த்தகப் பிரிவு
திங்கள் முதல் வெள்ளிவரை புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

LOGIC
A/L2012
குறியீட்டு அளவையியல்
பிரிவு-II
ஆரம்பம்- 10.01.2011.
(3.15pm)
(Mon,Wed,-3.15-5pm)
P.கமல்தாசன்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கடையும் வீடும் விற்பனைக்கு
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:- Te. No - 0718454025

வீட்டையோ வேலைத்தளத்தையோ எந்த நேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க
AT
Athavan Technology
Security camera, Door phone system, Finger print attandance, Burgler alarm
No. 111/2, Brown Road
Kokuvil East, Jaffna.
Tel - 0750 421 776

SAKTHIMICRO SYSTEM
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Master Diploma in Multimedia For O/L, A/L Students
(VISUAL FX & ANIMATION) Only 8,000/=
இந்தியாவில் இருந்து வருகை தரும் மல்ரிமீடியா வல்லுனர்களால் ஆரம்பிக்கப்படுகின்றது
மூன்று நாட்களில் Photoshop CS5 Upgraded, Game Developing Only 1900/=
Adobe SOLUTION PARTNER
அதிநவீன கணனி கூடம்
Adobe AUTHORISED Training Centre
Batch -
11/01/2011 - 9.00am
12/01/2011 - 9.00am
13/01/2011 - 9.00am
14/01/2011 - 9.00am
புதிய கணனி விலையில் அதிரடி விலைக்கழிவுகள்
Adobe Training Centre
www.sakthimicro.com theep@sakthimicro.com
Chavakachcheri - 0212270084 Jaffna - 0217903456
அனுமதிகளுக்கு முந்துங்கள் Hotline - 0776102609

Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புகளும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre for International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117
(சி/573707)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் மலர்ந்துள்ளது.
எங்களது சகல செயற்பாடுகளும் அபிவிருத்தியடைய ஆரம்பித்துள்ளன. எங்களது வாழ்க்கை மீண்டும் மலர ஆரம்பித்துள்ளது. புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் எங்களது கைவினைத்திறன் கைத்தொழிலை நவீனமயப்படுத்தி எமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் இங்கு வந்து சிரமம் பாராது எங்களுக்கு உதவி செய்தது. அவ்வாறு நாங்கள் உற்பத்தி செய்த எமது புத்தாக்கங்களை ஒன்று சேர்த்து நாங்கள் ஒரு கண்காட்சியை நடத்துகிறோம்.



Hon. President Mahinda Rajapaksa
Hon. Minister Douglas Devananda
Hon. Deputy Minister Weerakumara Dissanayake
Secretary to the Ministry Mr. V. Sivagnanasothy

நவீன கைப்பணிப் பொருட்கள் கண்காட்சி
மற்றும் விற்பனைச் சந்தை

yugayatanimawum

# காலத்திற்கேற்ற உற்பத்திகள் 2010 யாழ்ப்பாணம்

YOUNG DESIGNERS' exhibition 2010 JAFFNA

காலத்திற்கேற்ற உற்ப
தரமாக நடைபெறும் இளம்
வடிவமைப்பாளர்கள் கண்காட்சி

## ஜனவரி 10-11-12

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப.8.00 மணி வரை

Media sponsor

ஒத்துழைப்பு வழங்கியோர்
இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
(யாழ்ப்பாணக் கிளை)
பனை அபிவிருத்தி சபை
மீளெழுச்சி கருத்திட்டம்



ජාතික මෝස්තර මධ්‍යස්ථානය
தேசிய வடிவமைப்பு நிலையம்
NATIONAL DESIGN CENTRE
පාරම්පරික කර්මාන්ත හා සුළු ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

## 100 இன்ப உணர்வுகளை அனுபவிக்க MOODS




நாடெங்கும் சகல முன்னணி
ஃபாமசிகளிலும் சுப்பர்
மார்கட்களிலும் கிடைக்கும்.

சந்தைப்படுத்தலும் விநியோகமும்:

Lewis Brown
Pharmaceuticals (Pvt) Ltd
A MEMBER OF THE DELMEGE GROUP

101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 11 4 729 248, 2 676 213 | ஃபெக்ஸ்: 11 2 698 139, 2 68 6149
மின்னஞ்சல்: pharma@delmege.com | இணையத்தளம்: www.delmege.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நீதிமன்றம் சட்ட ரீதியானதா? இல்லையா?

# ஜனாதிபதி - நீதியரசர் முறுகலுக்குக் காரணம் இதுவே

இராணுவ நீதிமன்றம் சட்ட ரீதியானதா? இல்லையா? என்ற விடயமே ஜனாதிபதிக்கும் பிரதம நீதியரசருக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளது என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல.

அத்தோடு நின்றுவிடவில்லை, புலிகளின் தலைவர் எனக் கூறப்படும் கே.பிக்கும் அரசுக்குமிடையில் பெரும் பயங்கரமான தொடர்புகள் உள்ளன. அதன் எதிரொலியாகத்தான் சரத்பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டார் என்றும் அவர் விமர்சித்தார்.

அவரது கூற்று ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பெரிதும் உசுப்பேற்றி விட்டது.

இப்படி ஒரு சுவாரஸ்யமான சம்பவம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம் பெற்றது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் சபை கூடியதும் முதல் கட்டமாகப் பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தொடர்பாக ஐ.தே.க. உறுப்பினர் ஜோன் அமரதுங்க எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக சபாநாயகர் தீர்ப்பைச் சபையில் வாசித்தார்.

**கோட்டுப் போட்ட அமைச்சர் கோர்ட்டில் வாதாட இடமுண்டு**

அதாவது அரசமைப்பின்படி நாடாளுமன்றத்தில் அமைச்சராகப் பொறுப்பேற்று முக்கிய பதவியை வகிப்பவர்கள் சட்டத்தரணிகளாக இருந்தாலும் அவர்கள் நீதிமன்றங்களில் வாதாடமுடியாது. ஆனால், பிரதி அமைச்சர்களுக்கு இப்படியான தடை கிடையாது. அரசமைப்பில் பிரதியமைச்சர்கள் தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை. எனவே பிரதி அமைச்சர் நீதிமன்றில் ஆஜராகி விடுவதற்குத் தடை ஏதும் கிடையாது என்று சபாநாயகர் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டினார்.

இத்தீர்ப்பு ஜோன் அமரதுங்கவுக்குப் பெரும் ஏமாற்றமாகவே அமைந்தது.

**மண்டைதீவைக் குழப்பிவிட்ட மண்டைதீவுப் பிரச்சினை**

கேள்வி நேரத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி மண்டைதீவு விவகாரம் தொடர்பாகப் பிரதமரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அதாவதுகடற்படையினரால் மண்டைதீவு அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு வாழ்ந்த நூற்றுக்கும் மேலான மக்களின் வீடுகள் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அம்மக்கள் இன்றும் தற்காலிகக் குடில்களில் வாழ்கின்றனர்.

இவர்களுடைய வீடுகளை எப்போது மக்களிடம் ஒப்படைக்கப் போகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார் விநாயகமூர்த்தி.

பிரதமரிடம் கேட்ட இக்கேள்விக்கும் வழமைபோல் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவே பதிலளித்தார்.

ஐயா, நீங்கள் கூறுவதுபோல் மண்டைதீவு அதியுயர் பாதுகாப்பு வலயம் அல்ல. அங்கே வழமைபோல் மீனவர்கள் தமது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

தொழிலை மேற்கொள்கின்றார்கள். அதேவேளை 18 வீடுகள் மட்டுமே கடற்படையினரால் பயன்படுத்தப்படுகின்றன. கூடிய விரைவில் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் கடற்படைத் தலைமையகம் அமைக்கப்படவுள்ளது. அதன்பின் எல்லா வீடுகளுமே உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றார் அமைச்சர் தினேஷ்.

இல்லை, இல்லை அமைச்சர் கூறுவது தவறு. நான் நேரடியாகப் போய்ப் பார்த்தவன். நூறு மீனவர்கள் குடில்களிலேயே வாழ்கின்றனர் என்று மறுத்தார் விநாயகமூர்த்தி.

கௌரவ உறுப்பினர் அவர்களே,




நீங்கள் எப்போது சென்றீர்கள் என்று நான் கேட்டபோது, 2002ஆம் ஆண்டில் சென்றேன் என்று (விநாயகமூர்த்தி) கூறினீர்கள். ஐயா, இப்படித்தான் நீங்கள் தவறாகக் கூறுகின்றீர்கள். நான் இரண்டு மாதங்களின் முன் அங்கு சென்று வந்தேன். நான் குறிப்பிட்டதுதான் உண்மை. தவறான விடயங்களைக் கூறி மக்களைத் திசை திருப்ப முயலவேண்டாம் என்று கூறி மடக்கிவிட்டார் அமைச்சர் தினேஷ்.

**எங்களுடன் இருந்து வசைபாடிய ஹக்கீம் இன்று புகழ் பாடுகிறார்**

தொடர்ந்து நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் திருத்தச் சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பித்தார். அப்போது அமைச்சருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல, ஐயா இந்த அமைச்சர் ஹக்கீம் முன்பு எங்களுடன் இருந்தபோதே ஜனாதிபதியைப் பச்சை பச்சையாக வசை பாடினார். இப்போது அங்கே போய் இருந்து கொண்டு தனது பதவிக்காகப் புகழ்பாடுகிறார் என்று கூறினார். இது அஸ்வர் எம்.பியையும் தொட்டுவிட்டது போலும். அதனால் அவர் தனது பங்குக்கு எதிர்க்கட்சியினரைத் திட்டித் தீர்த்தார்.

**ஒத்திவைக்கப்பட்டது சபை அமர்வுகள்**

ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களின் நியமனம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஒத்திவைப்புவேளை பிரேரணை சபையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது. ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் பெரும் சொற்போரை ஏற்படுத்தி சபையை அல்லோலகல்லோலப்படுத்தி விட்டது.

வழமையாகவே நகைச்சுவையாகப் பேசும் பிரதமர் நேற்று முன்தினம் ஆவேசம் வந்தவர் போல் கூச்சலிட்டுப் பேசினார். இது அவரது சகாக்களுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்திவிட்டது. இதனால் சபையில் அமைதி குறைந்தது. சபை நடவடிக்கைகளும் முப்பது நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

**சிரேஷ்ட அமைச்சர்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகம்போல்**

இந்த விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு கதையைக் கூறினார்.

அதாவது, ''நான் சில தினங்களின் முன் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரைக் கண்டு எப்படி ஐயா இருக்கின்றீர்கள் என்றேன். ''அதை ஏன் கேட்கின்றீர்கள். நாங்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகம் போல் இருக்கின்றோம்'' என்று அந்த சிரேஷ்ட அமைச்சர் கூறினார்.

எனக்குப் புரியவில்லையே என்றேன். ''ஆம் ஐயா அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு கப்பல்கள் இல்லை. சிரேஷ்ட அமைச்சர்களான எங்களுக்குக் காரியாலயங்கள் இல்லை'' என்று அந்த சிரேஷ்ட அமைச்சர் கவலையுடன் கூறினார்.

பாவம் இவர்கள். பயங்கரவாதி என்று அரசினால் கூறப்பட்ட கே.பி.க்கு உள்ள வசதிகளும் பாதுகாப்பும்கூட இந்த சிரேஷ்ட அமைச்சர்களுக்கு இல்லையே - என்றார் ரணில் விக்கிரமசிங்க.

**கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையாம்**

எதிர்க்கட்சியினர், சிரேஷ்ட அமைச்சர்களுக்கு எதுவுமே இல்லை. அவர்கள் அவமானப்படுத்தப்பட்டுள்ளனர் என்ற போது சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவரான அத்தாவுட செனவிரட்ன எதிர்க்கட்சியினரை வாங்கு வாங்கு என்று திட்டித் தீர்த்துவிட்டார்.

எங்களுக்கு என்ன இல்லை. எல்லாம் இருக்கின்றது. காரியாலயம் இல்லை, செயலாளர் இல்லை, பணம் இல்லை என்று எதிர்க்கட்சியினர் கவலைப்படுவது வேடிக்கையாக இருக்கின்றது. காரியாலயம் இல்லாவிட்டாலும் செயலாளர் இல்லாவிட்டாலும் நான் கடந்த இரு வாரங்களில் நான்கு அமைச்சுகளுக்குச் சென்று அந்த அமைச்சுத் தொடர்பாக ஆலோசனைகளை நடத்தியுள்ளேன். எதிர்க்கட்சியினருக்கு வேறு வேலை இல்லாததால் எங்களை வம்புக்கு இழுத்துள்ளனர் என்று சாடினார் அத்தாவுட செனவிரட்ன.

**சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு உள்ள அதிகாரம் கூட சிரேஷ்ட அமைச்சர்களுக்கு இல்லை**

சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரட்ன வலிப்பு நோய் வந்து துடிப்பது போல் ஆத்திரத்தைக் கொட்டித்தீர்த்து விட்டுப் போய்விட்டார்.

எத்தனை அமைச்சுக்களுக்கு இவர்கள் ஏறி இறங்கினாலும் ஒரு சாதாரண சமுர்த்தி அதிகாரிகளுக்கு உள்ள அதிகாரங்கள் கூட இந்த சிரேஷ்ட அமைச்சர்களுக்குக் கிடையவே கிடையாது. இந்த உண்மை சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் நன்றாகவே தெரியும் என்று போட்டுடைத்தார் ஜே.வி.பி. உறுப்பினரான விஜித்த ஹேரத்.

**பென்ஸனியர் மடத்திற்கு பென்ஸனியர் இருவரே செயலாளர்**

அரச வர்த்தமானியில் ஒரு விடயம் வெளியிடப்பட்டுள்ளது. அதாவது பத்து சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் ஒரு செயலகம் அமைக்கப்பட்டு அங்கு இரண்டு செயலாற்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் பென்ஸனியர்கள் என்பதுதான் வேடிக்கை.

இந்த சிரேஷ்ட அமைச்சர்களுக்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்கவோ கேள்விகளுக்குப் பதிலளிக்கவோ உரிமை இல்லை பெயரளவில் மட்டுமே இவர்கள் அமைச்சர்கள், இவர்களின் எதிர்காலம் கேள்விக்குரியதாகியுள்ளது என்று கூறினார் ஜோசப் மைக்கல் பெரேரா. இவர்களுடைய பதவிநிலை பொறுப்புகளும் கடப்பாடுகளும் என்ன என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று கூறி முடித்தார் ஜோசப் மைக்கல் பெரேரா.

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

**புதுப்புது அமைச்சர்களை உருவாக்கியதே ஐ.தே.கதான்**

பிரதி அமைச்சர் டிலான் பெரேரா இங்கு இன்றும் ஒரு விடயத்தைப் போட்டுடைத்தார். ஐயா இந்த ஐ.தே.கவினர் இன்று சிரேஷ்ட அமைச்சர்கள் தொடர்பாக ஒப்பாரி வைக்கின்றனர்.சற்றுத் திரும்பிப்பாருங்கள். அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள் இன்னும் சொல்லப்போனால் சபாநாயகராக இருந்த அல்ஹஜ் பாக்கீர் மாக்காரை அமைச்சரவைப் பொறுப்புகள் இல்லாத ஓர் அமைச்சராக்கியது.

இப்படி உலகத்தில் இல்லாத அமைச்சர்களை எல்லாம் உருவாக்கியபோது வாயை மூடிக்கொண்டு இருந்தவர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் தொடர்பாக விமர்சிப்பது வெட்கம் கெட்ட செயலாகும் என்று பதிலடி கொடுத்தார் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா.

**பார்வையாளர்கள் கலரியில் பிரதி அமைச்சர்கள்**

கேள்வி நேரத்தின்போது மற்றும் ஒரு சுவாரஸ்யமான விடயம் இடம்பெற்றது. தமது ஆசனங்களில் அமர்ந்திருந்த படைக்கல சேவிதர் திடீரென எழுந்து பிரதிநிதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தனவின் ஆசனத்தை நோக்கி விரைந்து சென்றார்.அப்போது பிரதி அமைச்சர் பார்வையாளர் கலரியைச் சுட்டிக்காட்டினார். அங்கே பிரதி அமைச்சர் தயாசிறி திஸேரா தனக்குத் தெரிந்தவர்களுடன் பார்வையாளர் கலரியிலிருந்து சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தார். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையாளர் கலரியில் அமரமுடியாது. இதனால் படைக்கல சேவிதர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அனுப்பி பிரதி அமைச்சரை உடனடியாக எழுந்துவரும்படி செய்தார். யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரிய வில்லை.

நாடாளுமன்றம் மீண்டும் எதிர் வரும் 20 ஆம் திகதி கூடும்.

# இந்திய இறைச்சி, முட்டைகளில் நோய்க் காவிகள் எதுவும் இல்லை

## பரிசோதனைகளில் நிருபணம்

கொழும்பு, ஜன.9

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளில் நோய்களைப் பரப்புவதற்கான வைரஸ்களோ அல்லது வேறு கிருமிகளோ இல்லையென்பது பரிசோதனைகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளன - என கால்நடைகள் மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரதியமைச்சர் எச்.ஆர்.மித்திரபால தெரிவித்தார்.

பேராதனையில் கடந்த வியாழக்கிழமை இரவு நடை பெற்ற கலந்துரையாடலொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் கோழி இறைச்சிக்கும், முட்டைகளுக்கும் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக அவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது.

ஆனாலும், அவை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு முன்னராகவே பரிசோதனைகள் மூலம் நோய்களைப் பரப்பும் கிருமிகள் இல்லை யென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அரசியல் இலாபம் கருதி எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் பிரச்சாரத்தில் எவ்வித உண்மையும் இல்லை. என்று [illegible] தெரிவித்தார். (சி)

# உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனு 20 முதல் 27 வரை

உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதுமுள்ள 330 உள்ளூராட்சிச் சபைகளில் 268 உள்ளூராட்சிச் சபைகள் கடந்த வியாழக்கிழமை இரவு கலைக்கப்பட்டன. பிரதேச சபைகளில் போட்டியிட விரும்பும் சுயேச்சை வேட்பாளர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை, 250 ரூபா செலுத்திப் பதிவுசெய்து கொள்ளலாம் எனத் தேர்தல் செயலகம் தெரிவிக்கின்றது.

வட மாகாணத்திலுள்ள யாழ். மாநகரசபை மற்றும் வவுனியா நகர சபை, கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாநகர சபை உட்பட ஒன்பது உள்ளூராட்சிச் சபைகளுக்கான ஆட்சிக் காலம் இன்னும் முடிவடையாத காரணத்தால் அவை கலைக்கப்படவில்லை. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்கள் அமைந்துள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் பிறிதொரு தினத்தில் நடைபெறும் எனவும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?




உங்கள் ராசிக்கு இரண்டில் குரு, நான்கில் கேது, எட்டில் சனி, பத்தில் ராகு என்கிற வகையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. குருபகவான் அதிகமான பலன்களை தரும் வகையில் உள்ளார். உங்களின் செயல்களை நிறைவேற்ற விடாமுயற்சி செய்வீர்கள். பணவரவை அதிகம் பெறுவதற்கான வாய்ப்பு உருவாகும். உங்களது கருத்துக்கள் பிறருக்கு வழிகாட்டுதல் தன்மையுடன் இருக்கும். இளைய சகோதரர்கள் வாழ்வில் உயர்ந்து உங்களுக்கும் உதவிகரமாக நடந்துகொள்வர். நன்னடத்தை குறைவானவர்களிடம் தவிர்க்க இயலாத சூழ்நிலையில் பழகும் நிலை ஏற்படும். இந்த சமயங்களில் எச்சரிக்கை மற்றும் பாதுகாப்புடன் செயற்பட வேண்டும். தாயின் உடல்நலத்திற்குத் தகுந்த சிகிச்சை தேவைப்படும். புத்திரர் ஆடம்பரச் செலவுகளைச் செய்வதில் ஆர்வம் கொள்வர். உரிய அறிவுரை சொல்வதால் நிலைமை சீரடையும். பூர்வீகச்சொத்து தொடர்பான ஆவணங்களை பிறரது பொறுப்பில் கொடுக்க கூடாது. குலதெய்வ அருள் கிடைக்கும். எதிரிகளால் இருந்த தொல்லை படிப்படியாகக் குறையும். சில நிர்ப்பந்தங்கள் காரணமாக ஏனைய செலவுகளைக் குறைத்து கடன்களை அடைப்பீர்கள். உடல்நலம் சீராக இருக்க ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுப் பழக்கம், உடற்பயிற்சி ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றுவது பலன் தரும். தம்பதியர் குடும்ப நலனை கருத்தில் கொண்டு பெரும்பாலான விடயங்களில் சமரச மனப்பாங்குடன் நடந்து கொள்வர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி திட்டமிட்டபடி நிறைவேறும். குறிப்பாக, இளம்பெண்களுக்கு தடைப்பட்ட திருமணம் நடக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெறுவதில் அதிக செலவு ஏற்படும்.

தொழிலதிபர்கள் நிறுவனம் வளர்ச்சிபெற புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவார்கள். உற்பத்தி, தரம் உயரும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். லாபம் திருப்திகரமாகும். தொழிற்சாலை, அலுவலகங்களில் பாதுகாப்பை அதிகப்படுத்துவது நல்லது. அரசு தொடர்பான அனுகூலம் கிடைக்கும். சில குறுக்கீடுகளை மதிநுட்பத்துடன் சரிசெய்வீர்கள். வியாபாரிகள் புதுமைகளைப் புகுத்தி விற்பனையை உயர்த்துவர். போட்டி குறையும். பொருள்கள் கொள்முதலில் நிதானம், பாதுகாப்பு ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் நிர்வாகத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி நற்பெயர் பெறுவர். பணி இலக்கு குறித்த காலத்தில் நிறைவேறும். பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம் பெற[illegible]. சக பணியாளர்களுடன் சமரச மனப்பாங்குடன் நடந்து கொள்வீர்கள். குடும்பச் செலவுகளை நிறைவேற்ற போதுமான வருமானம் கிடைக்கும்.

பெண்கள்:

பணிபுரியும் பெண்கள் நிலுவைப்[illegible]யை அறிந்து நிறைவேற்றுவர். நிர்வாகத்திடம் நற்பெயரும் எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கும். உடல்நல ஆரோக்கியம் பலம்பெறும். குடும்பப் பெண்கள் எதிர்கால நன்மைக்காக தன்னம்பிக்கையுடன் செயற்படுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி தழைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிர்ஷ்டகரமாக கிடைக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனை இலக்கை உயர்த்த புதிய யுக்தியுடன் செயற்படுவர். திட்டம் நிறைவேறி அதிக பணவரவைத் தரும்.

மாணவர்கள்:

மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் கொள்வது நல்லது. தேர்ச்சி சராசரி அளவில் இருக்கும். படிப்புக்கான பணவசதி கிடைப்பதில் முன்னேற்றம் உண்டு. புதியவரை நண்பராக ஏற்பதில் கூடுதல் கவனம் வேண்டும். வேலை வாய்ப்பில் குறைந்த அளவு அனுகூலம் உண்டு.

விவசாயிகள்:

விவசாயிகள் அறுவடையை அதிகரிக்க தீவிரமாகச் செயற்படுவர். மகசூல் சிறந்து சந்தையில் நல்ல விலை கிடைக்கும். கால்நடை வளர்ப்பில் அளவான முன்னேற்றம் உண்டு.




உங்கள் ராசியில் குரு, மூன்றில் கேது, ஏழில் சனி, ஒன்பதில் ராகு என்கிற வகையில் பரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. கேது தாராள நற்பலன்களை தருகிற வகையில் உள்ளார். நண்பர், நல்லவர்களின் ஆலோசனையால் உங்கள் வாழ்வில் முன்னேற திட்டமிடுவீர்கள். பிறர் மனம் அறிந்து பேசி நற்பெயரும், காரியம் நிறைவேற்றுவதுமான தன்மையைப் பெறுவீர்கள். முருகப் பெருமானின் பரிபூரணமான அருள் துணை நிற்கும். இளைய சகோதர, சகோதரிகளுக்கு திருமணம் இனிதாக நிறைவேறும். வீடு, வாகனத்தில் இப்போது பெறுகிற வசதியை முறையாப் பயன்படுத்திக் கொண்டாலே போதும். தாயின் மனத் தாக்கத்துக்கு உங்களின் கவனக்குறைவான செயல் காரணமாக இருந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். புத்திரர்கள் நல்லவிதமாக நடந்து படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பூர்வீக சொத்தில் பெறுகிற வருமானம் உயரும். உடல் நலம் சிறப்பாக இருக்க உணவு விடயத்தில் கவனம் செலுத்துங்கள். வழக்கு, விவகாரங்களில் பிடிவாத குணத்தைத் தவிர்ப்பது நல்லது. தம்பதியர் ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். நண்பர்களிடம் தகுதிக்கு மீறிய வகையிலான பணச்செலவுகளைத் தவிர்க்க வேண்டும். ஆடம்பரச் செலவைக் குறைத்துக் கொண்டால் ஏனைய செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளலாம். தந்தைவழி உறவினர்கள் பாசத்துடன் நடந்துகொள்வர். வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அதிகளவான வளர்ச்சி ஏற்படும். தொழிலதிபர்கள் தடைகளை தகர்த்தெறிந்து தாராளமான வளர்ச்சியைப் பெறுவார்கள். பணவரவு அதிகரிக்கும். புதிய ஒப்பந்தம் கிடைக்கும். பயணங்கள் ஏற்படும். பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற கூடுதல் பணம் செலவாகும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் வெளிப்படையான நிர்வாக நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். வியாபாரிகள் போட்டியை சாதுர்யத்துடன் சமாளிப்பார்கள். விற்பனை உயர்ந்து எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பொருள்கள் கொள்முதல் இடங்களில் சில சலுகைகள் கிடைக்கும். புதிய கிளை தொடங்கும் எண்ணத்தைத் தாமதிப்பது நல்லது. வெளியூர் பயணங்கள் புதிய நம்பிக்கையைப் பெற்றுத்தரும்.

தருபவர்: வித்தியா

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் சுமூக சூழ்நிலை ஏற்பட்டு பணியை திறம்பட மேற்கொள்வர். பணியிடமாற்றம் சிலருக்கு ஏற்படும். தொடர்ச்சியான உழைப்பினால் பணிகள் நேரத்திற்கு முடியும். நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகைகள் ஓரளவு கிடைக்கும். சக பணியாளர்களுடன் சுமூக நட்பு பின்பற்றுவது அவசியமாகும். குடும்பச் செலவுக்கு முக்கிய தருணங்களில் கடன் பெறுவீர்கள்.

பெண்கள்:

பணிபுரியும் பெண்கள் கவனமாகக் கடமையாற்றி பணித்திறனை உயர்த்துவர். சம்பள உயர்வு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். மனதில் இருந்த கவலை மாறும். குடும்பப் பெண்கள், கணவரின் எண்ணங்களை உணர்ந்து செயற்படுவதால் சுமூ கமான வாழ்வுமுறை ஏற்படும். குடும்பச் செலவுக்கான பணவரவு திருப்திகரமாக இருக்கும். சமையலறைப் பணிகளில் கவனம் நல்லது. சுய தொழில் புரியும் பெண்கள் கூடுதல் மூலதனத்துடன் உழைப்பையும் பெருக்கி சந்தையில் தமக் கென தனி இடம் பிடிப்பர். சக தொழில், வியாபாரம் சார்ந்தவர்களுடன் கொடுக் கல், வாங்கல் விடயங்களில் நிதான நடைமுறை பின்பற்ற வேண்டும்.

மாணவர்கள்:

மாணவர்கள் படிப்பதற்குத் தேவையான அனுகூல சூழ்நிலை அமையும். அவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேற்றம் காண்பர். சக மாணவர்களுடன் ஏற்படுகிற கருத்து வேறுபாடுகளை பெரியவிடயமாக நினைக்கக்கூடாது. படிப்பை முடித்தவர்களுக்கு வருட இறுதியில் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

விவசாயிகள்:

விவசாயிகள் தங்கள் பணிகளை உற்சாகமாக நிறைவேற்றுவார்கள். எதிர்பார்த்த மகசூல் அமைந்து நல்ல விலை கிடைக்கும். கால்நடை வளர்ப்பில் அதிக லாபம் பெறுவீர்கள். சொத்து தொடர்பான விவகாரங்களில் நிதானம் வேண்டும்.

# வெளிமாவட்டங்களுக்கான தனியார் பேருந்து சேவைகளின் நேரஅட்டவணை வெளியானது

யாழ்ப்பாணம், ஜன.09

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு மேற்கொள்ளப்படும் தனியார் பேருந்து சேவைகளின் நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வெளியிட்டுள்ள நேர அட்டவணை விவரம் வருமாறு:-

கிளிநொச்சி

6.00 -6.30 a.m. கிளிநொச்சி
6.30 - 7.00 a.m. கிளிநொச்சி
7.35 -8.05 a.m. கிளிநொச்சி
8.45 -9.15 a.m. கிளிநொச்சி
9.15 -9.45 a.m. கிளிநொச்சி
9.45 -10.15 a.m. கண்டாவளை
10.15 -10.45 a.m. இராமநாதபுரம்
11.00 -11.25 a.m. கிளிநொச்சி
11.25 -11.50 a.m. கிளிநொச்சி
11.50 -12.15 p.m. கிளிநொச்சி
12.45 -01.10 p.m. கிளிநொச்சி
01.35 -02.00 p.m. கிளிநொச்சி
02.40 -03.10 p.m. விசுவமடு
03.10 -03.40 p.m. கிளிநொச்சி
03.40 -04.10 p.m. கிளிநொச்சி
04.10 -04.40 p.m. கிளிநொச்சி

வலைப்பாடு

12.15 - 12.45 p.m. ஸ்கந்தபுரம் ஊடாக

முல்லைத்தீவு

5.40 - 6.20 a.m. முல்லைத்தீவு
7.00 - 7.45 a.m. முல்லைத்தீவு
8.00 - 8.45 a.m. முல்லைத்தீவு
9.35 - 10.20 a.m. முல்லைத்தீவு
12.30 - 01.15 p.m. முல்லைத்தீவு
01.30 - 02.15 p.m. முல்லைத்தீவு
02.30 - 03.15 p.m. முல்லைத்தீவு
03.30 - 04.15 p.m. முல்லைத்தீவு

மல்லாவி

05.00 - 05.40 a.m. , 07.10 - 07.40 a.m.
08.45- 09.15 a.m.., 11.00 - 11.30 p.m.,
01.30 - 01.30 p.m., 02.00 - 02.30 p.m.,
03.00 - 03.30 p.m 03.55 - 04.25 p.m.

முழங்காவில்

05.00 - 06.00 a.m. 08.05 - 08.40 a.m.
01.00 - 01.40 a.m.02.00 - 02.40 a.m.

மன்னார்

05.30 - 06.15 a.m. வவுனியா ஊடாக
06.30 - 07.25 a.m. வவுனியா ஊடாக
07.30 - 08.35 a.m. முழங்காவில் ஊடாக
09.35-10.30 a.m. முழங்காவில் ஊடாக
08.40 - 09.35 a.m. முழங்காவில் ஊடாக
11.00 - 11.50 a.m. வவுனியா ஊடாக
11.50 - 12.45 p.m. வவுனியா ஊடாக
12.45 - 02.05 p.m. வவுனியா ஊடாக

வவுனியா

05.30 - 06.05 a.m. யாழ். பேருந்துகள்
06.15 - 06.45 a.m. யாழ். பேருந்துகள்
06.45 - 07.15 a.m. யாழ். பேருந்துகள்
07.25 - 07.55 a.m. யாழ். பேருந்துகள்
07.55 - 08.25 a.m. யாழ். பேருந்துகள்
08.35 - 09.05 a.m. யாழ். பேருந்துகள்
09.05 - 09.35 a.m. யாழ். பேருந்துகள்
09.35 - 10.05 a.m. யாழ். பேருந்துகள்
10.05 - 10.35 a.m. யாழ். பேருந்துகள்
10.35 - 11.05 a.m. யாழ். பேருந்துகள்
11.05 - 11.35 a.m. யாழ். பேருந்துகள்
11.35 - 12.05 p.m. யாழ். பேருந்துகள்
12.00-12.35 p.m.வவுனியா பேருந்துகள்
12.45-01.20 p.m.வவுனியா பேருந்துகள்
01.20-01.55 p.m.வவுனியா பேருந் துகள்
02.05-02.40p.m.வவுனியா பேருந்துகள்
02.40-03.15 p.m.வவுனியா பேருந்துகள்
03.15-03.50 p.m.வவுனியா பேருந்துகள்
03.50-04.25 p.m.வவுனியா பேருந்துகள்

ஆழியவளை

12.00-12.40 p.m. ஆழியவளை

மட்டக்களப்பு

06.00-07.15 a.m மட்டக்களப்பு
02.45 -03.30 p.m மட்டக்களப்பு
0430-05.15 p.m மட்டக்களப்பு

திருகோணமலை

07.15-08.10 a.m திருகோணமலை
08.10-09.00 a.m திருகோணமலை
10.30-11.15 a.m திருகோணமலை
12.30-01.15 p.m திருகோணமலை

அம்பாறை (அக்கரைப்பற்று)

09.15-10.30 a.m (Suspended)

புத்தளம்

02.30-03.15 p.m (Suspended)

பதுளை

05.00-06.00 p.m
06.00-07.00 p.m (Suspended)

கண்டி

05.30-06.30 a.m.
05.00-05.50 p.m

தியத்தலாவ

07.00 p.m -08.00 p.m

தங்காலை

05.45 p.m -06.40 p.m

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை பாதிப்பு நோயின் அறிகுறிகள்

பார்கின்ஸலிஸம் என்ற மூளை பாதிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் செயற்பாடுகள் மிகவும் ஆமை வேகத்தில் இருக்கும். இந்த நோய்க்கு ஆயுர்வேத சிகிச்சைகள் உள்ளனவா? இந்த நோய் தாக்குவதற்கான காரணங்கள் எவை?

மனிதர்களுடைய மூளைப் பகுதியை பிராணன் என்ற வாயுவும், தர்ப்பகம் என்ற கபமும் தம் செயல்களின் மூலம் அறிவு, புலன்கள், நாடிகள் எனப்படும் நரம்பு மண்டலங்கள் இவற்றை நிலைநிறுத்தச் செய்கின்றன.

இந்த இரு தோசங்களின் சீற்றம், மூளையைச் சார்ந்த நரம்பு மண்டலங்களையும் அங்கிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் திரவக் கசிவுகளையும் பாதிப்படையும் வகையில் தாக்குவதால், உடல் அசைவுகள் மந்தமாகுதல், விறைப்பு, தன்னிச்சையாக கைகள் நடுங்குதல், கைகளில் வலுவற்ற தன்மை போன்ற அறிகுறிகள் தென்படும். மேலும் முகத்தைச் சார்ந்த தசைகள் அசைவற்று, கண்களை மூட முடியாமல், வாயிலிருந்து எச்சில் வடிந்து கொண்டிருக்கும் உபாதைகளும் ஏற்படத் தொடங்கும். நடக்கும்போது உடல் முன்னோக்கி வளைவதும், குறுகிய தள்ளாட்டத்துடன் கூடிய தடுமாற்றங்களும் ஏற்படும்.

சிலருக்குத் தரையில் ஒரு குச்சி அல்லது கம்பு ஒன்றைப் போட்டுத் தாண்டச் சொன்னால், அதைத் தாண்டியவுடன் நடை சீராக, தடுமாற்றம் குறைந்து சிறிது தூரம் வேகமாகவும் நடப்பார்கள். வாதத்திற்கும் கபத்திற்கும் சமமான குணம் சீதம்எனப்படும் குளிர்ச்சி மட்டும்தான்.

ஏனைய குணங்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று சேராதவை. அதனால் குளிர்ச்சி எனும் குணத்தைக் கொண்ட உணவு வகைகளாலும், செயல்களாலும் பருவ காலத்தினாலும் இந்த நோயின் தாக்கம் எளிதில் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org